விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

...ங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 30 சனிக்கிழமை (17.10.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 302

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# ஜனாதிபதியின் பதிலையே எதிர்பார்த்து போராடுகிறோம்

## உடல் தளர்விலும் கைதிகள் உறுதியாக தெரிவிப்பு

(கொழும்பு) எமது விடுதலை தொடர்பில் இனி யாருக்கும் காலஅவகாசத்தை வழங்கி ஏமாறா முடியாது என தெரிவித்துள்ள உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், பொது மன்னிப்பின் அடிப்படையிலான ஜனாதிபதியின் வெளிப்படையான பதிலை எதிர்பார்த்தே நாம் போராட்டத்தை முன்னெடுத்து வருவதாக உடல் தளர்வடைந்த நிலையிலும் உறுதியாக தெரிவித்துள்ளனர். (23ஆம் பக்கம் பார்க்க)

## ...ராணுவச் சிப்பாய் ...றக்கத்தில் மரணம்

(கரணவாய்)

உறங்கச் சென்ற இராணுவச் ...பாய் இறந்த நிலையில் நேற் ...க் காலை 6 மணியளவில் மீட் ...பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை ஊரிக்காடு ...தியில் உள்ள இராணுவ ...காமில் உள்ள இராணுவச் சிப ...ய் ஒருவரே இவ்வாறு மீட்கப்பட் ...ள்ளார். 24 ஆம் பக்கம் பார்க்க....

## ...ஆணின் சடலம் மன்னாரில் மீட்பு

(மன்னார்)

மன்னார்- மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இலுப்பைக்கடவை ஏ-32 வீதியில் உள்ள பேருந்து தரிப்பிடத்தினுள் இருந்து ஆணின் சடலம் நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் இரா சதுரை நாகேஸ்வரன் என அடை ...ாளம் 24 ஆம் பக்கம் பார்க்க....

## ...நா. இலங். தூதரக ...ஆலோசகராக உபய

(கொழும்பு)

நியூயோர்க்கில் உள்ள ஐ.நாவுக் ...ன இலங்கை தூதரகத்தின் ...த்துறை ஆலோசகராக மேஜர் ஜெனரல் உபய மெடவெல நிய...க்கப்பட்டுள்ளார்.

படைத்தரப்பின் மேற்குப் படைகளின் தலைமையக தளபதியாக தற்போது பணியாற்றி வரும் மேஜர் ஜெனரல் உபய மெடவெல, இம்மாத இறுதியில் இந்தப் பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 23 ஆம் பக்கம் பார்க்க....

## தந்தையை சிறையில் அடைத்ததால் மகனின் மனநிலை பாதிப்பு !

### ஏக்கத்துடன் தாய் கதறியழுகை



(யாழ்ப்பாணம்)


தந்தையை சிறையில் அடைத்தமையினால் மகன் மனநிலை பாதிக்கப்பட்டு வருவதாக தாயொருவர் கதறியழுதுள்ளார்.

எல்லோரும் சிறுவர்தினம் கொண்டாடுகின்றனர். ஆனால் எங்களது பிள்ளைகள் 24 ஆம் பக்கம் பார்க்க....

## ரவிராஜ் படுகொலை; கருணாவிடம் விசாரணை!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் படுகொலை தொடர்பில் முன்னாள் பிரதி அமைச்சர் கருணா எனப்



படும் விநாயகமூர்த்தி முரளிதரனிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளனர்.

ரவிராஜின் படுகொலை தொடர்பாக கருணா அறிந்திருந்தார் என்று கிடைத்த 24 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவின் ஆட்சேபணைகள் ஆணைக்குழுவினால் நிராகரிப்பு

### நேரில் அழைத்து விசாரணை தொடரும்

(கொழும்பு)

இலங்கையில் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு ஜனாதிபதி



ஆணைக்குழுவுக்கு அதிகாரங்கள் இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி 24 ஆம் பக்கம் பார்க்க....

# கைதிகளை 7-ம் திகதிக்குள் விடுவிக்க ஜனாதிபதி உறுதி

### தன்னிடம் தெரிவித்ததாக சம்பந்தன் அறிவிப்பு



(கொழும்பு)

சிறைச் சாலையில் உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ்க் கைதிகளில் கணிசமானவர்களை அடுத்த மாதம் 7-ம் திகதிக்குள் விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்தார்.

நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவுடன் 23 ஆம் பக்கம் பார்க்க....

## கைதிகள் பலர் வைத்தியசாலையில்;

### பெண் கைதி ஒருவருக்கு அதிக பாதிப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் முன்னெடுத்துள்ள சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தினால் சுகவீனமுற்ற 22 கைதிகள் தற்போது சிறைச்சாலை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரோஹன புஷ்ப குமார தெரிவித்தார்.

குடும்பத்தாருடன் சேர்ந்து வாழும் சந்தர்ப்பத்தைத் தமக்குப் பெற்றுத்தருமாறு இவர்கள் எழுத்து மூல கோரிக்கையை முன்வைத்துள்ளதாக அவர் கூறினார்.

14 சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொண்டு வரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் உடல் நிலை பாதி 23 ஆம் பக்கம் பார்க்க....

### ...குளிர்பானம் வாங்குவது போல் நடித்து

## ...பெண்ணின் தாலிக்கொடி ...ட்டபகலில் அபகரிப்பு

(...ப்பாணம்)

கடையொன்றில் குளிர்பானம் வாங்குவது போல் பாசாங்கு செய்து அக்கடைக்கார பெண்ணின் தாலிக கொடியை பட்டப்பகலில் அறுத்து ...ன்ற சம்பவம் ஒன்று இடம்பெற்...ள்ளது. சங்கானை விக்னேஸ் ...வீதியில் உள்ள கடையொன்றில நேற்று 4 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஜெகநாதன் சுதாயினி என்பவரது 13 பவுண் மதிக்கத்தக்க தாலிக் கொடியும் ஒரு தொகை பணமுமே பறிகொடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற நேரம் இரண்டு 23 ஆம் பக்கம் பார்க்க....

## எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலை முள்ளி பகுதி ... வர்களால் இரு மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு பெண் 23 ஆம் பக்கம் பார்க்க....

## வயல் கிணற்றில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மூளாய் சுழிபுரம் பகுதியிலுள்ள வயலில், புல்லு வெட்டுவதற்குச் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை சென்றவர், வயல் கிணற்றிலிருந்து, நேற்று வெள்ளிக்கிழமை காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.


அதேயிடத்தைச் சேர்ந்த ஆழ்வார் பால 23 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...டுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எம்மால் உருவான நல்லாட்சியில் எம்மவர்க்கே விடிவு இல்லையா?

## கைதிகளின் உறவுகள் யாழில் குமுறல்



(கொழும்பு)

தம்மை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்க கோரி தமிழ் அரசியல் கைதிகளினால் முன்னெடுக்கப்பட்டு வரும் உண்ணாவிரத போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் நேற்றைய தினம் மாபெரும் ஒருநாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று யாழ்.முனியப்பர் ஆலயம் முன்பாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. காலை ஏழு மணிக்கு ஆரம்பமாகிய இப் போராட்டம் மாலை வரை நடைபெற்றது.

இப்போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த காணமல் போன மற்றும் அரசியல் கைதிகளின் உறவுகள், பிள்ளைகளின் கதறலால் யாழ். நகரமே நேற்றைய தினம் சோகத்தில் ஆழ்ந்தது. இவர்களின் கண்ணீர் பார்ப்போர் மனதை கனக்க வைத்தது.

எவ்வித விசாரணைகளும் இன்றி நீண்ட காலங்களாக சிறைகளில் தமிழ் இளைஞர் யுவதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்த அரசின் காலத்தில் இக் கைதிகள் குறித்து எவ்வித கரிசனையும் காட்டாத நிலை தற்போதும் இந்த அரசின் காலத்திலும் தொடர்ந்து கொண்டுதான் உள்ளன. நல்லாட்சி என்று சொல்பவர்கள் எமது இளைஞர்களை சிறைகளில் தடுத்து வைத்திருப்பதா? நல்லாட்சிக் குரிய இலட்சணம். எம்மால் உருவாக்கப்பட்ட நல்லாட்சியில் எம்மவர்க்கே விடிவில்லையா?

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஒருவேளை குற்றம் இழைத்திருந்தாலும இவ்வளவு காலமும் அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறைத்தண்டனையை அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையாக கருதி அவர்களை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யுமாறு மேற்படி போராட்ட ஏற்பாட்டு குழுவினர் போராட்டத்தின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவத்தனர்.

மேலும் இப்போராட்டத்தில் அரசியல் கைதிகளின் உறவுகள் மற்றும் காணாமல் போனோரின் உறவுகள் என நூற்றுக்கணக்னோர் கலந்து கொண்டு தமது உறவுகளை விடுவிக்குமாறு கதறியழுதனர். இதன்போது அரசியல் கைதிகள், காணாமல் போனோரின பிள்ளைகள், மாகாணசபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் பிரஜைகள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் உண்ணாவிரத போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் மற்றும் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்புக்கள் மாணவ அமைப்புக்கள், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், தமிழ் சிவில் சமூக அமையம், ஈழமக்கள் ஜனநாயக கட்சி, இந்து, கிறிஸ்தவ அமைப்புக்கள் என பல அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்து அதன் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

மேற்படி போராட்டத்தினை மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை மற்றும் சின்மயா மிஷனின் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள் ஆகியோர் தண்ணீர் கொடுத்து பிற்பகல் நான்கு மணியளவில் முடித்து வைத்தனர். இறுதியில் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்று அரசியல் கைதிகளின் உறவினர்களால் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசனிடம் கையளிக்கப்பட்டிருந்தது. (செ-4)

## கிரிக்கெட் போட்டி; இடை நிறுத்தம்

கனகபுரம் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் மாவட்டங்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இன்றைய மற்றும் நாளைய ஆட்டங்கள் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளதாக விளையாட்டுக்கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை 10 ஆம் திகதி அன்று ஆரம்பமாகி கனகபுரம் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் மாவட்டங்களுக்கிடையிலான மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியானது விடுதலைகோரி உண்ணாவிரதமிருக்கும் கைதிகளின் நிலைப்பாட்டிற்கு வலுச்சேர்க்கும் முகமாக இன்றும் நாளையும் நடைபெறவிருக்கும மென்பந்துச் சுற்றுப்போட்டியானது இடைநிறுத்தப்பட்டுள்ளது. மேற்படி விடயம் தொடர்பாக கனகபுரம் விளையாட்டுக்கழகத்தினர் தெரிவித்ததாவது,

தமிழ் அரசியல் கைதிகள் கடந்த திங்கள் அன்று தமது விடுதலையைக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்கள். அவர்களின் விடுதலை கோரி தமிழ் பிரதேசங்கள் எங்கும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் நடந்த வண்ணம் உள்ளன. இதன் முகமாக நாங்கள் இன்று சனிக்கிழமை இடம பெறவிருந்த தமிழ் மாவட்டங்களுக்கிடையிலான மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியினை தற்காலிகமாக இன்றும் நாளையும் இடைநிறுத்துவதோடு தங்களின் விடுதலைக் கோரிக்கையை முன்வைத்து சிறைச்சாலைகளில் உண்ணாவிரதமிருக்கும் அந்த அரசியல் கைதிகளுக்காக ஆதரவு அளிப்பதாகத் தெரிவிக்கின்றோம் என கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக்கழக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். மேலும் இச் சுற்றுப் போட்டியானது எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை சகல விளையாட்டுக்கழகங்களுக்கும் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்து பெறுகை

(யாழ்ப்பாணம்)

சைவ மகாசபையினரின் ஏற்பாட்டில் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மகஜர் ஒன்றினை கையளிப்பதற்காக சர்வமத தலைவர்களின் கையெழுத்துக்களை பெறும் நடவடிக்கை இன்று நல்லூர் அறுபத்தி மூவர் மண்டபத்தில ஆரம்பிக்கப்படவுள்ளது

இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில நீண்டகாலமாக அரசியல் கைதிகளாக இருப்பவர்களை விரைவாக விடுதலை செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி நாடளாவியரீதியில் உள்ள சர்வமத தலைவர்கள் அனைவரினதும் கையெழுத்துக்களை பெற்று அடுத்த வாரமளவில் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் மகஜர் ஒன்றினை கையளிக்கவுள்ளனர்

அத்துடன் இன்றைய தினம் நல்லூர் முருகன் ஆலய முன்றலில் உள்ள அறுபத்தி மூவர மண்டபத்தில் விசேட பிரார்த்தனை ஒன்றும் நடைபெறவுள்ளது. இதில் அனைவரும் கலந்து கொண்டு அரசியல் கைதிகளுக்காக பிரார்த்திக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (செ-9)

## பாடசாலை மாணவி உயிரிழப்பு!

பாடசாலை மாணவியொருவர் மயக்கமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று காலை 9.45 மணியளவில் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

கிளி.பாரதி வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி கற்கும் ஜெயசிங்கம் துஸ்யந்தினி (வயது - 14)என்ற மாணவி வகுப்பறையில் திடீரென மயக்கமடைந்துள்ளார்.

இதனையடுத்து குறித்த மாணவி கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலன் அளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

பிரஸ்தாப மாணவி ஏற்கெனவே இதய நோயால் பாதிக்கப்பட்டவர் என்றும் இவர் இந் நோய் தொடர்பாக சிகிச்சை பெற்று வந்துள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மாணவியின் தந்தை 2011-ம் ஆண்டு இடி தாக்கி உயிரிழந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-12-277)


## துயர் பகிர்கின்றோம்

அமரர் நடராசா செல்வராசா



எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் திருமதி திகழ்ஜோதி பிரபானந்தன் ஆசிரியை அவர்களின் அன்புத் தந்தை

அமரர் நடராசா செல்வராசா

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/இணுவில் இந்துக் கல்லூரி

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## மரண அறிவித்தல்

### இளையதம்பி நற்குணம்



கணுக்கேணி கிழக்கு, முள்ளியவளையை பிறப்பிடமாகவும் 7ம் வட்டாரம் சிவநகர் புதுக்குடியிருப்பை நிரந்தர வதிவிடமாகவும், இல.357 ரகுபாக்கம் வீதி வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட **இளையதம்பி நற்குணம்** 15-10-2015 அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்ற கல்லடிக்குடா இளையதம்பி -தெய்வானை ஆகியோரின் அன்பு மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலம்சென்ற நடராசா, சுபத்திரா, தங்கராசா, காலம்சென்ற மங்கையற்கரசி ஆகியோரின் சகோதரனும் வீரபாகு லட்சுமி ஆகியோரின் மைத்துனரும், கமலநாதன் (Holland), யோகரட்ணம் (கிராமசேவையாளர்), குலதவராணி, மகேஸ்வரி, காலம்சென்ற பத்மநாயகி, விவேகானந்தராசா (London), காலம்சென்ற சூரியபாலன், உதயராணி, சர்வேஸ்வரன் (அதிபர்), ஜெகதீஸ்வரி (London), சாந்தகிரிநாதன் (ஆசிரியர்)ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி (Holland), லலிதா(ஆசிரியர்), காலம்சென்ற சிவராஜா, காலம்சென்ற கந்தசாமி, சுசீலா (London), நித்தியானந்தராசா, காலம்சென்ற தங்கவேலாயுதம், சண்முகலிங்கம் (London), சுகந்தினி (ISA,ஆசிரிய ஆலோசகர்), அமுதினி (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரதிகலா, யசிந்தன், விஜிந்தன், அஜந்தன், சயந்தன், மானுஷா, லக்ஷிதன், சோபிகா, தர்சிகா, யஷ்மிகா, கீதாஞ்சலி, சுபோஜினி, விஜிதன், சுகர்தன், பிரதாபன், கிருபாகரன்(அமரர்), நிதர்சன், பிரசன்னா, தீபா, தனு, திவ்யா, நிஷ்யந்தி, நிஷ்யந்தன், தஞ்சுகன் (அமரர்), வானுசன், ஜனர்சன்(அமரர்), சரண்ஷிகா, நிக்ஷிகா, கானுஜா, ரிஷபன், அபிகைல், சிபோரா, சேபா, சாத்விகா, கவினுகா, சபிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், அட்ஷயன், திஸ்யன், யஹிசா, யனர்சா, யஸ்வனா, அபினுஷ், அஜான், ரித்திக், ஜியன், அரியானா, அஸ்சன், அஹிசன், அபர்சன், விமுஸ், ஷ்ஷானா, விமூசனா, ஜஸ்னா, சாரங்கி, டினோஜி, அஜன்டிகா, மிதுஷன், கஜானன், டினோஜா, ஜனுசன், கேசிகா, நமிதா ஆகியோரின் அன்பு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18-10-2015 அன்று (ஞாயிற்றுக்கிழமை) 7ம் வட்டாரம், சிவநகர், புதுக்குடியிருப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பி.பகல் 2.00 மணியளவில் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(C-2483)

தகவல் : குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன் உன் அடிமையா? அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்!





(யாழ்ப்பாணம்)

**அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்!, தமிழன் உன் அடிமையா?என்ற கோசத்துடன் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் போராட்டமொன்றினை நேற்றைய தினம் முன்னெடுத்திருந்தனர்.**

தம்மைப் பொது மன்னிப்பில் விடுதலை செய்யக் கோரி தமிழ் அரசியல் கைதிகளினால் சிறைச்சாலைகளில் முன்னெடுக்கப்பட்டுவரும் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், உடனடியாக அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரியுமே மேற்படி போராட்டம் மாணவர்களினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக வளாகத்திலுள்ள பரமேஸ்வரன் ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டு ஊர்வலமாக பல்கலைக்கழக பிரதான வாயிலை வந்தடைந்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழர்களின் வாக்கை பெற்ற நீர் தமிழர்களை வாழ வைக்க மறந்ததேன்?, தமிழர்களை நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழவிடு, அப்பாவித் தமிழர்களை பழிவாங்காதே, தமிழர்கள் அடிமைகள் அல்ல. சுதந்திரமாக வாழப் பிறந்தவர்கள், தமிழ் அரசியல் வாதிகளே மௌனங்களைக் கலையுங்கள், தமிழ் கைதிகளை துன்புறுத்தியது போதும் உடனடியாக விடுதலை செய் என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நாங்கள் உங்களின் அடிமைகளா? நல்லாட்சி என்று கூறுபவர்களே பதில் கூறு, எங்கள் அண்ணன், தந்தையை சிறைபிடிக்க நீ யார்? விடுதலை செய் உடனடியாக விடுதலை செய் என ஆவேசமாக கோசங்களையும் எழுப்பியிருந்தனர். யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் மாணவர் ஒன்றியங்களினால் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டத்தில் 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தின் முடிவில் கருத்து தெரிவித்த மாணவ மற்றும் ஆசிரிய பிரதிநிதிகள் அரசியல் கைதிகளினால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நியாயமானதே. இவர்களது போராட்டத்திற்கு யாழ். பல்கலைக்கழகம் என்றும் ஆதரவு வழங்கும்.

சிறைகளில் அடைபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பிள்ளைகள் பாடசாலை செல்ல முடியாத அவல நிலையே காணப்படுகின்றது.

நல்லாட்சி என தம்மை வர்ணித்துக்கொள்பவர்கள் இந்த பிள்ளைகளின் அவல வாழ்வினையும் கரிசனை கொண்டு அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என தெரிவித்தனர். (இ-4)

## லலித், சுசில் சாட்சி

(கொழும்பு)

பாரிய மோசடி, ஊழல், அரச வளங்கள் மற்றும் அதிகார சிறப்புரிமைகள் துஷ்பிரயோகம் ஆகியவற்றை புலனாய்வு செய்வதற்கும் ஆராய்வதற்குமான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் PRECIFAC (பி.ஆர்.இ.சி.ஐ.எப்.ஏ.சி) மூவர் சாட்சியமளித்துள்ளனர். முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் செயலாளருமான சுசில் பிரேமஜயந்த மற்றும் சுயாதீன ரூபவாஹினியின் கணக்காளர் ஆகிய மூவருமே சாட்சியமளித்துள்ளனர். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது சுயாதீன தொலைக் காட்சியில் தேர்தலுக்காக விளம்பரப்படுத்தப்பட்ட விளம்பரங்களுக்கு கட்டணம் செலுத்தாமல் நிறுவனத்துக்கு நட்டம் ஏற்படுத்தியமை, விளம்பரப்படுத்தவிருந்த எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் விளம்பரங்களை, குறிப்பிட்ட அளவுக்கு குறைந்தளவில் பிரசாரப்படுத்தியமையால் அந்த நிறுவனத்துக்கு கிடைக்கவேண்டிய நிதி இல்லாமல் செய்யப்பட்டது தொடர்பிலேயே இவர்கள் வாக்குமூலமளித்துள்ளனர். இதன்போது முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷவும் பிரசன்னமாய் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## சித்தீக் மீண்டும் விளக்கமறியலில்

மாபெரும் போதை பொருள் வர்த்தகரான மொஹமட் சித்தீக் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலப்பிட்டிய இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். பாகிஸ்தானில் வைத்து கைது செய்யப்பட்ட இவர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு பணமோசடி சம்பந்தமான விசாரணைகள் இவரிடம் மேற்கொள்ளப்படுவதாக கடந்த 2 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றுக்குத் தெரிவித்திருந்தனர். அதன்படி சந்தேக நபரான சித்தீக் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். நேற்று மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்தே அவர் மீண்டும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-7-10)

**கண்ணீருடன் உண்ணாவிரதம்**
(07 ஆம் பக்கம் பார்க்க...)

**1,33,867 வெடிபொருட்கள் அகற்றம்**
(08 ஆம் பக்கம் பார்க்க...)

**இந்தியா-பாக். வாக்குவாதம்**
ஐ.நா. அமர்வில் (13 ஆம் பக்கம் பார்க்க...)

**காலம் நெருங்கிவிட்டது**
மஹிந்த அறிவிப்பு (15 ஆம் பக்கம் பார்க்க...)

**யார் இந்த அரசியல் கைதிகள்**
(18 ஆம் பக்கம் பார்க்க...)

## விமானங்களின் பாகங்களைப் பொருத்தும் தொழிற்சாலை இலங்கையில் நிறுவ திட்டம்

இலங்கையில் விமானங்களின் பாகங்களைப் பொருத்தும் பாரிய தொழிற்சாலையொன்றை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கையின் முதலாவது உள்நாட்டுக்கார் தயாரிப்புக் கம்பனியான மைக்ரோ நிறுவனம் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளது.

உலகின் பிரபலமான விமான தயாரிப்புக் கம்பனியின் பாகங்களைக் கொண்டு வந்து அவற்றைப் பொருத்தும் விமானங்களாக வடிவமைக்கும் பணியை இந்த நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது. (இ-7-10)

## கடும் நிபந்தனைகளுடன் இளைஞர்களுக்கு பிணை

வீதியால் சென்ற பெண்ணுடன் சேட்டை புரிந்ததாக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்த 3 பேரை ஒரு மாதத்தின் பின்னர் கடும் நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் நேற்று முன்தினம் அனுமதித்துள்ளார்.

யாழ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மானிப்பாய் வீதியால் சென்ற இளம் பெண்ணுடன் தொடர்ச்சியாக சேட்டை புரிந்து வந்த 3 இளைஞர்களை கடந்த செப்டெம்பர் மாதம் யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஒருமாத காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்களை கடும் எச்சரிக்கை செய்து ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய 2 ஆட்பிணையில் செல்ல நேற்றைய தினம் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-9)

## இந்தியா ஊடாக ஆஸி. செல்லும் சட்டவிரோத குடியேற்றவாசிகள்

யுத்தம் மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் தமது பொருளாதார நன்மைகளை கருத்திற் கொண்டு, ஆபத்தான பயணங்கள் மூலம் ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் கோரி வருவதாக அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 2028 புகலிடக் கோரிக்கையாளர்களை அவுஸ்திரேலிய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இதில் 171 பேர் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் எனவும், அதில் ஒன்பது பெண்களும் ஒன்பது சிறுவர்களும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பல புகலிடக் கோரிக்கையாளர்கள் இந்திய துணைக் கண்டத்தின் வழியாக அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோருவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் ஆபத்தான கடல் வழிப் பயணத்தில் ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக, தென்னிந்தியாவுக்கான துணைத் தூதர் Jon Bonnar இந்திய ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-7-10)

## மாணவி மரணம்

கட்டுகஸ்தொட்ட, நித்யவல பிரதேசத்தில் பாதை ஓரமாக சென்றுகொண்டிருந்த பாடசாலை மாணவி ஒருவர் பாதை அருகில் இருந்த ஓடையில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 5.35 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஓடையில் விழுந்த மாணவி நீரில் மூழ்கி ஆபத்தான நிலையில் கட்டுகஸ்தொட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். கட்டுகஸ்தொட்ட, மடவளை பிரதேசத்தை சேர்ந்த 17 வயதுடைய மாணவி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7-10)

## பிரகீத் எக்னெலிகொட விவகாரம் பொலிஸ்மா அதிபர் நீதிமன்றில்

(கொழும்பு)

நீதிமன்றில் முன்னிலையாகும்படி அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றவிசாரணை திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட தரப்பினர் மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று முன்னிலையாகினர்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போன சம்பவம் தொடர்பில் இரகசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நான்கு இராணுவ வீரர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட நான்கு மேன்முறையீட்டு மனுக்கள் நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதே இவர்கள் முன்னிலையாகினர்.

இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் நவம்பர் மாதம் 19 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அன்றைய தினம் தமது பக்க அடிப்படை வாதங்களை முன்வைக்க முடியும் என குறித்த தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-7-10)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின்விநியோகங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை யாழ்ப்பாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கையின் மின்சாரசபை அறிவித்துள்ளது.

அந்தவகையில் சனிக்கிழமை யாழ். பிரதேசத்தில் மயிலங்காடு, குப்பிளான், திருநெல்வேலி ஆடியபாதம் வீதி, பலாலி வீதி, பனிக்கர்லேன், கலாசாலை வீதி, பாற்பண்ணை, அரசடி அம்மன் வீதி, நாவலடி லேன், இராமலிங்கம் சந்தியிலிருந்து திருநெல்வேலிச் சந்தி வரை, சாவகச்சேரி, கல்வயல், நுணாவில், கைதடி வடக்கு, நாவற்குழி, கேரதீவு வீதி, தனங்கிளப்பு, தச்சன்தோப்பு, மறவன்புலோ, கேரதீவு துறைமுகம், சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை, சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தொகுதி, நாவற்குழி Sankan Contructors பிறைவேற் லிமிற்றெட் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அணி ஆதிக்கம்

# இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க போராடுகின்றது மேற்கிந்திய தீவுகள்




இலங்கை அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் மேற்கிந்திய தீவுகள் அணி 251 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இலங்கை- மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் நடந்து வருகிறது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. முதல் நாள் ஆட்டநேர முடிவில் இலங்கை 2 விக்கெட்டுக்கு 250 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

கருணாரத்ன 135 ஓட்டங்களுடனும், சண்டிமல் 72 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

2வது நாள் ஆட்டத்தில் தொடர்ந்து நிதானமாக ஆடிய சண்டிமல் சதம் அடித்தார். தொடக்க வீரரான திமுத் கருணாரத்ன 186 ஓட்டங்களில் ஆட்டமிழந்து இரட்டை சதத்தை தவறவிட்டார்.

இதைத் தொடர்ந்து சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த சண்டிமல் 151 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அணித்தலைவர் மத்யூஸ் தன் பங்கிற்கு 48 ஓட்டங்கள் எடுத்தார். அறிமுக வீரரான சிறிவர்த்தன (1) ஏமாற்றினார். குஷால் பெரேரா (23), தம்மிக்க பிரசாத் (13) நிலைக்கவில்லை.

ஹேரத் (0), நுவான் பிரதீப் (0) டக்-அவுட் ஆக, இலங்கை முதல் இன்னிங்சில் 484 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது.

தரிந்து கவுஷால் (9) ஆட்டமிழக்காமல் இருந்தார். மேற்கிந்திய தீவுகள் சார்பில், பிஷ் 4 விக்கெட்டை கைப்பற்றினார்.

பின்னர் மேற்கிந்திய தீவுகள் அணி தனது முதல் இன்னிங்சை தொடங்கியது. தொடக்க வீரர்களான பிராத்வெய்ட் (19), சாய் கோப் (23) ஹேரத் சுழலில் வீழ்ந்தனர்.

2வது நாள் ஆட்டநேர முடிவில் மேற்கிந்திய தீவுகள் அணி 2 விக்கெட்டுக்கு 66 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சாமுவேல்ஸ் (7), டரன் பிராவோ (15) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


இந்நிலையில் நேற்று தொடங்கிய 3வது நாள் ஆட்டத்தில் சாமுவேல்ஸ், பிளாக்வூட் தலா 11 ஓட்டங்களில் வெளியேறினர்.

251 ஓட்டங்களுக்கு சுருண்டது மேற்கிந்திய தீவுகள் அணி. பிஷ் (23) ஆட்டமிழக்காமல இருந்தார்.

சுழலில் மிரட்டிய ஹேரத் 6 விக்கெட்டுகளை அள்ளினார். பிரசாத் 2, பிரதீப், கவுஷால் தலா ஒரு விக்கெட்டுகளை வீழ்த்தினர். பலோ- ஒன் வாங்கிய மேற்கிந்திய தீவுகள் தொடர்ந்து 2-வது இன்னிங்சை விளையாடியது.

நேற்றைய 3-ம் நாள் ஆட்ட நேரமுடிவில் மேற்கிந்திய தீவுகள் அணி 2 விக்கெட் இழப்பிற்கு 67 ஓட்டங்கள் எடுத்துள்ளது.


களத்தில் பிராவோ 20 ஓட்டங்களுடனும்




டரன் பிராவோ (50) அரைசதம் கடந்தார். அணித்தலைவர் ஹோல்டர் (19), ராம்டீன் (23) நிலைக்கவில்லை.

இதன் பிறகு ரோச் (22), டெய்லர் (31), கப்ரில் (0) என வரிசையாக ஆட்டமிழக்க, பிஷ் 06 ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க மேற்கிந்திய தீவுகளுக்கு இன்னும் 166 ஓட்டங்கள் தேவை. போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# அலஸ்ரயர் குக் இரட்டை சதம் இங்கிலாந்து ஆதிக்கம்



இங்கிலாந்து அணித் தலைவர் குக்கின் அபாரமான இரட்டை சதத்தின் உதவியுடன் பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்டின் நேற்றைய 4-ம் ஆட்ட நேரமுடிவில இங்கிலாந்து அணிவலுவான நிலையில்உள்ளது.

பாகிஸ்தான்- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி அபுதாபியில் நடைபெற்று வருகிறது. கடந்த 13-ம் திகதி தொடங்கிய இந்த போட்டியில் பாகிஸ்தான் முதலில் பட்டிங் செய்தது. அந்த அணியின் சொகைப் மலிக் (245) இரட்டை சதமும், அசாத் ஷபிக் (107) சதமும் அடிக்க பாகிஸ்தான் 8 விக்கெட் இழப்பிற்கு 523 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது.

பின்னர் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சை தொடங்கியது. இங்கிலாந்தும் பாகிஸ்தானுக்கு தக்க பதிலடி கொடுத்தது. தொடக்க வீரர் அலி 35 ஓட்டங்களிலும் அடுத்து வந்த பெல் 63 ஓட்டங்களிலும் அவுட் ஆனார்கள். ஆனால் எதிர்முனையில் அலிஸ்ரயர் குக் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். நேற்று முன்தினம் 3-வது நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து அணி 3 விக்கெட் இழப்பிற்கு 290 ஓட்டங்கள் எடுத்திருந்தது. நேற்று 4-வது நாள ஆட்டம் தொடங்கியது.

தொடர்ந்து விளையாடிய குக் இரட்டை சதம் அடித்தார். நேற்றைய 4-ம் நாள் ஆட்ட நேரமுடிவில் இங்கிலாந்து அணி 8 விக்கெட் இழப்பிற்கு 569 ஓட்டங்கள் எடுத்துள்ளது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் குக் 263 ஓட்டங்கள் எடுத்தார். போட்டியின் 5-வதும் இறுதியுமான நாள் இன்றாகும். (க)

# கெய்ன்ஸ் சூதாட்டத்தில் ஈடுபட வைக்க முயற்சித்தார் : மக்கலம் தகவல்



நியூசிலாந்து அணியின் முன்னாள் வீரரான கிறிஸ கெய்ன்ஸ் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக இந்தியன் பிரிமியர் லீக்கின் முன்னாள் தலைவர் லலித் மோடி குற்றம் சாட்டியிருந்தார்.

இதைத் தொடர்ந்து லலித் மோடி மீது கிறிஸ கெயின்ஸ் லண்டன் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நஷ்ட ஈடு பெற்றார்.

ஆனால் லலித் மோடியின் குற்றச்சாட்டில் உண்மையிருப்பதும், கிறிஸ் கெய்ன்ஸ் சூதாட்டத்தில் ஈடுபட்டது உண்மை எனவும் தெரிய வந்தது.

இது தொடர்பான வழக்கில் நியூசிலாந்து அணியின் தற்போதைய தலைவர் பிரண்டன மக்கலம், அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங் ஆகியோரும் சாட்சிகளாக சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் லண்டன் சவுத் வார்க் கிரவுன் நீதிமன்றத்தில் நேரில் ஆஜரான பிரண்டன் மக்கலம், கிறிஸ கெயின்சுக்கு எதிராக பல திடுக்கிடும் தகவல்களை சாட்சியாக கூறினார்.

அவர் கூறுகையில், "கடந்த 2008-ம் ஆண்டு கொல்கத்தா ஹாட்டல் ஒன்றில் என்னை கிறிஸ் கெயின்ஸ் சந்தித்தார். அந்த சமயம் ஐபிஎல் போட்டிகளில் சூதாட்டத்தில் ஈடுபட விருப்பம் உள்ளதா என கேட்டார்.

பல சீனியர் வீரர்கள் ஈடுபடுவதாகவும், இது ஐபிஎல் போட்டிகளில் சாதாரணம் விடயம் என்று கூறி என்னை ஈர்க்க முயன்றார். ஆனால் நான் இனிமேல் இதுபற்றி பேச வேண்டாம் என்று கூறினேன்.

பின்னர் ஒருமுறை போனில் தொடர்பு கொண்டு சம்மதமா என கேட்டார். விருந்து நிகழ்ச்சியொன்றில் மீண்டும் என்னை வற்புறுத்தினார்.

சூதாட்டம் மூலம் அதிக பணம் கிடைக்கும் என்றெல்லாம் ஆசை காட்டினார். ஆனால் நான் சம்மதிக்கவில்லை என்று அவருக்கு எதிராக சாட்சியளித்தார்.

அதே சமயம், கெயின்ஸ் தன்னை மிரட்டி பணியவைக்க முயலவில்லை என்றும் நியூசிலாந்து கிரிக்கெட் அணியில் உள்ள சிறந்த வீரர்களில் அவரும் ஒருவர் எனவும் மக்கலம் தெரிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவா தீர்மானம் பற்றிய தகவல்களை

# மூடிமறைக்க அவசியமில்லை

## ஊடக அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

**ஜெனிவா தீர்மானம் குறித்த தகவல்களை மூடி மறைக்க வேண்டிய எந்தவொரு அவசியமும் அரசாங்கத்திற்கு கிடையாது என ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.**

கூட்டு எதிர்க்கட்சி என பெயர் சூட்டிக் கொண்ட அநாதைக் கும்பலொன்று செய்தியாளர் சந்திப்புக்களை நடத்தி ஜெனிவா தீர்மானத்தை அரசாங்கம் மூடி மறைப்பதாக குற்றம் சுமத்தி வருகின்றது.

உண்மையில் அரசியல் ரீதியாக அநாதைகளாக்கப்பட்டுள்ள குறித்த தரப்பின் வங்குரோத்து நிலைமையே இவ்வாறான கூற்றுக்கள் குற்றச்சாட்டுக்கள் மூலம் வெளிப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் இரு நாட்கள் விவாதம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 22, 23 ஆகிய தினங்களில் மேற்படி விவாதம் நடத்தப்படும் என்றும், இதற்கான சபை ஒத்தி வைப்புவேளை பிரேரணை அரச தரப்பிலிருந்து கொண்டுவரப்படும் என்றும் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

இதற்கான சபை ஒத்தி வைப்புவேளைப்பிரேரணையை அரசே கொண்டுவரவுள்ளது. ஆகவே, மூடிமறைத்து அரசியல் செய்யும் நோக்கம் எமக்கு இல்லை. முன்கூட்டியே நாம் விவாதத்துக்கு திகதி வழங்கியிருக்கலாம். ஆனால், பிரதமர் ஜப்பான் சென்றதாலேயே சற்று தாமதம் ஏற்பட்டுள்ளது என்றார்.

அதேவேளை, உடலாகம ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு ஆகிய ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் அறிக்கை எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அன்றைய தினமே ஐ.நா. அறிக்கையும் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஜப்பான் விஜயம் காரணமாக இந்த விவாதத்தை நடத்த சிறிய கால தாமதம் ஏற்பட்டது என கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.(இ-7-10)

### வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் 16.10.2015

### மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 138.56 | 143.07 |
| பவுண்ட் | பிரிட்டன் | 213.40 | 222.00 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 156.51 | 163.51 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 144.52 | 151.32 |
| டொலர் | கனடா | 106.89 | 111.85 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 100.16 | 105.38 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.85 | 104.19 |
| யென் | ஜப்பான் | 1.1564 | 1.2078 |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 373.6048 |
| குவைத் | டினார் | 467.5110 |
| ஓமான் | ரியால் | 365.9838 |
| கட்டார் | ரியால் | 38.7105 |
| சவுதி அரேபியா | ரியால் | 37.5786 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிர்ஹம் | 38.3747 |

### சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 60 | 60 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 150 | 200 | 200 |
| தக்காளி | 120 | 120 | 90 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 50 | 50 |
| கோவா | 70 | 60 | 60 | 80 | 80 |
| கரட் | 80 | 60 | 80 | 100 | 70 |
| பூசணி | 50 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 60 | 40 | 40 | 80 | 50 |
| வாழைக்காய் | 70 | 40 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 110 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 130 | 120 | 120 |
| பாகற்காய் | 180 | 200 | 100 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 70 | 100 | 70 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 70 |
| பயற்றங்காய் | 160 | 90 | 60 | 120 | 120 |
| லீக்ஸ் | 80 | 60 | 60 | 80 | 100 |
| பீற்றூட் | 40 | 30 | 40 | 60 | 40 |
| கறிமிளகாய் | 180 | 200 | 110 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 80 | 40 | 60 | 120 | 120 |
| போஞ்சி | 160 | 200 | 150 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 40 | 40 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 250 | 350 | 300 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-60 | 40 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 200 | 200 | – | – | – |
| வெங்காயப்பூ | 200 | 150 | 160 | 200 | 180 |
| முள்ளங்கி | 50 | 40 | 50 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 25 |


Anniversary 6 வது ஆண்டு
பூர்த்தியை முன்னிட்டு 17th 18th 19th
ஆகிய திகதிகளில் பதிவுசெய்து 25% கட்டண கழிவுடன்
பரிசில்களையும் வெல்லுங்கள்

ONLY 17th 18th 19th
மாணவர்களே! உங்களுக்கு விசேடமான PEARSON (UK) அனுமதி பெற்ற டிப்ளோமா பாடநெறிகள் இப்போது ESOFT வழங்குகிறது

DiTEC INTERNATIONAL Diploma in Information Technology assured by PEARSON
காலம் : 4 மாதங்கள்

DiE Diploma in English
காலம் : 4 மாதங்கள்
வலுவான இரட்டைச் சான்றிதழ் ESOFT + Pearson (UK)

HND
Computing & Systems Development
Business Management
Awarded By PEARSON edexcel advancing learning, changing lives


FREE Samsung GALAXY Tab4

நான்கே மாதங்களில் எதிர்கால தொழில்வாய்ப்பினை உறுதிப்படுத்தும் ஏனைய டிப்ளோமாக் கற்கைநெறிகள் ESOFT + Pearson (UK)

DiWE assured by PEARSON Diploma in Web Engineering
DiSE assured by PEARSON Diploma in Software Engineering
DiBE assured by PEARSON Diploma in Business Management
DiBM assured by PEARSON Diploma in Business English
DiCA assured by PEARSON Diploma in Computerized Accounting
DiHN assured by PEARSON Diploma in Hardware & Networking

WIN a Gift!

ESOFT + Pearson (UK)
New Batches 18.10.2015 | 20.10.2015

ESOFT Shaping Lives. Creating Futures.
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142
Gajanan 077 309 9 308
(சி-2481)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படியும் வாழ முடியும் என்ற துர்ப்பாக்கிய நிலைக்குள்

## யாழ்.அரச அதிபர் ஆதங்கம்

எமது சமூகம் மனித விழுமியங்களை இழந்து எப்படியும் வாழலாம் என்ற துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ரீதியிலான முதியோர் நலன்பேணும் அமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த புதன்கிழமை யாழ்.சென் ஜோன்ஸ் அன்புலன்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமதுசமூகத்தில்முதியோரை மதிக்காத பண்பும் அவர்களின் கருத்துக்களுக்கு இடமளிக்காத நிலையும் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. காலத்தின் தேவையை கருத்திற் கொண்டு இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளமை மிகவும் பயனுள்ள விடயமாகும்.

முதியோருக்கென்று ஒரு அமைப்பு இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு அது பெரிய பலமாக அமைவதோடு அவர்களின் பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய களமாக அமையும். அவர்களின்நலன்களைபேணுவதற்கு உரிய இடமாக இந்த அமைப்பு செயற்படவேண்டும்.

முதியவர்கள் எப்போதும் மதிக்கப்படவேண்டியவர்கள். விசேடவிதமாக கவனிக்கப்படவேண்டியவர்கள். அவர்களின் நலன்களை பாதுகாக்கும் அமைப்பினை பயனுள்ளதாகவும் சிறப்பான முறையில் நடத்துவதற்கு எம்மாலான உதவிகளை நாம் வழங்கமுன்வரவேண்டும்எனஅவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




# இசைத்தட்டு அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

திருக்குறள் இசைத்தட்டு அறிமுக விழா யாழ்.நீராவியடி இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நாளை 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-5)

# பரிசளிப்பு விழா

யாழ்.இடைக்காடு மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குபாடசாலைதிறந்தவெளிஅரங்கில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கு.வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி கமலேஸ்வரி யோகராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வித்தியாலய முன்னாள் அதிபர் அ.அருந்தவநேசன், கௌரவ விருந்தினராக முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-5-136)

# எரிந்த நிலையில் இளைஞன் மீட்பு



**மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பிடித்ததில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் எரிந்த நிலையில் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.**

இச்சம்பவம் நேற்று முற்பகல் 10மணியளவில் வடமராட்சி மண்டான் உப்பு றோட் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் கரவெட்டி மத்தணியைச் சேர்ந்த குமாரசுவாமி-நிறோஜன் (வயது-27) என்ற இளைஞரே இவ்வாறு எரிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் மண்டான் உப்பு றோட் ஊடாக மோட்டார் சைக்கிளில் தனியாக பயணித்துள்ளார். இந் நிலையிலேயே அவ் இளைஞரது மோட்டார் சைக்கிள் திடீரென தீப்பிடித்துள்ளது.மோட்டார் சைக்கிளில் பிடித்த தீ இளைஞரையும் தாக்கியது.

எனினும் இளைஞர் மோட்டார் சைக்கிளினை நிறுத்தி விட்டு நெருப்பு பிடித்த உடலுடன் தன்னைக் காப்பாற்றுமாறு வீதியெங்கும் ஓடியுள்ளார்.

இதேவேளை இவ்வீதியால் சென்ற கிராம சேவையாளர் ஒருவர் இவ் இளைஞரை காப்பாற்றி பொதுமக்கள் உதவியுடன் தீயை அணைத்துள்ளார்.

எனினும் இளைஞர் மோசமான நிலையில் எரிகாயங்குட்பட்டிருந்தார். உடனடியாக அங்கிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.சம்பவ இடத்திற்கு சென்ற நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

மேலும் மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்துள்ளதாகவும் குறித்த இளைஞர் தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றார் எனவும் தெரிய வருகின்றது. தனது கடமைக்காக சென்றிருந்த வேளையே இச் சம்பவம் இடம்பெற்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5-6)

# 7 இந்திய மீனவர்களுக்கும் விளக்கமறியல் நீடிப்பு

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நாகபட்டினத்தை சேர்ந்த 7 இந்திய மீனவர்களையும் தொடர்ந்து எதிர வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராஜா நேற்றைய தினம உத்தரவிட்டுள்ளார்.

கடந்த இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை இரவு பருத்தித்துறை கடற்பரப்பில் ஒரு படகில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 7 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் நேற்றைய தினம 2 ஆவது முறையாக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆயர்படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வரைவிளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-9)

# விண்ணப்பங்கள் கோரல்

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் உள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் வருடத்தின் திறமையான தொழில் முயற்சியாளரை தெரிவு செய்யும் நாடளா விய ரீதியிலான போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிறிய மற்றும் மத்திய தர கைத்தொழில் உரிமையாளர்களும்,சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களும் இப் போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் இந்த வருடம் ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு எதிரேயுள்ள வீடமைப்பு அதிகார சபை கட்டடத்திலுள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மாவட்ட அலுவலகத்தில் நேரடியாகவும் அல்லது 021222 2421 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

இப் போட்டி தொடர்பான முழுமையான விபரங்கள் நேற்றைய வலம்புரி பத்திரிகையில் வெளியாகியிருந்தது. குறிப்பிடத்தக்கது. (இ-9)

# வினைத்திறன் தடைதாண்டல் வாய்மூல பரீட்சை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திற்கான தேசிய பாடசாலைகள், ஆசிரியர் கலாசாலைகள், கல்வியியற் கல்லூரிகள். ஆசிரிய மத்திய நிலையங்களில் கடமையாற்றும் கனிஷ்ட ஊழியர்களுக்கான வினைத்திறன் வாய்மூலப் பரீட்சை எதிர்வரும் மார்கழி மாதம் முதல் வாரத்தில் நடத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் அதற்கான (தரம் I, தரம் II, தரம் III இற்கான) வாய்மொழி மூல தடைதாண்டல் பரீட்சைக்கான கருத்தரங்கு எதிர்வரும் 25 ஆம் திகதி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை கல்விசாரா ஊழியர் ஒன்றிணைந்த சங்கத்தினரால் நடத்தப்படவுள்ளதால் நடைபெறவுள்ள செயலமர்வில் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இலங்கை கல்விசாரா ஒன்றிணைந்த ஊழியர் சங்கத்தின் செயலாளர் விஜயசேகர அறிவித்துள்ளார்.

தரம் ஒன்றிற்கு பொதுக் கல்வி மற்றும் தாபன நிர்வாகமும்,

தரம் இரண்டிற்கு பொதுக் கல்வி மற்றும் தாபன நிர்வாக அறிவும் ஒழுங்கமைப்பும் கட்டமைப்பு உத்தியோகபூர்வ நிலைமைகள் பற்றிய விளக்கமும்,

தரம் மூன்றிற்கு அலுவலக முறைமை ஸ்தாபன விதிக்கோவை, ஒழுங்கு விதிகள், நிதி ஒழுங்கு கோவை பற்றிய விளக்கமும் வழங்கப்படவுள்ளதாகவும் அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் செயலமர்வு நடைபெறவுள்ள தினத்தன்று இலங்கை கல்விசாரா ஊழியர் ஒன்றிணைந்த சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு பொது நிர்வாக சுற்றறிக்கை 10/97. 97/03/19 இன் பிரகாரமும் கல்வி அமைச்சின் செயலாளரின் இல ED/05/67/01/15 M 2015.10.25 ஆம் திகதி கடிதத்தின் பிரகாரமும் கடமை விடுப்பு வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்தவுள்ள 2015 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர்தினவிழா இம்முறை வடமாகாணத்தில் நடைபெறவுள்ளதாக பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இந்த விழாவில் கலந்து கொள்ளும் அனைத்து அதிபர்களும் ஆசிரியர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்தோடு விசேடமாக இவ்வருடம் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை வழிப்படுத்தி சித்தி பெறவைத்த ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளதால் அவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் அதிபரின் உறுதியுரையுடன் கோரப்பட்டிருந்தன.

விண்ணப்ப முடிவுத் திகதி 16.10.2015 என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதும் அத்திகதி நீடிப்புச்செய்யப்பட்டு 20.10.2015 ஆம் திகதிக்கு முன்னர் ஆசிரியர்களை பொதுச் செயலாளர், **இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், 131,கண்டிவீதி, யாழ்ப்பாணம** என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளார். (இ-7-10)

# வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வு கொக்குவில் இந்துக்கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)


யாழ்.லயன்ஸ் கழகமும் யாழ். விழிப்புலன் அற்றோர் சங்கமும் இணைந்து நடத்தும் வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியின் சுப்ரமணிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ் பேரவை தலைவரும் ஓய்வுநேர பேராசிரியருமான எஸ். சிவலிங்கராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக மாவட்ட லயன்ஸ் கழக இணைப்பாளர் தேவாபீற்றர் எம்.ஜே.எவ். கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது விழிப்புலன் அற்றோர் உறுப்பினர்களின் கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறும்.


ஆர்வமுள்ள அனைவரையும் இந்நிகழ்வில்கலந்து கொள்ளுமாறு யாழ்.லயன்ஸ் கழகத் தலைவர் வி.சதீஸ்வரன் கேட்டுள்ளார். (இ-5)



வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலாசாரப் பெருவிழா கடந்த 12ஆம் திகதி யாழ்.அராலி சரஸ்வதி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. வலி.மேற்கு பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான அ.சோதிநாதாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்து கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீருடன் உண்ணாவிரதம்





**(யாழ்ப்பாணம்)**


**பொதுமன்னிப்பில் தம்மை விடுதலை செய்யக்கோரி தமிழ் அரசியல் கைதிகளினால் சிறைச்சாலைகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களது விடுதலையை வலியுறுத்தியும் யாழ். முனியப்பர் ஆலயம் முன்பாக அடையாள உண்ணாவிரதப் போராட்டமொன்று நேற்றைய தினமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.**

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டத்தி'ற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

அரசியல் கைதிகள், காணமற் போனோரின் உறவுகளும் போராட்டத்தில் பெருமளவில் கலந்து கொண்டு தமது உறவுகளை விடுவிக்குமாறு கண்ணீருடன் கதறியதனையும் காண முடிந்தது. சிறைகளிலுள்ள அரசியல் கைதிகளைவிடுதலை செய்யக்கோரி நாடளாவியரீதியில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:-உ.சாளின்)






## ராசி பலன்

17.10.2015
(புரட்டாதி 30, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 11.02மணிவரை
அனுசம் முற்பகல் 10.19மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் பரணி | | |
| | | | குரு, சுக், செவ் |
| | சனி சந் | | சூரி, ராகு, புத |

**மேடம்:** அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும், வேலைச்சுமை கூடும், தேவையற்ற அலைச்சல்கள் அதிகரிக்கும், கௌரவக் குறைவான நாள்.

**இடபம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வியாபார விருத்தியுண்டு, கடனில் ஒரு பகுதியைக் கொடுத்து தீர்க்கும் வாய்ப்புண்டு, வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், நீண்ட நாளைய விருப்பம் ஒன்று கைகூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுபதகவல்கள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் குடி கொள்ளும், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், உறவினர்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**துலாம்:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்; தொழில் வளர்ச்சி கூடும் நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**விருச்சிகம்:** உறவினர் பகை அகலும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**தனுசு:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.

**மகரம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், காரிய அனுகூலமுண்டு, கட்டடப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**மீனம்:** திறமை மிக்கவர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும், தேகநலன் சீராகும், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், புதிய திட்டங்களில் வெற்றி காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணுக்காய் வலயக்கல்வி அதிபர்களுக்கான கூட்டம்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30மணி தொடக்கம் பிற்பகல் 4.30மணி வரை துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இக்கூட்டத்திற்கு வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வருகை தரும் போது அறிவிக்கப்பட்டுள்ள தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் உட்பட அனைத்து தரவுகளையும் தம்முடன் எடுத்து வருமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)




# 1, 33, 867 வெடிபொருட்கள் அகற்றம்

(மல்லாவி)

**ஜப்பான், அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் நிதியுதவியுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பொதுமக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்திலிருந்து இன்றுவரை 70 இலட்சத்து 94 ஆயிரத்து 42சதுர மீற்றர் நிலப்பரப்பளவில் ஒரு இலட்சத்து 33ஆயிரத்து 867 வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளதாக கண்ணிவெடி அகற்றல் பணியில் ஈடுபட்டுள்ள டாஸ் நிறுவன புள்ளிவிபரத்தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இதற்கமைய 70 இலட்சத்து 94 ஆயிரத்து 42 சதுரமீற்றர் நிலப்பரப்பளவில் 43 ஆயிரத்து 201 நிலக்கண்ணி வெடிகளையும் 43 வாகன எதிர்ப்பு நிலக்கண்ணி வெடிகளையும் 14 ஆயிரத்து 229 வெடிக்காத வெடிபொருட்களையும் 76 ஆயிரத்து 394 சிறியரக வெடிபொருட்களையும் அகற்றியுள்ளதாக கண்ணிவெடி அகற்றல் பணியில் ஈடுபட்டுள்ள டாஸ் நிறுவன புள்ளிவிபரத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

டாஸ் நிறுவனத்தின் கண்ணிவெடி அகற்றல் வேலைத்திட்டங்களில்முன்னாள் போராளிகள் மற்றும் குடும்பத்தலைவர்களை இழந்த குடும்பப்பெண்கள் உட்பட இளைஞர், யுவதிகள் என 500 இற்கு மேற்பட்ட பணியாளர்கள்நிலக்கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் மூலமாகவே 70இலட்சத்து 94 ஆயிரத்து 42 சதுர மீற்றர் நிலப்பரப்பில் நிலக்கண்ணிவெடிப்பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை மேற்படி நிறுவனத்தினால் 37இலட்சத்து 63ஆயிரத்து 277 சதுரமீற்றர் பரப்பளவில் நிலக்கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் நிலப்பரப்பில் புதைக்கப்பட்டிருந்த 4ஆயிரத்து 378 மிதிவெடிகளையும் 2ஆயிரத்து 138வெடிக்காத வெடிபொருட்களையும் ஆபத்தான நிலையில் காணப்பட்ட 22 ஆயிரத்து 480 சிறியரக வெடிபொருட்களையும் நான்கு வாகன எதிர்ப்பு வெடிபொருட்களுமாக மொத்தம் 29 ஆயிரத்திற்கு மேற்பட்ட வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக அந்நிறுவனத்தகவல்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

### சுற்றிவளைப்பு நடவடிக்கையில்

## கசிப்பு உற்பத்தி விற்பனையில் ஈடுபட்ட 9 பேர் கைதாகினர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குக்குட்பட்ட பல இடங்களில், கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் புதன்கிழமை வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, கோடா உற்பத்தி, கசிப்பு உற்பத்தி மற்றும் கசிப்பு விற்பனை என்பவற்றில் ஈடுபட்ட ஒன்பது பேரை கைது செய்துள்ளதாக, முள்ளியவளை பொலிஸ் நிலைய மது ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஜே.ஜெயரோஷன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.கே.ரத்னசிங்கத்தின் ஆலோசனைக்கமைய, முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேப்பாப்பிலவு, முறிப்பு, மாமூலை, பூதன்வயல், முள்ளியவளை 4 ஆம் வட்டாரம் ஆகிய பிரதேசங்களிலேயே, குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

குறித்த பிரதேசங்களில் சட்டவிரோத கசிப்பு உற்பத்திகள் மேற்கொள்ளப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், இந்த சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்போது, கசிப்பு மற்றும் கோடா உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றிவளைப்பின் போது, கேப்பாப்பிலவு நந்திக்கடலோரத்தில் உள்ள காட்டுப்பகுதியில் வைத்து, கோடா உற்பத்தி செய்த ஐவர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து 48ஆயிரம் மில்லி லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் முறிப்பு, மாமூலை, பூதன்வயல், முள்ளியவளை 4 ஆம் வட்டாரம் ஆகிய பிரதேசங்களில், நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில், கேப்பாப்பிலவு நந்திக்கடல் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட மூவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், அம்மூவரையும் 5 இலட்சம் ரூபாய் சரீரப்பிணையிலும் 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பிணையிலும் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

அத்துடன்கைது செய்யப்பட்ட ஏனையவர்கள பொலிஸ் பிணையிலேயே விடுவிக்கப்பட்டனர என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (2)

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி முல்லைத்தீவில் கவனயீர்ப்பு

(பனிக்கன்குளம்)

நாட்டின் சகல சிறைச்சாலைகளிலுள்ள அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மக்கள் அனைவரும் ஒருமித்த கவனயீர்ப்பு போராட்டத்திற்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நாடு முழுவதிலுமுள்ள சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் சாகும் வரையிலான உண்ணாவிரதப்போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள். அவர்களின் போராட்டத்திற்கு மதிப்பளித்தும் அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் மேற்படி கவனயீர்ப்பு நடவடிக்கையானது முல்லைத்தீவில் மேற்கொள்ளப்படவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கவனயீர்ப்பு போராட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் முல்லைத்தீவு கச்சேரிக்கு முன்பாக நடைபெறவிருக்கும் இக்கவனயீர்ப்பு முன்னெடுப்பில் அரசியல் கைதிகளின் குடும்பங்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் , அரசியல் தலைவர்கள், அனைத்து சமயத்தலைவர்கள், கல்விச்சமூகத்தினர், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு இக்கவனயீர்ப்பு முன்னெடுப்பை வலுப்பெறச்செய்ய வேண்டும் எனவும் து.ரவிகரன் தெரிவித்துள்ளார். (2-281)



முருகன் நகரில் கட்டுக்கரை நன்னீர் மீன்பிடி சங்கத்திற்கு 2.5 மில்லியன் செலவில் மீன்சந்தை ஒன்று அமைக்கும் திட்டத்திற்கான அடிக்கல்நாட்டு விழா கடந்த 14 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றபோது... (படம்:-பொ.சோபிகா)

## முல்லையில் 38ஆயிரத்து500 பனம் விதைகள் நாட்டி வைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் கரிப்பட்ட முறிப்புக்கும் மணவாளன் பட்ட முறிப்புக்கும் இடையில் ஒட்டுசுட்டான் பிரதான வீதியின் இரு மருங்கிலும் பனை அபிவிருத்திச் சபையினால் 9500 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன.

இந்நிகழ்வு பனை அபிவிருத்தி சபையின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் பா.றஜீபரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மணவாளன் பட்டமுறிப்பு கிராம அலுவலர் த.தனபால்ராஜ், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த 6, 7 , 8 ஆகிய திகதிகளில் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் 13 ஆயிரம் விதைகள் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 16 ஆயிரம் பனம் விதைகள் என்பன நடுகை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-28)



## மாணவர்களுக்கு சித்திரப்போட்டி

(மல்லாவி)

உலக உணவுத்திட்ட அனுசரணையுடன் வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் இடம்பெறும் பாடசாலை உணவூட்டல் செயற்றிட்டத்தின் மூலம் பயன்பெறும் மாணவர்களுக்கு 2016 ஆம் ஆண்டுக்கான சித்திரப்போட்டி நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) பி.செல்வின் இரேமியஸ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது,

தரம் -1தொடக்கம் தரம்-8 வரையிலான மாணவர்கள் சித்திரப்போட்டியில் பங்கேற்க முடியும்.

'பூச்சியப்பசி பசியற்ற உலகம்' எனும் தொனிப்பொருளில் ஏ-3 அளவு வெள்ளைத் தாளில் சித்திரம் வரையப்பட வேண்டும்.

மேலும் போட்டி தொடர்பான விபரங்களுக்கு அந்தந்த வலயக்கல்வித் திணைக்களங்களின் ஊடாக மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளுக்கு சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதனைப் பார்வையிடுவதன் மூலம் தகவல்களைப் பெற முடியும்.

போட்டிகள் யாவும் வகுப்பு ரீதியாக எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக நடைபெற்று இரண்டு ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு பாடசாலை மட்டத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக போட்டிகள் நடத்தப்பட்டு இரண்டு ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு கோட்ட மட்டப் போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கோட்ட மட்டப் போட்டிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக நடைபெற்று ஐந்து ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு வலய மட்டப் போட்டிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

வலய மட்டப் போட்டிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக நடைபெற்று ஐந்து ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு மாகாண மட்டபோட்டிக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக சுன்னாகம் மருதனார் மடத்திலுள்ள மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எமது பிள்ளைகளை விடுவியுங்கள்"

## கிளிநொச்சியில் நேற்று கவனயீர்ப்பு

நீண்ட காலமாக அனைத்து சிறைச்சாலைகளிலும் அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தற்பொழுது தம்மை விடுதலை செய்யக் கோரி காலவரையறை








யற்ற சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வரும் நிலையில் அவர்களுக்கு வலுச்சேர்க்கும் வகையிலும் அவர்களை விடுதலை செய்யக் கோரியும் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சியில் கவனயீர்ப்புபோராட்டம் ஒன்று சிறையிலுள்ள கைதிகளின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டது.

கவனயீர்ப்பு போராட்டம் பழைய மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பமாகி அவ்விடத்தில் தரித்து நின்று அரை மணிநேரம் வரை கோசங்களை எழுப்பி அங்கிருந்து ஏ-9 வீதி வழியாக ஊர்வலம் நகர்ந்து புதிய மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது.

இதன்போது வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கிப் பிடித்தவாறு கோசங்களை எழுப்பினர். அதில் நல்லாட்சியின் அர்த்தம் அரசியல் கைதிகளின் விடுதலையில் உள்ளது, விடுதலை செய், விடுதலை செய் அரசியல் கைதிகளை விடுதலை செய், சிறைக் கைதிகளும் மனிதர்களே! எழுத்தில் வேண்டாம் அரசாங்கமே விடுதலை செய்து நிஜமாக்கு, எத்தனை ஆண்டுதான் வதைவது, எம் பிள்ளைகளை விடுதலை செய்க போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

புதிய மாவட்ட செயலகத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிற்கான மகஜரினை மதகுரு கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளித்தார்.

இதில் மனித உரிமை ஆர்வலர்கள், மத குருக்கள், கைதிகளின் உறவுகள், காணாமற் போனவர்களின் உறவுகள், அரசியல் பிரமுகர்கள், பா.உறுப்பினர் சி.சிறீ தரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, முன்னாள் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், பெண்கள் அமைப்பை சேர்ந்தவர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு கருத்து தெரிவித்த சிறிதரன் எம்.பி நீண்ட காலமாக அரசியல் கைதிகள் சிறையில் உள்ளதாகவும் அவர்கள் தற்போது உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் 20 இற்கும் மேற்பட்டோர் தமது உடல் நலம் குன்றிய நிலையில் காணப்படுகின்றனர்.

அவர்களின் விடுதலை தொடர்பிலும் பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பிலும் அர சாங்கம் நல்ல முடிவினை எடுக்க வேண்டும். இப்போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(2-277-15-254-281)




## க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கான கருத்தரங்கும் புத்தகங்கள் வழங்கலும்

(மல்லாவி)

கொழும்பு சிரேஷ்ட சட்டத்தரணி வி.தேவசேனாதிபதியின் அனுசரணையுடன் வடக்கு மாகாண கல்வியமைச்சின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் நடப்பாண்டில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச வினாத்தாள், வினா-விடை தொகுப்பு புத்தகங்கள் வழங்கல், பாடரீதியான கருத்தரங்கு என்பன இன்று சனிக்கிழமை காலை 8.30மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் அறிவித்துள்ளதாவது,

நடப்பாண்டில் க.பொ.த.(சா/த)பரீட்சைக்குத் தோற்றவுள்ள வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்களின் சித்தி வீதத்தை அதிகரிக்கும் நோக்கில் சிரேஷ்ட சட்டத்தரணி வி.தேவசேனாதிபதியின் அனுசரணையுடன் வடக்கு மாகாண கல்வியமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு ஏற்கனவே கருத்தரங்கும் வினா-விடைதொகுப்பு நூல்களும் வழங்கப்பட்டுள்ள நிலையில் இன்று வவுனியா மாவட்டத்திலுள்ள ஆயிரம் மாணவர்களுக்கு கருத்தரங்கு, வினா-விடை தொகுப்பு நூல்களும் வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய கணிதம், விஞ்ஞானம், தமிழ், வரலாறு, ஆங்கிலம் ஆகிய 5பாடங்களையும் உள்ளடக்கிய வினாவிடை- தொகுப்பு புத்தகம், விஞ்ஞான பாட கையேடு, எதிர்பார்க்கும் வினா,விடை தொகுப்பு கையேடு ஆகிய மூன்று புத்தகங்களும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளன. அத்தோடுதுறை சார்ந்த அனுபவமுள்ள வளவாளர்களினால் பாட ரீதியான கருத்தரங்கும் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் மேலதிக தகவல் தேவைபடின் செயலமர்வு அமைப்பாளர் க.சக்திதரனுடன் 077 842 9649 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் தெரிவித்துள்ளார். (2-15)

## "போர்க்காலமும் ஊர்க்கோலமும்" கவிதை நூல் வெளியீடு நாளை

புதுக்குடியிருப்பு ஜெயம் ஜெகன் எழுதிய **போர்க்காலமும் ஊர்க்கோலமும்** எனும் கவிதை நூல்வெளியீடு நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் கலாபூசணம் ந.இராமநாதன்தலைமையில்நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவசந்திரன், கௌரவ விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இ.பிரதாபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையை புதுக்குடியிருப்பு கலாசார உத்தியோகத்தர் பண்டிதர் வீ.பிரதீபன் ஆற்ற நூலின் முதல் பிரதியை ஓய்வுபெற்ற இலங்கை வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் ச.திருச்செல்வம் பெற்றுக் கொள்வர்.

ஆய்வுரையை கவிஞர் முல்லை ரமணன் நிகழ்த்த, ஏற்புரையை முல்லை யோகா பயிற்சி கல்லூரி இயக்குநர் புதுக்குடியிருப்பு ஜெயம் ஜெகன் ஆற்றுவார். (2-281)

## அகரம் நூல் வெளியீடு

செல்லமுத்து வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் மோசஸ் டிலோஜினி எழுதிய "அகரம்" எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று சனிக் கிழமை பிற்பகல் 3மணிக்கு முள்ளியான் கட்டைக்காடு கடற்கரையோரத்தில் (கப்பலேந்தி மாதா ஆலய அருகாமையில்) நடைபெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு படைப்பாளிகள்,ஆர்வலர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். இந்த நூலிற்கு படைப்பாளிகள் உலகம் அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## மன்னார் ஆயர் சுகவீனம்; எமக்கு மிகப்பெரிய இழப்பு

### அநுராதபுரம் சிறைச்சாலை கைதிகள் தெரிவிப்பு

மன்னார் ஆயர் இராயப்பு யோசப்பு ஆண்டகை சுகயீனம் அடைந்திருப்பது தமக்கு மிகப்பெரிய இழப்பு என அரசியல் கைதிகள் தெரிவித்ததாக மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் விக்டர் சோசை தெரிவித்துள்ளார்.

பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்யப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள நிலையில் கடந்த 14ஆம் திகதி நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தலைவரும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட குருமுதல்வர் விக்டோர் சோசை உள்ளிட்டவர்கள் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த விஜயம் தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது கருத்து தெரிவித்த அவர், நாம் இவர்களை சந்தித்த போது மன்னார் ஆயர் இராயப்பு யோசப்பு ஆண்டகை சுகயீனம் அடைந்திருப்பது தமக்கு மிகப்பெரிய இழப்பு என அரசியல் கைதிகள் தெரிவித்தனர்.

மேலும், பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி மூன்றாவது நாளாக அன்றைய தினம் தமது போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்களின் இந்தப்போராட்டம் நியாயமானதே. இவர்களுக்கு நாங்கள் எங்களது ஆதரவினை தொடர்ந்தும் வழங்குவோம்.

இதேவேளை, அநுராதபுர சிறைச்சாலையில் 40 இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்று வவுனியாவில் அடையாள உண்ணாவிரதம்



நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் நேற்று காலை அடையாள உண்ணாவிரதப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் குறித்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம், வவுனியா நகரசபை முன்றலில் இடம் பெற்றது.

இந்த அடையாள உண்ணாவிரதத்தில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சி.சிவமோகன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், எம்.பி.நடராஜ், எம்.தியாகராசா, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதி என்.ரஜீவன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வன்னி அமைப்பாளர் எஸ்.கோவிந்தராஜ், புதிய மாசிச லெனினிசக் கட்சியின் வவுனியா மாவட்ட பிரதிநிதிகள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், காணாமற் போனோரின் உறவினர்கள் உட்பட அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்க பிரதிநிதிகள், எனப்பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

பிற்பகல் 5 மணிவரை இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்தது. இதனை தொடர்ந்து வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊடகவியலாளர் சந்திப் பொன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-250-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி

செல்வி மாலசுதன் சுருதிகா



2015ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 179 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தையும் சங்கானைக் கோட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

பாட்டி, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா குடும்பம், மாமா குடும்பம், சித்தப்பா குடும்பம், தம்பி.


"டச்சு வீதி"
சித்தன்கேணி. (C2477)

## முதலாமிடம்



ஐந்தாம் தர மாணவர்களுக்கிடையில் கோட்ட மட்டத்திலும் வலய மட்டத்திலும் அண்மையில் நடைபெற்ற சித்திரப் போட்டியில் யாழ். கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை மாணவி சுரேஸ்–சுமேக்கா முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

மேலும் இம் மாணவி மாகாண மட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)




## மலிவு விற்பனை

தீபாவளியை முன்னிட்டு வாடிக்கையாளரின் நலன் கருதி 15.10.2015 முதல் 10.11.2015 வரையில் விசேட விலைக் கழிவில் சகல விதமான பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

நாடவேண்டிய இடம்

லைடன் புடைவை நிலையம்,

410, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம். 021 222 2381

(கீ-2010)

### ஜெனிவா யோசனைக்கு எதிராக

# அமைதியாக யுத்தம் செய்ய வேண்டுமாம்

## தயான் ஜயதிலக அட்வைஸ்

(கொழும்பு)

ஜெனிவா யோசனைக்கு எதிராக அமைதியான கடும் யுத்தம் ஒன்றை தொடுக்க வேண்டும் என முன்னாள் இராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குள் அமுல்படுத்தப்பட உள்ள ஜெனிவா யோசனையை நாட்டின் சகல பிரஜைகளும் எதிர்க்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அந்த யோசனையில் நாட்டின் இராணுவத்தினருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன் நாட்டின் வரலாற்றை மாற்றும் நிலைமையும் அதில் அடங்கியிருப்பதாகவும் தயான் ஜயதிலக தெரிவித்தார்.

அத்துடன் இந்த யோசனையை ஆதரிக்கும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் என அனைவரையும் சமூகத்தில் இருந்து அருவருத்து ஒதுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

திரு. ச. தங்கமாமயிலோனின் வணங்கற்பாக்கள்

## நூல் வெளியீட்டுவிழா





**தலைவர்:**

பேராசிரியர் திரு. எஸ்.சிவலிங்கராஜா
(முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**பிரதம விருந்தினர்கள்:**

வாழ்நாள் பேராசிரியர் திரு. அ.சண்முகதாஸ்
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

முனைவர் திருமதி. மனோன்மணி சண்முகதாஸ்
(முன்னாள் ஆய்வுப்பேராசிரியர் கக்சுயின் பல்கலைக்கழகம், ஜப்பான்)

**சிறப்பு விருந்தினர்:**

பேராசிரியர் திரு. தி. வேல்நம்பி
(வணிக பீடாதிபதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**நூலிலிருந்து சில பாடல்கள் பாடுதல்:**

செல்வி. ஆதித்யா அருணகிரிநாதன்

இடம்: திருநெல்வேலி பழங்கிணற்றடி பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபம்.
காலம்: 2015-10-18 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 9:30

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
(விழா ஏற்பாட்டுக் குழு)

(2081)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா:21<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:A/L/கனடா PR<br>தொ.இ: B/1375 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 16<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/2555 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 23சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:A/Lபெல்ஜியம் PR<br>தொ.இ: B/1380 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 29 செவ் 7 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:A/Lஎதிர்பார்ப்பு:<br>வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/2569 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 20செவ் 4 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:O/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/1383 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 13செவ் 4 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/2571 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 30<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்BITலண்டன் NOTPR<br>தொ.இ: B/1384 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 45சூரிசெவ் 7 இல்<br>தகைமை/தொழில் : BIT, AAT/<br>அரசதொழில்<br>தொ.இ: G/2573 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## நலம் காத்தருளம்மா



நெஞ்ச மதில் வீற்றிருந்து–அருள்
நேசன் தனை நிறைகுடமாய்
பஞ்சமதை போக்கு–நன்றாய்
பாரதனை மீட்டெடுக்க
வஞ்சமில்லா நெஞ்சத் தாயே–எம்
வாசல் வரை வந்து செல்வாய்
கஞ்சர் தனை பார்த்திடாமல்–ஏழை
நலம் காத்தருளம்மா

**ப.சிவதாட்சாயினி**
**யாழ். சுண்டுக்குளி**
**மகளிர் கல்லூரி**

நவராத்திரி தினத்தை முன்னிட்டு வெளி வரவுள்ள நவராத்திரிப் பாமாலைக்கு மாணவர்கள் தங்கள் கவிதைகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

ஆசிரியர்
நவராத்திரி பாமாலை,இல3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில் நுட்பங்கள்–65

# வரண்ட வலய விவசாயத்தினை மையப்படுத்திய ஆராய்ச்சி மாநாடு



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

காலநிலை மாற்றத்தை உள்வாங்கிய துல்லியமான விவசாய செய்கைக்குள் (Precision Farming) நாம் உள்வாங்கப்பட வேண்டிய காலகட்டத்தை நெருங்கியிருக்கின்றோம். இதனை கடந்த இரு நாட்களாக கிளிநொச்சி அறிவியல் நகரிலமைந்துள்ள விவசாயபீடத்தில் நடைபெற்று முடிந்த வரண்ட வலய விவசாயத்தினை மையப்படுத்திய முதலாவது உலகளாவிய மாநாட் டில் கலந்து கொண்டசிறப்பு விருந்தினரான விவசாயத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரொகான் விஜயகோனின் உரையிலும் மாநாட்டின் பிரத்தியேக உரையை "கால நிலைமாற்றத்திற்கு ஈடுகட்டும் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தும் பயிரினங்கள்" பற்றி நிகழ்த்திய தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் நெல்லில் பிறப்புரிமையியல் மற்றும் பரம்பரையியல் துறையின் பணிப்பாளர் பேராசிரியர் எஸ்.ரொபினும் விரிவாக விளக்கியிருந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விவசாயபீடத்திற்கு இந்த ஆண்டு சிறப்புக்குரியதும் மிக முக்கியமான மைல்கல்லுமாகும். தனது வெள்ளி விழாவை கிளிநொச்சியிலுள்ள அறிவியல் நகரில் இனங்காணப்பட்ட பல செயற்பாடுகளுடன் ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்களான விவசாய பட்டதாரிகள் இணைந்து உரிமையுடன் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். அதன் ஓரங்கமாக வரண்ட வலய விவசாயம் பற்றிய உலகளாவிய ஆராய்ச்சி மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இருபத்தைந்தாண்டுகளில் பல தடைகளை தாண்டி விசாலமான ஆலமரமாக பரிணமிக்கும் விவசாயபீடம் இவ் வருடத்தை வெள்ளிவிழா ஆண்டாக பிரகடனப்படுத்தி அதில் பல செயறபாடுகளை உள்வாங்கியிருக்கின்றது. நண்டநாள் கனவான உலகளாவிய ஆராய்ச்சி மாநாடு குறிப்பாக எமது வரண்ட பிரதேசத்தை மையப்படுத்தி சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இவ்வாராய்ச்சி மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் மங்கள விளக்கேற்றலை விவசாய உயிரியல் தலைவர் கலாநிதி திருக்குமரன் நெறிப்படுத்தினார்.

தலைமைப் பொறுப்பை விவசாய பீடத்தின் பீடாதிபதி கலாநிதி திருமதி துஷயந்தி மிகுந்தனும் கருத்தரங்கின் இணைப்பாளாராகவும் ஆய்வு மாநாட்டின் வரவேற்புரையையும் கலாநிதி எஸ் வசந்தரூபாவும், நிதிப்பொறுப்பாளராக உமாசங்கரும், ஆய்வரங்கின் வெளியீடான மலரின் பத்திராதிபர்களாக கலாநிதி வசந்தரூபா, திருமதி அனுசியா ஸ்ரீரங்கனும் மற்றும் வேணுகோபனும் தங்களது பணியை செவ்வனே செய்திருக்கின்றார்கள். இவர்களுடன் இணைந்து பீடத்தின் ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் விவசாயபீட பட்டதாரிகள், நலன் விரும்பிகள் என உதவியும் தற்போது விருந்தினர்களை கௌரவிப்பதில் விவசாய பீடத்துடன் இணைந்து கொண்ட விவசாய திணைக்களத்தின பிராந்திய ஆராய்ச்சி நிலையத்தின் உதவிக்கும் நனறி.

தொடர்ந்து ஐந்து செயலமர்வுகளாக நடைபெற்ற இவ்வாராய்ச்சி மாநாட்டில் பல்துறைசார்ந்த பிரத்தியேக உரைகளை துறைசார்ந்தவர்கள் வழங்கினர்.

முதலாவது அமர்வின் கருவாக வின் தலைவராக பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஹஸ்புல்லா கடமையாற்றினார். இரண்டாவது அமர்வின் பிரத்தியேக உரையினை விவசாயபீடத்தின் பட்டதாரியும் கனடாவின் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த உணவு நிறுவனத்தில்கடமை புரியும் கலாநிதி எஸ். சஞ்சயன் 'பேண் தகு அபிவிருத் தியில் நீர் முகாமைத்துவம்' பற்றி உரையாற்றினார்.



பிரத்தியேக உரையை விவசாய பொருளியலாளரான சேனாரத் டீ சொய்சா '2013 ஆம் ஆண்டில் 23 மில்லியன் மக்களுக்கு எப்படி உணவு கொடுக்கப் போகின்றோம்' என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

ஐந்தாவது அமர்வின் கருப்பொருளாக பயிருற்பத்தி தொழில் நுட்பமும் கால்நடை முகாமைத்துவமும்' சிறப்பாக நடைபெற்றது.

இந்த அமர்வின் தலைவராக விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தரும் திருநெல்வேலி ஆராய்ச்சி நிலையத்தின் தலைவருமான கலாநிதி ரி. கருணைநாதன் கடமையாற்றினார். இந்த அமர்வின் பிரத்தியேக உரையினை' இலங்கையை மையப்படுத்திய வரண்ட வலய விவசாயம்' என்னும் தலைப்பில் கிழக்குப்பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருச்செல்வம் உரையாற்றினார்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 62

பலரும் இணைந்து இம்மாநாட்டினை சிறப்பாக நடத்தி முடித்திருக்கின்றார்கள். ஆராய்ச்சி மாநாட்டின் மேடைசிறந்தமுறையில் பூக்களையும் மரத்தின் பகுதிகளையும் இணைத்து இயற்கையான பசுமையை பிரதிபலிக்கும் வகையில் கலாநிதி திருமதி சிவச்சந்திரனின் புத்தாக்கத்தில் மாணவர்கள் இணைந்து அழகுபடுத்தியிருந்தார்கள். மண்டபத்திற்கான இடவசதி போதாமையிலும் ஆய்வு மண்டபம் சிறப்பாக உருவாக்கப்பட்டிருந்தது. பேராசிரியர் எஸ்.ரொபினின் வருகை யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் துாதரகத்தின் அனுசரணையுடன் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது.

இத்தகைய முயற்சிகளுக்கு என்றும் முன்னின்று கைகொடுக்கும் இந்திய துணைத்துாதுவர் ஆ.நடராஜனுககு விவ்சாய பீடம் நன்றி தெரிவிக்கின்றது. அத்துடன் பல்வேறு வகைகளில் விவசாய பீடத்தின் ஆரம்பத்தில் இடந்தந்து "காலநிலை மாற்றம் சூழல் முகாமைத்துவம் மற்றும் சுத்தமான விவசாயம்' ஆகவும் தலைவராக முன்னைநாள் விவசாய பீடாதிபதியும் முன்னைநாள் பயிரியில் இணை பேராசிரியருமான இராசதுரை கடமையாற்றினார். முதலாவது பிரத்தியேக உரையை இலங்கையின் மாறவில என்னுமிடத்தில் உள்ள பசுமைபண்ணையின் (Green Farms Pvt. Ltd) பணிப்பாளர் ஆன் சுவினிஞ்ஞன் 'வருங்காலத்தை நிர்ணயிக்கும் வர்த்தக பூங்கனியியலின் போக்கு அடுத்தது என்ன?' என்பது பற்றி உரையாற்றினார். விவசாயபீட உயிரியல் துறையுடன் 20 வருடங்களுக்குமேலாக தொழில் நிறுவமொன்று ஆய்வினை மேற்கொள்ள வசதியளித்து பலமாணவர்களுக்கு பயிற்சிபெறவும் ஆய்வினை மேற்கொள்ளவும் வாய்ப்பளித்த இதன் பொறுப்பாளர்ஆன் சுவினிஞ்ஞனின் உந்துதலினால் பலமாணவர்கள் தேர்ச்சி பெற்று வெளியேறியிருக்கின்றார்கள். இரண்டாவது அமர்

மூன்றாவது அமர்வின் கருத்தாக' விவசாய பொருளியல், விரிவாக்கம் மற்றும் பயிர் பாதுகாப்பு என்னும் கருத்துக் கொண்டு அதன தலைவராக பிராந்திய விவசாய ஆராய்ச்சிநிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஜே.அரசகேசரி கடமையாற்றினார்.

மூன்றாவது அமர்வின் பிரத்தியேக உரையினை 'பேராசிரியர் சிவயோகநாதன் ' விவசாய விரிவாக்கத்தை மையப்படுத்தி இலங்கையின் உள்ளுர் உணவு உற்பத்தியில் விவசாய தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொடர்பாடலின் முக்கியத்துவம்' பற்றி உரையாற்றினார். மாலையில் மாணவர்களின் கலைநிகழ்வுகள் இனிதே நடைபெற்றது.

இரண்டாம் நாள் ஆரம்ப நிகழ்வின் கருவாக "உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்,மண் விஞ்ஞானம் மற்றும் போசாக்கு முகாமைத்துவம்' ஆகும். இந்த அமர்வின் தலைவராக பேராசிரியர் வி.பி.சிவநாதன் கடமையாற்றினார்.

இரண்டாவது நாள் மாலையில் சிறப்பு கருத்தரங்கு அமர்வும் அதனுடனிணைந்த மதிப்பீட்டு செயலமர்வும் நடைபெற்றது. பலவிடயங்களை உள்வாங்கி சிறப்பாக நடைபெற்ற இந்த ஆராய்ச்சி மாநாடு விவசாய பீடத்தின் முன்னகர்வுக்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல் இருந்ததென கூறலாம். பலதரப்பட்டவர்களுடைய பங்களிப்புடன் இவ்வாராய்ச்சி மாநாடு நடைபெற்றிருப்பது மாணவர்களையும் ஆசிரியர்களையும் இன்னும் அராய்ச்சியில் ஈடுபட ஊக்கமளிப்பதாக இருந்தது.

பீடம் கிளிநொச்சிக்கு நகர்ந்து ஒருவருடத்திற் குள்ளேயே இவ்வாறான மாநாட்டை நடத்தி வரண்டவலய ஆராய்ச்சிக்கு வித்திட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகவும் இன்னும் ஊக்கமளிப்பதாகவும் உள்ளது. பீடத்தின் பணிசிறக்க அனைவரும் ஒன்றுபடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை செய்ய மறுத்த சிறுவனுக்கு நேர்ந்த கொடுமை

## 15 நாட்களின் பின் மரணம்; அமெரிக்காவில் திகில்

**அமெரிக்காவின் குவாத்தமாலா பகுதியில் கொலை செய்ய மறுத்த 12 வயது சிறுவனை 450 அடி உயரத்தில் உள்ள கட்டடத்தில் இருந்து தள்ளி விட்டு கொலை கார கும்பல் ஒன்று பழி தீர்த்துள்ளது.**



மத்திய அமெரிக்காவில் அமைந்துள்ள குவாத்தமாலாவில் பாடசாலையில் இருந்து திரும்பி வந்து கொண்டிருந்தான் 12 வயதான ஏஞ்சல் ஏரியல் பெரிஸ்.

அப்போது மறைந்திருந்த கொலை கார கும்பல் ஒன்று சிறுவனை பிடித்து மிரட்டி. அப்பகுதியில் பேருந்து ஓட்டுநர் ஒருவரை கொலை செய்ய கட்டாயப்படுத்தியுள்ளது.

இதற்கு மறுப்பு தெரிவித்த சிறுவனை தண்டிக்கும் பொருட்டு அவனுக்கு இரண்டு வாய்ப்புகளை அந்த கும்பல் வழங்கியுள்ளது.

அதில் மத்திய அமெரிக்கா பகுதிகளில் பயன்படுத்தும் மச்செற எனப்படும் அகலக்கத்தியால் மரண மடைவது. அல்லது உயரமான பாலத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொள்வது.

சிறுவன் பாலத்தில் இருந்து குதித்து சாவதை விரும்புவதாக தெரிவிக்கவே, அந்த கும்பல் அவனை 450 அடி உயரம் கொண்ட ஒரு பகுதிக்கு இட்டுச்சென்று அங்கிருந்து தள்ளி விட்டுள்ளது.




குதித்த சிறுவன் அங்கிருந்த மரக் கிளைகளில் சிக்கி படுகாயமுற்று புதரின் நடுவே விழுந்து கிடந்துள்ளான்.

பாடசாலை விட்டு திரும்பிய மகனை காணவில்லை என தேடி அலைந்த அவனது தந்தை மீட்பு படையினரின் உதவியால் மூன்று நாட்களின்பின்னர் கண்டு பிடித்தார்.

உயரமான அமைப்பில் இருந்து மீட்பு படையினருடன் வந்து சிறுவனை மீட்ட தந்தை குற்றுயிராக கிடந்த சிறுவனை உடனடியாக மருத்துவமனையில் அனுமதித்தார். ஆனால் சிகிச்சை பலனின்றி சிறுவன் 15 நாட்கள் கடந்து உயிரிழந்துள்ளான்.

இந்த வழக்கு குறித்து உரிய விசாரணை நடத்தப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (3-7)

## மீட்புப் படகு மோதியதில் கிரேக்கத்தில் 8 பேர் மாயம்


© Danilo Balducci/REX Shutterstock


© REUTERS

கிரேக்கத் தீவான லெஸ்பொஸ் அருகில் குடியேற்றவாசிகளை ஏற்றி வந்த படகொன்று கிரேக்க மீட்புக் கப்பலுடன் மோதி நேற்று முன்தினம் வியாழக்கிழமை விபத்துக்குள்ளானதில் குறைந்தது 8 குடியேற்றவாசிகள் காணாமல் போயுள்ளனர். அதேசமயம் அந்தப் படகில் பயணித்த 31 குடியேற்றவாசிகள் மீட்கப்பட்டுள்ளனர்.


இந்நிலையில் கடலில் காணாமல்போயுள்ளகுடியேற்றவாசிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் கிரேக்க மற்றும் போர்த்துக்கேய ரோந்து கப்பல்கள் ஈடுபட்டுள்ளன.

லெஸ்பொஸ் தீவுக்கு அப்பால் குடியேற்றவாசிகளை ஏற்றி வந்த பிறிதொரு படகு கடந்த புதன்கிழமை மூழ்கியதில் சிறுமியொருவரும் குழந்தையொன்றும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை சட்டவிரோதமாக படகுப் பயணத்தை மேற்கொண்டு 4 இலட்சத்து 50ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியேற்றவாசிகள் கிரேக்கத்தை வந்தடைந்துள்ளனர். (3-7)




## விமானத்திலிருந்து விழுந்த பனிக்கட்டியால் கூரை சேதம்



வீட்டின் கூரை மீது வானத்தில் இருந்து உதைபந்து அளவில் பனிக்கட்டி விழுந்து நொறுங்கிய சம்பவம் பிரித்தானியாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் எஸ்செக்ஸ் பகுதியில் குடியிருக்கும் பெற்றிறி டெல் என்பவர் சம்பவத்தின் போது சமையலறையில் இருந்ததாக கூறப்படுகிறது.

அப்போது. திடீரென பயங்கர சத்தத்துடன் பொருள் ஒன்று வீட்டின் கூரை மீது விழுந்தது தெரிய வந்தது.

பயத்தில் அலறியபடி அவர் வெளியே வந்து பார்த்தபோது. அருகாமையில் உள்ளவர்கள், அது பனிக்கட்டி எனவும், கூரையில் விழுந்து சிதறியதை கண்டதாகவும் தெரிவித்துள்ளனர்.


இதுகுறித்து விசாரித்ததில், கூரை மீது விழுந்த அந்த பனிக்கட்டு விமானத்தில் இருந்து விழுந்ததாகவும், இந்த ஆண்டு மட்டும் இது போன்று 25 நிகழ்வுகள் நடந்துள்ளதாகவும் விமான போக்குவரத்து ஆணையம் தெரிவித்துள்ளது.

பல ஆயிரம் அடி உயரத்தில் விமானம் பறக்கும்போது அதன் மேற்பரப்பில் பனி உருவாவதாகவும், விமானம் வெப்பமான காற்றுப்பகுதிக்கு இறங்கும் போது அவை உடைந்து விழுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் பெற்றிறிடெல் குடும்பத்தினர் எவருக்கும் எந்த வித காயமும் ஏற்படவில்லை. ஆனால் அவர்களது மாடி அறையின் கூரையில் உதைபந்து அளவில் ஓட்டை விழுந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பாக காப்பீட்டு தொகை ஏதும் கிடைக்க வாய்ப்பு உண்டா என பெற்றி குடும்பத்தினர் விசாரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (3-7)

## கையடக்க தொலைபேசியை விழுங்கி சிறைச்சாலைக்குள் கடத்த முயற்சி



கையடக்கத்தொலைபேசியொன்றையும் அதற்கான இரு மின்னேற்றி உபகரணங்களையும் (சார்ஜர்) விழுங்கிக் கடத்த முயன்ற கைதியொருவர் வசமாக அதிகாரிகளிடம் சிக்கிய சம்பவம் பிரேசிலில் இடம்பெற்றுள்ளது.

மாலைவேளையொன்றில் சிறைச்சாலையிலிருந்து வெளியில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டதையடுத்து. மேற்படி கைதி கையடக்கத் தொலைபேசியையும் உபகரணங்களையும் விழுங்கி சிறைச்சாலைக்குள் கடத்த முயற்சித்துள்ளார்.

இந்நிலையில் அந்நாட்டுத் தலை நகர் பிரேசிலியாவில் பபுடா சிறை ச்சாலையிலுள்ள எக்ஸ்ரே ஊடு காட்டும் கருவியை அவர் கடந்து சென்ற போது. அவரது வயிற்றில் கையடக்கத்தொலை பேசிகளும் ஏனைய உபகரணங்களும் இருப்பது அம்பலமாகியுள்ளது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - பாகிஸ்தான் வாக்குவாதம்

## ஐ.நா. பொதுச்சபையில் பரபரப்பு





**(நியூயோர்க்)**

**அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் காஷ்மீர் பிரச்சினையை பாகிஸ்தான் தூதர் மாலீஹா லோதி நேற்று முன்தினம் எழுப்பியுள்ளார். இதனால் பரஸ்பரம் கருத்து மோதல் களைகட்டியிருந்தது.**

இது குறித்து பாகிஸ்தான் தூதர் பேசும்போது, "காஷ்மீர் பிரச்சினையில் காஷ்மீர் மக்கள் ஒருங்கிணைந்தவர்கள் ஆவார்கள். காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் பதில் அவர்கள் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.. காஷ்மீர் பிரச்சினையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு, காஷ்மீர் மக்களுடன் கலந்தாலோசனை கூடாது என்று முன்நிபந்தனை விதிப்பது ஏற்கத்தக்கதல்ல. அது எதிர்விளைவை ஏற்படுத்தும்" என கூறினார்.

பாகிஸ்தான் தூதரின் இந்த பேச்சு, இந்தியாவுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. உடனே தனது பதில் அளிக்கும் உரிமையை பயன்படுத்தி ஐ.நாவுக்கான இந்திய தூதரகத்தின் முதன்மை செயலாளர் அபிஷேக் சிங் சூடான பதில் அளித்தார்.

அதில் அவர், காஷ்மீர் எப்போதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாகத்தான் இருந்து வந்துள்ளது. இந்த நிலைதான் என்றும் தொடரும். அதன் ஒரு பகுதியை சட்ட விரோதமாக ஒரு நாடு ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு, இத்தகைய கருத்துக்களை வெளியிடுவது விந்தையாக உள்ளது. காஷ்மீர் பற்றிய பாகிஸ்தானின் கருத்துக்கள், முறையற்றவை. அது இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையிடுவதாகும். எனவே அதை நாங்கள் முழுமையாக நிராகரிக்கிறோம்.

கடந்த சில வாரங்களில் பல முறை சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, எல்லையில் பாகிஸ்தான் தாக்குதல்கள் நடத்தி உயிர்ப்பலிகளை ஏற்படுத்தியது வருத்தம் அளிப்பதாகும் என்று கூறியுள்ளார்.

கடந்த மாதம் ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் மத்திய வெளியுறத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் பேசியதை அபிஷேக் சிங் சுட்டிக்காட்டி, "பாகிஸ்தான் பிரதமர் அளித்துள்ள 4 அம்சங்கள் இந்தியாவுக்கு தேவையில்லை. ஒரே ஒரு அம்சம் போதும். தீவிரவாதத்தை கைவிடுங்கள். நாம் ஒன்றாக அமர்ந்து பேசலாம்" என கூறியது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் தூதர் மாலீஹா லோதியின் பேச்சை தொடர்ந்து ஐ.நாவுக்கான இந்திய தூதர் அசோக் முகர்ஜி கருத்து தெரிவித்தார். அப்போது அவர், "இன்றைக்கு நாம் விவாதிக்கிற பொருளுக்கு வெளியே சென்று, பாகிஸ்தான் தூதர் பேசி இருப்பது துரதிர்ஷ்டவசமானது. பாகிஸ்தானுடன் நாங்கள் தூதரக உறவு வைத்திருக்கிறோம். அதன் வழிவில்தான் இந்த பிரச்சினைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். வேறெங்கும் எடுத்துச் செல்லக்கூடாது" என கூறினார்.

காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாவும், பாகிஸ்தானும் மோதிக் கொண்டது பரபரப்பை ஏற்படுத்தியதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (3-7)

# அமெரிக்கா - இந்தியா - ஜப்பான் வங்கக்கடலில் கூட்டுப்பயிற்சி



இந்தியா-அமெரிக்கா கடற்படை 1992-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 'மலபார்' கூட்டு கடற்பயிற்சியை மேற்கொண்டு வருகிறது. கடந்த 2005-ம் ஆண்டு ஜுன் மாதம் இந்தியா-அமெரிக்கா பாதுகாப்பு கட்டமைப்பு ஒப்பந்தத்தின்படி, இந்த பயிற்சி தொடங்கியுள்ளது.

இந்தியா-அமெரிக்கா 'மலபார்' கூட்டு கடற்பயிற்சியில் கடந்த 2007-ம் ஆண்டு முதல் ஜப்பான் கடற்படையும் இணைந்தது. 2009, 2014 ஆகிய ஆண்டுகளிலும் பயிற்சியில் பங்கேற்றது. தற்போது 4-வது முறையாக ஜப்பான் இந்த கூட்டுப்பயிற்சியில் இணைகிறது.

இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் 'மலபார்' கூட்டு கடற்பயிற்சி கடந்த ஆண்டு ஜுலை மாதம் மேற்கு பசுபிக் கடலில் நடைபெற்றது. இந்த ஆண்டு வங்காள விரிகுடா கடல் பகுதியில் நடைபெறுகிறது.

இதுகுறித்த பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சி, சென்னை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்திய கடற்படை போர்க்கப்பல்களில் ஒன்றான ஐ.எஸ.எஸ்.ஷிவாலிக் கப்பலில் நடைபெறுகிறது.

ஒவ்வொரு நாட்டின் போர்க்கப்பல்களின் செயற்பாடுகள், நீர்மூழ்கி கப்பல் தடுப்பு போர் பயிற்சி, வான் வெளி தாக்குதலை எதிர்கொள்வது, படகு ரோந்து மூலம் கடல் எல்லையில் அத்துமீறி நுழைபவர்களை கையும், களவுமாக பிடிப்பது, கடலில் மூழ்குபவர்களை தேடுவது, மீட்பது உட்பட பயிற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

வங்காள விரிகுடா கடல் பகுதியில் எங்கு பயிற்சி அளிக்கப்படும் என்ற தகவல் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. எனினும் அந்தமான் சர்வதேச கடல் எல்லை பகுதியில் முகாமிட்டு 3 நாட்டு கடற்படை வீரர்களும் கூட்டு கடற்பயிற்சி. போர் பயிற்சி ஒத்திகைகளையும் மேற்கொள்ள திட்டமிட்டு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

மலபார் கடற்பயிற்சியில் கலந்து கொள்ளும் இந்திய நாட்டின் ஐ.என.எஸ்.ஷிவாலிக். ஐ.என்.எஸ்.பேத்வா ஆகிய 2 போர்க்கப்பல்களும். அமெரிக்க நாட்டின் யு.எஸ்.எஸ். போர்த் வோர்த். ஜப்பான் நாட்டின் ஜெ.எஸ்.பியூஜிகி ஆகிய போர்கப்பல்களும் சென்னை துறைமுகத்தில் நேற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

அந்த போர்க்கப்பல்களின் செயற்பாடுகள் குறித்து அந்தந்த நாட்டின் கடற்படை அதிகாரிகள் பத்திரிகையாளர்களுக்கு விளக்கம் அளித்தனர். (3-7)

# மசூதி மீது மனித வெடிகுண்டு நைஜீரியாவில் 42 பேர் பலி



(அபுஜா)


நைஜீரியாவின் போர்னோ மாகாணத்தின் தலைநகரான மைடுகுரியில் மோலாய் என்ற பகுதியில் உள்ள மசூதியில் நிகழ்த்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலில் 42 பேர் உடல் சிதறி பலியாகினர்.

அந்த மசூதியில் தொழுகை நடந்து கொண்டிருந்தபோது, உடலில் வெடிபொருட்களுடன் மசூதிக்குள் சென்ற ஒரு மர்மநபர் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்தான். அடுத்த சில நிமிடங்களில் மேலும் ஒருவர் தனது உடலில் இருந்த குண்டுகளை வெடிக்க வைத்துள்ளார்.

இந்த தாக்குதலில் மசூதி கட்டடம் முற்றிலும் இடிந்து தரைமட்டமாகிப் போனது. மசூதிக்குள் இருந்த அத்தனை பேரும் இந்த தாக்குதலில் பலியானதாகவும், அந்த இடத்தில் இருந்து 42 சடலங்கள் கொண்டு செல்லப்பட்டதாகவும் அருகாமையில் உள்ள கடைக்காரர்கள் தெரிவித்தனர்.

எனினும், இந்த தாக்குதலில் 14 பேர் மட்டுமே தொல்லப்பட்டதாக பொலிஸார் கூறுகின்றனர். மீதிப் பேர் மசூதி இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (3-7)

# பாகிஸ்தானில் 3 நாளில் இருபது பேருக்கு தூக்கு



பாகிஸ்தான் பெஷாவர் பாடசாலையில் தீவிரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலுக்கு பிறகு பாகிஸ்தான் பெருமளவிலான குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனையை நிறைவேற்றி வருகிறது.

அந்தவகையில், கடந்த 2 நாட்களைப் போலவே 3-வது நாளான நேற்றும் 6 பேருக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. பஞ்சாப் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள சிறைச்சாலைகளில் இவர்களுக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


கடந்த 3 நாட்களில் மட்டும் 20 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் முதல் இதுவரை 260-க்கும் மேற்பட்டவர்களுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிய தீர்வு வேண்டும்

## சைதன்யா சுவாமிகள் வலியுறுத்து

**இலங்கையில் வாழும் இந்துக்களுக்கு எதிராக நடைபெற்று வருகின்ற அநீதிகளுக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும் என யாழ். சின்மயா மிஷன் சுவாமிகள் ஜாக்ரத சைதன்யா வலியுறுத்தியுள்ளார்.**



இதனை முன்னிட்டே இலங்கை இந்து அமைப்புகளின் கூட்டமைப்பு ஊடாக 1008 ஆலயங்களில் விசேட பிரார்த்தனை வழிபாடுகள் நாடளாவிய ரீதியில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதற்கமைய யாழ். நல்லூர் ஆலய முன்றலிலும் மேற்படி பிரார்த்தனை நேற்றைய தினம் இடம்பெற்றது.

இந்து சமயப் பெரியார்கள் மற்றும் இந்நிகழ்வில் சின்மயா மிஷன் சுவாமிகளான ஜாக்ரத சைதன்யா சுவாமிகளும் கலந்து கொண்டார்.

எல்லா மதத்தவரையும் அரவணைத்து செல்கின்ற எமது இந்து மதம் இன்று ஏனையவர்களால் அவமதிக்கப்படுவது கவலைக்குரியது.

இந்த நிலை மாற்றப்பட வேண்டும். எல்லோரும் எல்லா மதத்தினரையும் மதித்து அன்பு செலுத்த வேண்டும் என்ற நோக்கம் கொண்டு மேற்படி பிரார்த்தனைகள் இடம்பெறுகின்றன.

இந்நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து இந்து ஆலயங்களிலும் இடம்பெற்றது.

இதனை வலியுறுத்தும் முகமாக இன்று சனிக்கிழமை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் முன்பாக அறவழி ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்து குருமார்கள், இந்து அமைப்புகளின் தலைவர்கள், ஆலய அறங்காவலர்கள் மற்றும் இந்து சமய பெரியோர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இந்துக்களுக்கெதிரான நடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்

## யாழ். இந்து சமயப் பேரவை கோரிக்கை

இலங்கையில் உள்ள இந்துக்களுக்கெதிராக நடத்தப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக தடுக்குமாறு யாழ். இந்து சமயப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இந்து சமயப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் திருநாட்டின் அரசியலமைப்பு சகல மதங்களின் உரிமைகளையும் நன்கு பேணிப்பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ள போதும் அவற்றைப் புறந்தள்ளிவிட்டு முஸ்லிம் மக்கள் அண்மையில் கொழும்பு பாபர் வீதி மாரியம்மன் கோவில் தேர்த்திருவிழாவை நடத்த விடாது தடுத்த செயல் மனித குலத்திற்கு மாபெரும் இழுக்கை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சாசனம் மத சுதந்திரத்தை நன்கு பேணும் வகையில் வலியுறுத்தியுள்ளமையை சம்பந்தப்பட்டவர்கள் சரியாகப் புரிந்து கொண்டு உலக நீதிக்கு மதிப்பளிக்கப் பழகிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன், இலங்கையில் முஸ்லிம் மக்களை தமிழ் மக்கள் தமது சகோதரர்களாகக் கருதி வாழ்வதை நன்கு அறிந்து கொண்டு இந்து மதத்திற்கு எதிரான தமது செயற்பாட்டை உடனடியாக கைவிட வேண்டும் எனமேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்துக்களுக்கெதிராக இடம்பெற்று வருகின்ற அநீதிகளுக்கு தீர்வு வேண்டி நாடளாவிய ரீதியில் நேற்று இடம்பெற்ற பிரார்த்தனை வழிபாட்டில் யாழ். இந்து சமயப் பேரவை பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அடுத்த வருட ஆரம்பத்தில் மீண்டும் போர்ட் சிட்டி திட்டம் செயற்படும்

கொழும்பு போர்ட் சிட்டி தொடர்பான சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கை திருப்திகரமாக காணப்படுவதால் எதுவித தடையுமின்றி போர்ட் சிட்டி திட்டம் அடுத்த வருட ஆரம்பத்தில் மீண்டும் செயற்படத் தொடங்கும் என பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் எரான் விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கம் மேற்கொண்ட சூழல் பாதிப்பு மதிப்பீடுகள் போலியானவை என குறிப்பிட்டு நல்லாட்சி அரசாங்கம் போர்ட் சிட்டி திட்டத்தை இடைநிறுத்தி வைத்திருந்தது.

தற்பொழுது குறித்த மதிப்பீட்டு அறிக்கை தயாராகியுள்ளது. அதனை கரையோர பாதுகாப்பு திணைக்களத்திடம் அனுப்பிய பின்னர் அந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அந்த அறிக்கை திருப்திகரமானதாக காணப்படுவதால் அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்ற பின்னர் போர்ட் சிட்டி திட்டத்தை தொடருவோம்.

அனைத்தும் திருப்திகரமானதாக காணப்பட்டால், அடுத்த வருட ஆரம்பத்தில் போர்ட் சிட்டி திட்டம் மீண்டும் செயற்படத் தொடங்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-7-10)


# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

வட இலங்கைச் சங்கீத சபை ஊடாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கிடையில் அண்மையில் நடத்தப்பட்ட செய்முறை மற்றும் அறிமுக பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்றும் நாளையும் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளன.

சான்றிதழ்களை பெற்றுக் கொள்ள மாணவர்கள் அனைவரும் தத்தமது சாதனைக் குறிப் பேட்டைக்கொண்டு வருதல் வேண்டும் எனசபையின் பொருளாளர் வி. சிவஞானசேகரம் அறிவித்துள்ளார். (இ-5)

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கண்டியை ஆண்ட கடைசி தமிழ் மன்னன் 12



கண்டியை ஆண்ட தமிழ் கடைசி மன்னன் விக்கிரமராச சிங்கன்

...அவர்கள் இருவரும் வெள்ளையரிடம் தஞ்சம் அடைந்தனர்.

வெள்ளையர்கள், அந்த இருவருக்குக்கும் அடைக்கலம் கொடுத்து, யாழ்ப்பாணக் கோட்டையில் வைத்துப் பாதுகாத்து வந்தனர்.

### வெள்ளையருக்குத் தூது

நாட்கள் சென்றன. மந்திரி சொன்னபடி எல்லாம் விக்கிரமராச சிங்கன் கேட்கவில்லை. நீதியுடனும் நேர்மையுடனும் ஆட்சி புரிந்தார்.

இதனால் ஆத்திரம் அடைந்த மாதிரி பிலிமைத்தலா, எப்படியாவது சீக்கிரத்தில் மன்னனாகி விடவேண்டும் என்று துடித்தான்.

அவனுடைய மூளை குறுக்கு வழியில் வேலை செய்தது. மன்னனைக் காட்டிக்கொடுக்கவும் வெள்ளையருக்குத் துணைபோகவும் முடிவு செய்தான்.

கரையோரப் பகுதியில் முகாமிட்டிருந்த வெள்ளைக்கார அதிகாரிகளுக்கு தூது அனுப்பினான்.

நீங்கள் கண்டி யைக் கைப்பற்றிக் கொள்ளுங்கள். நான் உங்களுக்கு உதவி செய்கிறேன் என்று தெரிவித்தான்.

இது சம்பந்தமாக ஆங்கிலப் படைத் தளபதிகளுடன் அவன் ரகசிய பேச்சு நடத்தினான்.

அவன் தெரிவித்த யோசனைப்படி கண்டியை முற்றுகையிடுவது என்று வெள்ளையர்கள் முடிவு செய்தனர். மக்டோவல் என்ற ஆங்கிலேய படைத் தளபதி தலைமையில் 3 ஆயிரம் இராணுவ வீரர்கள் கண்டிக்கு வந்து முற்றுகையிட்டனர்.

வெள்ளையரை எதிர்க்க அந்த சமயத்தில் போதுமான படைகள் கண்டி அரசரிடம் இல்லை.

எனவே பாதுகாப்பைக் கருதி அவர் ரகசியமாகத் தப்பிச்சென்றார்.

அங்குறாங் கோட்டை என்ற இடத்திற்குச் சென்று பதுங்கிக் கொண்டார்.

மன்னரைக் காணவில்லை என்ற தகவல் பரவியது. போர் செய்யாமலேயே வெற்றி பெற்றுவிட்டதாக வெள்ளையர்கள் கொக்கரித்தனர்.

முன்னாள் மன்னரால் தனது வாரிசு என்று அறிவிக்கப்பட்ட முத்துசாமி, வெள்ளையரிடம் அடைக்கலம் புகுந்திருந்தார் அல்லவா?

அவர்தான் இனி கண்டி மன்னன் என்று தளபதி மக்டோவல் 8-7-1803 அன்று பிரகடனம் வெளியிட்டார்.

### ஏமாற்றம்

வெள்ளையர்கள் தன்னை மன்னன் ஆக்குவார்கள் என்று எண்ணியிருந்த மந்திரி பிலிமைத்தலா, ஏமாற்றம் அடைந்தான்.

வெள்ளைக்கார தளபதிக்கு இரகசிய கடிதம் ஒன்றை அனுப்பினான்.


கண்டிக்கு என்னை மன்னன் ஆக்குங்கள் உங்களுக்கு உதவியாக இருப்பேன் என்று அதில் தெரிவித்திருந்தான்.

இதற்கு வெள்ளைக்கார தளபதி பதில் அனுப்பினான். பிலிமைத்தலாவை மன்னனாக்க 3 நிபந்தனைகளை வெள்ளையர்கள் விதித்தனர்.

1. தலைமறைவாக இருக்கும் விக்கிரமராச சிங்கனைத் தேடிக் கண்டுபிடித்து வெள்ளையர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.
2. முத்துச்சாமியை வன்னிப் பகுதிக்கு அரசனாக்க வேண்டும்.
3. வெள்ளையர்களுக்குச் சில பகுதி நிலங்களைக் கொடுக்க வேண்டும்.

கொழும்பில் இருந்து திருகோணமலைக்குச் சாலை போட தேவையான வசதிகளைச் செய்துதர வேண்டும்.

மேற்கண்ட மூன்று நிபந்தனைகளையும் வெள்ளையர் விதித்தனர்.



அதற்கு பிலிமைத்தலா சம்மதம் தெரிவித்தான்.

இந்தச் சமயத்தில் யாரும் எதிர்பாராத ஓர் அதிசயம் நிகழ்ந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியை விமர்சிப்போரை வெளியேற்றும்

# காலம் நெருங்கிவிட்டது

## மஹிந்த அமரவீர அறிவிப்பு

(கொழும்பு)



**ஜனாதிபதியை விமர்சிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களை வெளியேற்ற வேண்டிய காலம் நெருங்கிவிட்டதாக தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர முன்னணியில் இனவாதிகளின் செயற்பாடுகளின் காரணமாகவே பொதுத் தேர்தலில் சிறுபான்மை இன மக்களின் நம்பிக்கையை இழந்து தோல்வி கண்டோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.**

இது தொடர்பாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவிக்கையில், ஐ.நாவிலும் ஜெனிவாவிலும் எமக்கெதிராக சர்வதேச விசாரணையை தடுத்தவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆவார். ஜனாதிபதியின் முயற்சியினால் இன்று சர்வதேச அழுத்தங்களிலிருந்து நாமும் மக்களும் பாதுகாக்கப்பட்டு உள்ளக விசாரணை இடம் பெறவுள்ளது.

ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் இனவாதக் கட்சிகள் உள்ளக விசாரணை இல்லையென்றும் சர்வதேச விசாரணையே இடம்பெறப் போவதாகவும் பொய்யான பிரசாரங்களை முன்னெடுக்கின்றன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் ஜனாதிபதி ஆவார்.

எனவே அம்முன்னணியில் அங்கம் வகித்துக் கொண்டு வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் இன்று ஜனாதிபதியின் தூரநோக்குடனான செயற்பாடுகளை எதிர்க்கின்றனர், விமர்சிக்கின்றனர். இதற்கு இடமளிக்க முடியாது. எனவே இன்னும் இவ்வாறானவர்களை எமது முன்னணிக்குள் இணைத்துக் கொள்வதா? வெளியேற்றுவதா? என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# நான் பதவியிலிருந்து ஓய்வுபெற்றதும் சொந்த ஊருக்குச் சென்று விடுவேன்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

பதவியிலிருந்து ஓய்வுபெற்றதும் சொந்த ஊரான பொலநறுவைக்கு சென்று எனது வீட்டில் வசிப்பேனே தவிர ஜனாதிபதிக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வசிக்க மாட்டேன் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையின் நிலத்துக்கடியில் உள்ள இரண்டு மாடிக் கட்டட பராமரிப்பு செலவை தவிர்க்க முடியாதுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கை பத்திரிகை நிறுவனப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

நான் ஓய்வு பெற்ற பின்னரும் தற்போது நான் பயன்படுத்தும் கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலேயே வசிக்கப் போவதாக பிழையான செய்திகள் வெளிவந்துள்ளதோடு, அந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை புனரமைப்பதற்கு பெருமளவில் பணம் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது.

இப் பிரசாரங்களில் எந்தவிதமான உண்மையும் கிடையாது. கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்கு நான் செல்லவில்லை அங்கு வசிப்பதற்கு போயிருந்தால் பராமரிப்பு செலவு மிகவும் அதிகமாகும். அதன் மின்சாரக் கட்டணம் மட்டும் மாதமொன்றுக்கு 15 மில்லியனாகும். எனவே மாளிகையை வைபவங்களுக்கு மட்டுமே பயன்படுத்துகின்றேன். இதற்காக மாதம் 30 இலட்சம் ரூபா மின்சாரத்திற்கு செலவாகின்றது.

இம் மாளிகையின் நிலத்துக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு மாடிக் கட்டடத்தை பராமரிப்பதற்கான செலவு தவிர்க்க முடியாத செலவாகவுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் மட்டுமல்ல அதனோடு தொடர்புபட்ட ஏனைய நிறுவனங்களினதும் வீணான செலவுகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7-10)

# முகத்தைக் கடித்ததால் சேயாவை கொன்றேன்

## சந்தேக நபர் வாக்குமூலம்



துஷ்பிரயோகம் செய்யும்போது தனது முகத்தைக் கடித்த காரணத்தாலேயே கொட்டதெனியாவ சிறுமி சேயாவின் கழுத்தை நெரித்துக் கொலைசெய்ததாக கொண்டயாவின் அண்ணன் தெரிவித்துள்ளார்.

கொட்டதெனியாவ சிறுமி சேயா படுகொலை தொடர்பில் தற்போது கொண்டயா எனப்படும் துனேஷ் பிரியசாந்த, அவரது அண்ணன் சமன் ஜயலத் ஆகியோர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் சேயாவின் உடலில் காணப்பட்ட காயங்கள் மற்றும் தலைமுடி என்பவற்றோடு சமன் ஜயலத்தின் டி.என்.ஏ. பொருந்துவதாக கடந்த புதன்கிழமை நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் நேற்று முன்தினம் கொண்டயாவின் சகோதரர் சமன் ஜயலத் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை. எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள வழக்கு விசாரணையின்போது கொண்டயா மற்றும் சமன் ஜயலத் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

சிறுமி சேயாவின் கொலையை சமன் ஜயலத் செய்தார் என்பது உறுதியாகியுள்ள நிலையில், 19 ஆம் திகதியே அவருக்கான தண்டனையும் அறிவிக்கப்படவுள்ளது.

இதற்கிடையே சேயாவின் அம்மாவை வன்புணர்வுக்கு உட்படுத்தும் நோக்கிலேயே அவர்களின் வீட்டுக்குள் பிரவேசித்ததாகவும், எனினும் அவரைப் பயமுறுத்த ஆயுதம் ஏதும் கிட்டாத காரணத்தினால் சேயாவை கடத்திச் சென்று துஷ்பிரயோகம் செய்ததாகவும் சமன் ஜயலத் வாக்குமூலம் அளித்துள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்போது சேயா தனது முகத்தைக் கடித்த காரணத்தினால் கழுத்தை நெரித்து கொலை செய்து, நீரோடைக்குள் வீசியெறிந்ததாகவும் சமன் ஜயலத் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வோம்

பொலிஸ்,நீதிமன்றம்,சிறைச்சாலை போன்ற துயரங்களை வாழ்வில் சந்திக்க நேரவில்லை என்றால் நாம் குற்றவாளிகள் இல்லை என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். சில சந்தர்ப்பங்களில் நாம் பொலிஸை ஏமாற் றியிருப்போம். நீதிமன்றத்தின் தீர்ப்பை விட நம்மைப்பற்றிய நமது தீர்ப்பு முக்கியமானது.நமது யோக்யதை நமக்குத் தெரியும். தவறுகளை ஒத்துக்கொள்ளாதவன் திருந்தவே முடியாது.

செத்தபிறகு தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியாது. அடுத்த பிறவியில் அதற்கான தண்டனைதான் கிடைக்குமே ஒழிய,தவறைத் திருத்திக் கொள்ள வழிகிடையாது. எனவே, இந்தப் பிறவியின் தவறை இந்தப் பிறவியிலேயே திருத்துவது அவசியம்.சுவாசம் உடம்பில் ஓடிக் கொண்டிருக்கும் போதே தவறுகளைத் திருத்திக் கொள்ளவேண்டும்.இது குறித்தே காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்றனர். விவசாயிகள் காற்றடிக்கும் போதே நெல்மணிகளை மேலிருந்து கீழே கொட்ட தூசு, தும்பு போன்ற குப்பைகளைக் காற்று அடித்துச் செல்லும்.அது வெளிப்பொருள்.உன் மூச்சுக் காற்று உள்ளபோதே உன் தவறுகளைத் தூற்று என்பது உட்பொருள்.பதவியில் இருக்கும்போதே பணம் பண்ணக் கற்றுக்கொள் என்ற கலியுக அர்த்தமல்ல.

இப்படி பல மொழிகளைப் பாழாக்கிய பெருமை நமக்கு உண்டு.மோதிரக்கையால் குட்டுப்படு என்று ஒரு பழமொழி. மோதிரம் போட்ட கை குட்டினால் வலிக்காதா? அவமானப்பட்டாலும் பணக்காரன் மூலம் அவமானப்படுவது பெருமையா? அதன் பொருளே வேறு.எளியவரிடம் -வலிமை அற்றவரிடம் வெற்றி பெறுவதைவிட வலிமையானவரிடம் தோற்பது புகழ் தான்.மோதிரக் கை என்றால் மோதிரம் அணிந்த கை என்ற பொருள் தவறு.மோதுகிற கை அதாவது வலிமையான கை.மோதுகிற பலம் இல்லாத கையோடு மோதாதே என்பது அதன் பொருள்.

இன்னும் பல பழமொழிகள் விபரீதமாகவே ஆகிவிட்டன. சோழியன் குடுமி சும்மா ஆடுமா? என்பர்.இது தவறு. தலையில் பாரம் சுமப்பவர்கள் தலையில் துணியை வட்டமாகச் சுற்றி வைப்பார்கள்.அது சும்மாடு எனப்படும்.அதைத் தலையில் வைத்துப் பாரத்தை மேலே வைத்தால் பாரம் தெரியாது.அந்தச் சும்மாடு இல்லாமல் குடுமியையே சுருட்டி வைத்தாலும் பாரம் உறுத்தவே செய்யும்.அதனால் சோழியன் குடுமி சும்மாடு ஆகுமா?என்பது தான் உண்மைப் பழமொழி.

அவசரமாகப் பேசும் சிலர் மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே என்று பழமொழி அறிவுரை சொல்வார்கள்.மண் குதிரைக்குப் பதிலாக மண் யானை செய்து ஆற்றில்இறங்கினாலும் ஆபத்து ஆபத்துத்தான். அதன் உண்மை வடிவம் மண் குதிரையை என்பதல்ல.மண் குதிரை என்பது. குவித்து வைப்பது குதிர் எனப்படும். நெற்குதிர் உதாரணம்.ஆற்றில் சில இடங்களில் மண் குவிந்து மேடு போல இருக்கும்.மேடு என்று அதில் கால் வைத்தால் அவ்வளவுதான்.கரைந்து உள்ளே கொண்டு விடும்.மரணம் நிச்சயம்.இப்படித்தான்...குறிவைக்கத் தைக்கும் ராமசரம் என்பதைக் குருவிக்குத் தக்க இராமேஸ்வரம் என்று ஜனசமூகம் மாற்றியேவிட்டது.

பழமொழிகளை வேகம் வேகமாக மாற்றும் ஜனசமூகம், பழைய வாழ்க்கையை மாற்றாமல் விட்டது தான் சோகசமுத்திரம்.சந்தர்ப்பம் கிடைக்கும்போது தன்னைத் திருத்திக் கொள்ளாமல் விட்டுவிட்டு மறுபடி மறுபடி பிறந்து மேலும் மேலும் பாவங்களைச் செய்து எப்படித்தான் கரையேறுவது.நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பது போல், நல்ல மனிதர்கள் ஒரு வார்த்தையில் திருந்தியது உண்டு.

அவர் ஒரு முரடர்.அவரைத் திருத்துவதற்காகவே அரண்மனையில் வேலை வாங்கிக் கொடுத்துத் திருமணமும் செய்து வைத்தார் அவர் தந்தை.அரண்மனையில் இருக்கப் பிடிக்காமல் மனைவியைத் தேடி ஓடி வந்தார் அவர். வழியெல்லாம் மழை.கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. மனைவி மீது அவ்வளவு ஆசை.அவள் தாய் வீடு சென்றிருந்தாள்.இருளில் தடுமாறி ஆற்றைக் கடந்து அவள் வீட்டுக்கு அருகிலிருந்த மரத்தில் ஏறி மாடியை அடைந்து கதவைத் தட்டினார் அந்த முரடர்.திருடர் என்றே வீட்டில் எல்லோரும் பயந்தனர்.விளக்கை நீட்டிப் பார்த்த அவர் மனைவிக்குப் பகீர் என்றது.

இந்த மழையில் ஆற்றை எப்படிக் கடந்தீர்கள்? பதறினாள். ஒரு கட்டையைப் பிடித்துக்கொண்டு...பதில்.விளக்கை நீட்டினாள்.அது கட்டையல்ல...பிணம். மாடிக்கு எப்படி வந்தீர்கள்? கேள்வி பாய்ந்தது.ஆலமரத்தில் தொங்கிய விழுதைப் பிடித்தபடி...பதில் தவழ்ந்தது. ஆலமரமா?... விழுதா...பதறியபடி விளக்கை நீட்டினாள்.மரத்தில் மலைப்பாம்பு தொங்கியது.அப்படி என்ன அவசரம்?மனைவியின் கேள்வி. உன்மேல் எனக்கு அவ்வளவு ஆசை...முரடரின் பதில். ஈஸ்வரா!அழிந்து போகும் இந்த உடம்பின் மீது இவ்வளவு ஆசையா?இந்த மூர்க்கத்தனத்தை ராமநாமத் தின் மீது செலுத்தக் கூடாதா?ஒரே நேரத்தில் வானத்திலும் அவர் இதயத்திலும் மின்னல் வெட்டியது! துளஸி தாஸ் என்ற அமரகவி-ராம பக்தர் ஜனனம்.காற்றுள்ள போதே தூற்றிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தமிழ் சினிமா வரலாறு

30

## எம்.எஸ். சுப்புலட்சுமி நடித்த முதல் படம் சேவா சதனம்!

...ஆனால் மூலதனம் திரட்டுவது மிகவும் சிரமமாக இருந்தது.

இந்த சமயத்தில் சகுந்தலை படத்தைத் தயாரித்த ராயல் டாக்கீசார், சாவித்திரி என்ற



சாவித்திரியில் நாரதர் வேடம்

படத்தைத் தயாரிக்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்.

படத்தின் கதாநாயகியாக- சகுந்தலையான நடிக்க ஏற்கனவே இந்தி, மராத்திமொழிப் படங்களில் நடித்து அகில இந்தியப் புகழ்பெற்றிருந்த நடிகை சாந்தா ஆப்தே ஒப்பந்தம் ஆகியிருந்தார்.

சத்தியவானாக நடிக்கவும். டைரக்ட் செய்யவும் ஒய்.வி.ராவ் (நடிகை லட்சுமியின் அப்பா) ஒப்புக்கொண்டிருந்தார்.

நாரதர் வேடத்தில் எம்.எஸ்.நடிக்க வேண்டும் என்றும், அதற்கு சம்பளம் 40 ஆயிரம் என்றும் ராயல் டாக்கீசார் அழைத்தார்கள்.

ஆண் வேடத்தில் நடிப்பதா? என்று முதலில் எம்.எஸ். தயங்கினாலும் கல்கி பத்திரிகைக்கு மூலதனம் தேவைப்பட்டதால் நாரதராக நடிக்க சம்மதித்தார்.

சாவித்திரி படமும் அமோக வெற்றி பெற்றது.

அதில் எம்.எஸ். பாடிய ப்ருஹி முகுந் தேகி, தேவியை பூஜை செய்வாய், சொல்லு நீ குழந்தாய் முதலிய பாடல்கள் திக்கெட்டும் எதிரொலித்தன.


இந்தப் படத்தில் நடித்ததற்காக, தனக்குக் கிடைத்த 40 ஆயிரத்தை கல்கி பத்திரிகை தொடங்க கணவரிடம் கொடுத்துவிட்டார் எம்.எஸ். அந்த அஸ்திவாரத்தின் மீது எழுந்ததுதான் கல்கி பத்திரிகை.

திரை உலகிலும் பின்னர் இசை உலகிலும் புகழ்பெற்று விளங்கிய எம்.எஸ். சுப்புலட்சுமி 100 நாடுகளுக்கு மேல் அங்கம் வகிக்கும் ஐ.நா. சபையில் கச்சேரி நடத்தினார்.

ஐ.நா. சபையில் இசை நிகழ்ச்சி நடத்திய ஒரே தமிழ்ப்பாடகி எம்.எஸ் தான்.

### காந்தியடிகளுடன் சந்திப்பு

சாவித்திரி படப்பிடிப்புக்காக கல்கத்தா செல்லும் வழியில், நாகபுரியில் காந்தியடிகளை சுப்புலட்சுமியும் சதாசிவமும் சந்தித்து ஆசி பெற்றனர்.



சகுந்தலா படத்தில் எம்.எஸ்.சுப்புலட்சுமி

அன்று பிரார்த்தனைக் கூட்டத்தில் சுப்புலட்சுமியைப் பாடும்படி கேட்டுக்கொண்டார்கள்.

எம்.எஸ். சில பக்திப்பாடல்களை பாடினார். பாடல்களைக் கேட்டு மகாத்மா நெகிழ்ந்து போனார்.

பிற்காலத்தில் எம்.எஸ்.சுப்புலட்சுமியின் புகழ் நாடெங்கும் பரவியது.

காந்தியடிகளின் மனைவி கஸ்தூரிபாய் மறைந்தபின், அவர் நினைவாக நிதி திரட்டப்பட்டது.

அதற்கு எம். எஸ் சில இசை நிகழ்ச்சிகளை நடத்தி நிதி திரட்டிக் கொடுத்தார்.

அதற்கு நன்றி தெரிவித்து காந்தியடிகள் தமிழில் கையெழுத்திட்டு தன் கைப்பட கடிதம் எழுதினார்.

### மீரா

நாடு முழுவதும் எம்.எஸ். புகழ் பரவிக்கொண்டு இருந்த நேரத்தில் மக்களிடம் இறை உணர்வை வளர்க்கக்கூடிய இசைக்கு முக்கியத்துவம் இருக்கக்கூடிய படம் ஒன்றை தயாரிக்க டி.சதாசிவம் முடிவு செய்தார்.

மீரா கதையை படமாக்க முடிவு செய்யப்பட்டது.

மீராவாக சுப்புலட்சுமியும் கணவர் ராணாவாக நாகைய்யாவும் நடித்தனர்.

மீரா படப்பிடிப்பு 1944 இல் தொடங்கியது.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 298

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...அடுத்தது என்ன என்பதன் பின்னாலேயே தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கிறோம்.

பகவான் ரமண மஹரிஷி இறைவனிடம் சொல்கிறார்; நான் மிகவும் அறிவாளி. நான் என்னிடம் இருப்பதை எல்லாம் என் துன்பமயமான வாழ்வையெல்லாம் உன்னிடம் கொடுத்துவிட்டேன்.

நீயோ உன் கருணையினால் அதற்கு பதிலாக எனக்கு ஆனந்தமயமான உன் இருப்பைக் கொடுத்திருக்கிறாய்!

இந்த அறிவுபூர்வமான பரிமாற்றத்தினால் கடவுளை விட தானே மிகவும் அறிவாளி என்று கடவுளிடம் பகவான் சொல்கிறார்!

பகவானது பிரபஞ்ச இருப்புத் தன்மையை நோக்கிய நன்றியுணர்வு இத்தகைய மரியாதைக்குரியது! அது படிக்கும் பொழுதே உங்களிடம் ஒரு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றிய இன்னொரு சின்னக்கதை...

சைதன்ய மஹாபிரபுவின் ஊரிலிருந்து வந்த யாரைக் கண்டாலும் இராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவர்களது காலில் விழுந்துவிடுவார் என்று கூறப்படுகிறது.

சைதன்ய மஹாப்ரபு இந்தியாவின் ஒரு தலைசிறந்த ஞானியும் குருவும் ஆவார்.

அவர் ஏன் சாதாரணமான மனிதர்களின் கால்களில் விழுகிறார் என்று



மக்கள் அவரிடம் கேட்டனர்.

அதற்கு அவர் சொல்வார். அவர்கள் சாதாரணமானவர்களா அல்லது அசாதாரணமானவர்களா என்பது ஒரு பொருட்டல்ல.

அவர்கள் சைதன்யர் ... மான ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானிகாட்டிலிருந்து வருகிறார்கள்.

அவர்கள் அங்கிருந்து வருகிறார்கள் என்பதைக் கேட்டவுடனேயே அந்தப் பெயரே என்னுள் சைதன்யரைப் பற்றிய நினைவுகளை எழுப்பப்போதுமானதாக இருக்கிறது.

அவர்கள் என் மனதிற்குள் சைதன்யரைக் கொண்டு வந்ததற்காக அவர்கள் காலில் விழுவதன் மூலம் அவர்களுக்கு என் நன்றியுணர்வைச் செலுத்துகிறேன். அவர்களைச் சந்தித்திருக்காவிட்டால் அந்த க்ஷணங்களில் வேறெதையாயினும் ஒன்றுக்கும உதவாத விடயங்களை எண்ணிக்கொண்டிருந்திருப்பேன்.

அதனால் அவர்கள் எனக்குள் தெய்வீகமான நினைவுகளையும் கருத்துக்களையும் தூண்டிவிடும் கருவிகளாக இருக்கிறார்கள் இது தான் இராம கிருஷ்ணரின் பதில்!

சைதன்யரைப் பற்றிய எண்ணங்களைக் கொண்டு வருவதனால் இராமகிருஷ்ணர் அவர்களது கால்களில் விழுந்தாராம்!

இதை இன்று கற்பனை செய்து பார்க்க முடியுமா? அவர்கள் செய்வது எதுவாக இருப்பினும், எல்லோரையும் எல்லாவற்றையும் நன்றியுணர்வுடன் நோக்க வேண்டும் என்று இதைத்தான் நான் சொல்கிறேன்.

அவர்கள் அனைவருமே பிரபஞ்ச இருப்புத் தன்மையின் ஸ்ருதிக்கேற்ப, ஏதோ ஒரு ஒருமித்த நிகழ்வில்தான் நகர்ந்து கொண்டிருக்கின்றனர்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# தமிழ்க் கைதிகளை தீபாவளிக்கு முன் விடுவியுங்கள்

## அகில இலங்கை இந்துமாமன்றம் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு) —

**சிறைகளில் வாழும் தமிழ் அரசியல் கைதிகளையும் மற்றும் தடுப்பிலுள்ளவர்களையும் தீபாவளிக்கு முன் விடுதலை செய்யுமாறு அகில இலங்கை இந்துமாமன்றம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.**

நேற்று முன்தினம் இந்த அவசர கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த ஜனவரி 10ஆம் திகதி இந்த நாட்டிலுள்ள இந்துக்களின் சார்பாக நல்வாழ்த்துக்களைத் தெரிவித்த போது இதே வேண்டுகோளை நாம் விண்ணப்பித்திருந்தோம்.

கட்டாயத்தின் பேரில் பெறப்பட்ட வாக்குமூலத்தின் கீழ் தற்போது இந்துமத குரு ஒருவர் சிறை வைக்கப்பட்டுள்ளார். அத்துடன் பிரஸ்தாப மதகுரு தடுப்பில் இருந்தபோது எவ்வாறு தாக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார் என்பது குறித்த சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையை இத்துடன் இணைத்துள்ளோம்.

மேலும் மற்றொரு இந்து மதகுரு வானவர் நிர்பந்தத்தின் கீழ் மிரட்டி பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் விசாரணைகளை எதிர் கொண்டுள்ளார்.

இந்து மத குருமாருக்கு கருணை காட்டப்படவேண்டும் என்பதுடன் ஏனைய சிறைக் கைதிகளும் நீதியின் முன் நியாயமாக நடத்தப்பட வேண்டும்.

எனவே புனிதமான இந்த நவராத்திரி காலப்பகுதியில் சிறைக் கைதிகளுக்கு நீதி கிடைக்க ஆவன செய்யுமாறு விண்ணப்பிக்கின்றோம்.

கைதிகள் அனைவருக்கும் தீபாவளி தினத்திற்கு முன்னர் விடுதலையாவதற்கு ஏற்பாடு செய்யப்படுமானால் நாட்டிலுள்ள அனைத்து இந்து மக்களும் தங்களைப் பாராட்டுவார்கள் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# இளம்பெண் வைத்தியர் திடீர் மரணம் சிலாபம் வைத்தியசாலையில் பரபரப்பு

சிலாபம் மாவட்ட வைத்தியசாலையில் கடமை நேரத்தில் மயங்கி விழுந்த இளம்பெண் வைத்தியர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

பிரஸ்தாப வைத்தியர் தற்காலிகமாக சிலாபத்தில் தங்கியிருக்கின்றார். இவருடைய பெற்றோர் சவுதி அரேபியாவில் வசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் மவுண்ற்லவணியாவில் உறவினர்களுடன் இவர் தற்காலிகமாக வசித்து வருகிறார்.

அன்றைய தினம் வைத்தியசாலையில் அமைந்துள்ள உணவு விடுதியில் தனது மதிய உணவை அவர் உட்கொண்டுள்ளார். மதிய உணவை எடுத்து சற்று நேரத்தில் அவர் நோய்வாய்ப்பட்டுள்ளார். உடனடியாக வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். எனினும் அன்றிரவே அவர் மரணமடைந்துள்ளார்.

வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கென பிரத்தியேகமாக மேற்படி உணவு விடுதி செயற்பட்டு வந்துள்ளது. அத்துடன் உணவு ஒவ்வாமை காரணமாக பலர் ஏற்கனவே நோய் வாய்ப்பட்டிருந்ததாகவும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

பிரஸ்தாப வைத்தியரின் மரணத்திற்கு அவர் உட்கொண்ட உணவே காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. பொலிஸார் சம்வம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (3)

# பேஸ்புக் மூலம் தொந்தரவு அச்சுவேலி பொலிஸில் முறையீடு

அச்சுவேலி பத்தமேனிப் பகுதியில் ஆசிரியை ஒருவரை பேஸ்புக் மூலம் தன்னைக் காதலிக்குமாறு வற்புறுத்தி வந்த இளைஞர் ஒருவர் தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரஸ்தாப இளைஞர் தனது புகைப்படத்தை பேஸ்புக்கில் ஏற்றம் செய்து குறித்த ஆசிரியையை காதலிக்குமாறு கட்டாயப்படுத்தி வருவதாக அச்சுவேலி குற்றத்தடுப்புப் பொலிஸில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அச்சுவேலி நவக்கிரிப் பகுதியைச் சேர்ந்த பிரஸ்தாப இளைஞர், ஆசிரியையுடைய காதல் விபரணங்கள் உள்ளடங்கிய தனது படத்துடன் ஆசிரியையுடைய பேஸ்புக்கிற்கு பதிவேற்றம்செய்துள்ளார்.

இதனால் மனமுடைந்த பிரஸ்தாப ஆசிரியை தனது பெற்றோரின் உதவியுடன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 520

Search for people, places and things | Nagendram Home

**சுஜா சுஜலினி**

காதலிக்கும் போது பெண்கள்
சொல்லும் வார்த்தைகளுக்கான
உண்மையான அர்த்தங்கள்...!!
● I LOVE U DA
உனக்கு ஆப்பு நிச்சயம்டா
● I MISS U DA
உன்ன தொலைச்சி
கட்டப்போறேண்டா
● U R MY LIVE DA
உன் உயிர் என் கையிலடா
● I WANT TO MARRY U DA=
நீ செத்தடா மவனே
கல்யாணத்திற்குப் பிறகு
● I'M VERY LUCKY DA=
ஒரு அடிமை சிக்கிட்டாண்டா

**சுஜி சுஜீவன்**




**பாலா**




**துவாரகன்**




**அரவிந்தன்**



**செல்வரூபன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்த அரசியல் கைதிகள்?

(நேற்றைய தொடர்ச்சி....)

இந்நிலையில் அரசியல் கைதிகளை இலங்கை அரசாங்கம் விடுவிக்காமைக்கு நாட்டில் இருக்கின்ற சூழ்நிலைகளே காரணம்.

குறிப்பாக தேர்தலில் தோற்றுப்போன சில கட்சிகளும், சில பாராளு மன்ற உறுப்பினர்களும், தேசிய அரசாங்கத்தின் வீழ்ச்சிக்காக காத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில் எதிர்கட்சி தலைமைத்துவம் தமிழ் கட்சிக்கு வழங் கப்பட்ட சந்தர்ப்பங்களிலே, இனவாதத்தினை தூண்டி விட்ட இவர்கள், அரசியல் கைதிகளின் விடுதலை யினையும் விடுதலை புலிகளின் விடுதலையா கவே பார்க்கின்றார்கள்.

இந்நிலையில் இவர் களை விடுவித்தால், விடு தலை புலிகளை உருவா க்கி விடுவதாக, சில கட்சி களால் மக்களுக்கு தவ றாக கொண்டு சேர்க்கப் படும் என்பதில் அரசாங் கம் மிக கவனமாக தொழிற்படுகின்றது என்பதே நிஜம்.

குறிப்பாக இலங்கை அரசியல் வரலாற்று தேர் தல்கள் அனைத்துமே இனவாதத்தால் வெற்றி ஈட்டியவைகளே ஆகும். விதி விலக்காக கடந்த ஜனாதிபதி தேர்தலும், பொது தேர்தலும் மாறிப் போயின.

ஆகவே, இன்று சிங்கள மக்கள் மத்தியிலும் இன வாதம் சற்று குறைந்துள் ளது. ஆகவே இதனை சாத மாக வைத்து தமிழர்களின் சிறு சிறு பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதில் முனைப்பு காட்டுவதே சிறந்தது. மாறாக மீண்டும் தனி ஈழம் என கோருவ தால் அரசியல் கைதிகளும் விடுதலை புலிகளாக நிரந்தரமயமாக்கப்படுவார் கள் என்பதே உண்மை.

குறிப்பாக இந்த நாட்டின் ஒரு நல்லிணக்கம் ஏற்படுவ தற்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் புலம்பெயர்ந்து வாழும் மக்களில் ஒரு சிலர் இனவாதத்தை தூண்டி எமது விடுதலையை தாம தப்படுத்த முயல்வதாகவே எண்ணத் தோன்றுகின்றது என அரசியல் கைதிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஆகவே மீண்டும் இன வாத்தினை தூண்டி அரசி யல் கைதிகளை நிரந்தர கைதிகளாக மாற்றாமல், சிந்தித்து செயற்படுவது தமிழ் மக்களின் அனை வரது பொறுப்பாகும்.

இப்பொழுது தமிழர் களின் தேவை காணாமல் போன உறவுகள் கிடை க்கவேண்டும். சிறையில் பல ஆண்டுகளாக தம் இளமைகளை தொலைத்து வாழ்க்கையை தொலைத்து வதைகின்றவர்கள் விடுதலையாக வேண்டும்.

இதனை மனதில் நிறுத்தி தமிழ் மக்களும், தமிழ் கட்சிகளும் செயற் படுவதே காலத்தின் கட்டாய மாகும்.

இந்நிலையில் அரசியல் கைதிகளின் இந்த உண வுத் தவிர்ப்பு போராட்டம் தொடர்பில், வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக் னேஸ்வரன் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமை ப்பு விரைவில் இவர்கள் அனைவரும் பொதுமன்னி ப்பு அடிப்படையில் விடு தலை செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில், சாகும் வரையிலான உண்ணா விரதத்தில் குதித்துள்ள 14 சிறைச்சாலைகளில் உள்ள 217 கைதிகள் போராட்ட த்திற்கு என்ன சொல்லப் போகின்றது அரசாங்கம்?

இது, தனி ஈழக் கோரி க்கை அல்ல. தனி மனித கோரிக்கை. தன் குடும்ப த்துடன் இனியாவது சேர் ந்து சந்தோசத்துடன் வாழ வேண்டும் என நினைக் கும் சராசரி மனிதனின் கோரிக்கைதான் இது.

பஞ்சு மெத்தையில் படுத்துறங்கி, விடிந்ததும், கல்லெறிய பார்க்கும், சில





கல் நெஞ்சகாரர்களின் வழிபோகாமல், துள்ளி திரியும் தான் பெற்ற பிஞ்சு குழந்தைகளை தூக்கி, செல்லமாக விளையாட துடிக்கும், ஒரே நாட்டின் உடன் பிறவாத உறவுகளின கோரிக்கைதான் இந்த விடு தலை என்பதனை விளங்கி சிலர் செயற்படவேண்டும். இவர் களது கோரிக்கை களுக்கு செவிசாய்க்குமா அரசாங்கம்?

-திவ்யநாதன்-

## போர்க்குற்ற விசாரணையை புறந்தள்ளி


# உண்மை, நல்லிணக்கம் மீது கவனம் செலுத்தும் இலங்கை

(15.10.2015 அன்று வெளியான கட்டுரையின் தொடர்ச்சி....)

அதாவது உள்ளக விசாரணைப் பொறி முறைக்கு மட்டுப்படுத்தப் பட்ட அளவில் வெளி நாட்டு சட்டவாளர்கள் மற்றும் நீதிபதிகள் பங்க ளிப்பதற்கு அனுமதியளி க்கக் கூடிய புதிய சட்டம் ஒன்றும் அமுல்படுத்தப் படும் என பிரதமர் அறி வித்திருந்தார்.

ஐ.நா மனித உரிமை கள் பேரவையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானமா னது நல்லெண்ண அடிப் படையில் நிறைவேற்றப் பட்டால், பல்வேறு மீறல் களால் பாதிக்கப்பட்ட மக் கள் கடந்த சில ஆண்டுக ளாகக் காத்திருக்கின்ற உண்மை மற்றும் நீதி யைப் பெற்றுக் கொள்வதற் கான ஒரு வாய்ப்பை வழங்கும் என தென்னாசியா விற்கான அனைத்துலக மன்னிப்புச் சபையின் ஆராய்ச்சி இயக்குனரான டேவிட் கிறிபித்ஸ் குறிப்பிட்டுள் ளார்.

'இத்தீர்மானமானது இலங்கையின் மனித உரிமைகளை மேம்படு த்துவதற்கான ஒரு திருப்பு முனையாக உள்ளது. அத்துடன் இதன்மூலம் போரில் ஈடுபட்ட இரு தரப்பினர்களாலும் இழைக்கப்பட்ட பயங்கர மான குற்றங்கள் அடை யாளங் காணப்பட முடி யும். இது தொடர்பான விசாரணைப் பொறிமுறை நம்பகமாக இடம்பெறு வதை உறுதிசெய்வதற்கு அனைத்துலக கண்காணிப்பு மிகவும் அவசி யமானதாகும். அத்துடன் இவ்விசாரணைப் பொறி முறைக்கான அத்தியா வசிய திறன்கள் மற்றும் வல்லுனர்களையும் அனைத்துலக சமூகம் வழங்க வேண்டும்' என கிறிபித்ஸ் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.



இலங்கையில் பாதி க்கப்பட்ட மக்கள் உண்மை மற்றும் நீதி யைப் பெற்றுக் கொள்வதற்கான ஒவ்வொரு படி முறையிலும் அவர்களுக்கு இதயசுத்தியுடன் ஆலோசனை வழங்கப்படுகி றதா என்பதை இலங்கை அதிகாரிகளும் அனைத் துலக சமூகமும் உறுதி செய்யவேண்டும்.

அடுத்த மாதங்களில் ஐ.நா மனித உரிமைகளு க்கான உயர் ஆணையா ளர் அலுவலகமானது தொடர்ந்தும் பேரவையின் தீர்மானத்தில் குறிப்பிடப் பட்டுள்ள பரிந்துரைகள் நிறைவேற்றப்படுகின் றன என்பதையும் மீளி ணக்கப்பாடு, பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகள் அமுல் படுத்தப்படுகின்றனவா என்பதை மதிப்பாய்வு செய்யும்.

இத்தீர்மானம் எவ் வளவு தூரம் நடைமுறை ப்படுத்தப்படுகின்றது என்பதை உறுதி செய் வதற்கான புதுப்பிக்கப் பட்ட அறிக்கையை ஐ.நா மனித உரிமைகளுக் கான உயர் ஆணையா ளர் அலுவலகமானது அடுத்த ஆண்டின் நடுப் பகுதியில் இடம்பெறும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 32 ஆவது கூட்டத் தொடரில் கைய ளிக்கும் எனவும் கூறப் படுகிறது. அத்துடன் இது தொடர்பான முழுமை யான அறிக்கையானது 2017 இல் சமர்ப்பிக்கப் படும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதே.

ஏசியா ரைம்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எமது சிறுவர்களின் எதிர்காலமானது கொள்கை வகுப்பாளர்கள் கைகளில்


Dr.சிவயோகன்

நேர்காணல்:-பொ.சோபிகா

எமது சிறுவர்களின் எதிர்காலத துக்கான சிறந்த சூழலை ஏற்படுத் திக் கொடுப்பது எனபதுபெரியவர்களது கைகளிலும் கொள்கை வகுப்பாளாக ளின் மனங்களிலுமே தங்கியுள்ளது என யாழ்போதனா வைத்தியசாலை உள மருத்துவ நிபுணர் சா.சிவ யோகன் தெரிவித்துள்ளார்.

பல்வேறு விதமான சவால்களை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் எமது சமூகத்தில் சிறுவர்களின் நிலை மற்றும் எதிர்காலம் தொட் ர்பாக அவருடன் மேற்கொண்ட நேர்



காணலின் போது அவர் தொடர் ந்து தெரிவிக்கையில,

வாழ்க்கையிலும் சரி, சமூக இயங்கியலிலும் சரி நிலைமா றும் பருவங்களானவை ஆபத்து க்களை ஏற்படுத்தக் கூடிய நிலை களை அதிகமாகவுள்ள பருவங்க ளாகவே இருக்கின்றன.

அந்த வகையில் சிறுவர்களு டைய கட்டிளமைப் பருவமும் அவ்வாறானதே. பெற்றோரின் அரவணைப்பிலும் பாதுகாப்பிலும் இருந்தவர்கள் தமது விருத்திப் படிநிலைகளில் திடீரென ஏற்படும் மாற்றங்களினால் அதிகரித்த வளர் ச்சி மற்றும் விருத்திகள் ஏற்பட்டு பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருந்து மெல்ல மெல்ல வெளிவந்து சூழலு க்குள் திறந்து விடப்படுவதுடன் சிறுபிள்ளை என்கின்ற நிலையில் இருந்து படிப்படியாக வளர்ந்தவர்க ளுக்குரிய மனநிலையையும் நடத்தையையும் கொண்டதாக இக் கட்டிளமைப் பருவம் அமைந்துள் ளது.

இப் பருவமானது மிகவும் சுவா ரசியமானதும், விறுவிறுப்பான தும் பல சவால்களை தன்னகத்தே கொண்டே பருவமாகும். இப் பருவத்தினை இயலுமான அளவு ஆரோக்கியத்தையும் சிறப்பாகவும் கொண்டு செல்ல வேண்டிய பொறு ப்பு பெற்றோர்கள், சிறுவர்கள், ஆசிரியர்கள், சமூகத்தின் மற்றும் கொள்கை வகுப்பாளர்களையே சார்ந்திருக்கிறது.

இந்தப் பருவத்தைக் கடந்து செல்லும் சிறுவர்கள் தம்மிடத்தே ஏராளமான பலங்களைக் கொண்டி ருப்பார்கள். உடல் வளர்ச்சி இந்தப்ப ருவத்தல் அபரிமிதமான உடல்வலு வைக் கொடுக்கின்றன. கட்டிள மைப் பருவத்திலேயே ஒவ்வொரு வரும் தமது ஆளுமைக்குரிய இயல்புகளை வளர்த்தெடுத்து அவ ற்றை இறுதியானதாக்குகிறார் கள். எனவே தான்ஒருவருடையஆளு மையைத் தீர்மானிக்கும் இந்தப் பருவமானது மிகுந்த கவனத்தோடு வழிநடத்தப்பட வேண்டியிருக்கின் றது.

அத்துடன் இப்பருவத்தினர் மிகை உணர்ச்சிகளுக்குள் அகப்படுபவ ர்களாகவும், பின் விளைவுகளைப் பற்றித் தெரியாது யோசிக்காது முடி வெடுக்கும் இயல்புகளைக் கொண் டிருப்பவர்களாகவும் காணப்படு வர்.

கட்டிளமைப் பருவத்தினர் ஆபத து க்கள் வரலாம் என்று தெரிந்தும் பல விடயங்களில் அந்த ஆபத்தான விடயங்களைப் பரீட்சித்துப் பார்க்க விழைவர். இது ஒருவகையில் நல்ல விடயமாகத் தோன்றினாலும், அது பல்வேறு விதமான பிரச்சினைக ளையும் தோற்றுவிக்கின்றது.

**கல்வி**

எமது நாடு பொதுவாகவே அடிப் படைக் கல்வியறிவு கூடிய ஒரு நாடாகத் திகழ்கின்றது. சிறுவர்க ளும் தாங்கள் கல்வி கற்கும் போது கிடைக்கின்ற வாய்ப்புகள் அனைத் தையும் பயன்படுத்தி, கல்வியின் முழுமையை, உச்சப்பயன்பாட்டை அடைவதினை தமது இலக்காகக் கொள்ள வேண்டும்.

பாடங்களைப் படித்தல் என்பதற் கும் அப்பால் விளையாடுதல், மன்றங்கள், சங்கங்கள் போன்றவ ற்றில் இணைந்து தலைமைத்துவப் பண்புகளையும், குழுவாகப் பணிபு ரியும் அனுபவத்தையும் வளர்த் துக் கொள்ளல், தன்னார்வத்தோடு சமூகத் தொண்டுகளிலும, சிரம தானங்களிலும் கலந்து கொள்ளல் போன்ற பல விடயங்களைக் கற்றுக் கொளவதற்குப் பாடசாலைகள் துணை புரிகின்றன.

**உடல் ஆரோக்கியம்**

வளர்ந்தவர்களைப் போலல் லாது சிறுவரகளில் வளர்ச்சி மற்றும் விருத்தி என்பன மிகவும் அதிகரி த்த வேகத்திலேயே நடைபெறுகி ன்றன். எனவே சிறுவர்கள் அதற் குத் தகுந்தாற்போல் தமது உடல் ஆரோக்கியத்தினைப் பேணப் பழக வேண்டும்.

வகை வகையான உணவு களை உண்டு இரசிக்கப் பழக வேண்டும். மிகைபடாதும் குறை யேதுமின்றியும் அளவோடுண் ணல் வேண்டும்.

பாடப் படிப்பு ஒன்றே வாழ்க்கை எனத் தவறாக அர்த்தம் கொள்ளும் சிறுவர்கள் அதற்குள்ளேயே மூழ் கித் தமது வயதுக்குத் தேவையான உடல் அப்பியாசங்களைச் செய்வ தற்குத் தவறுகின்றார்கள். சில பெற் றோரும் இதனை உண ராது இருக் கிறார்கள்.

உடற்பயிற்சி என்பது, அது எந்த வடிவிலும் இருக்கலாம், வளர்ந்து வருகின்ற சிறுவர்களுக்கு மிகவும் அவசியமான ஒன்று என்பதனை நாம் மறந்து விடலாகாது. அது சிறுவர்களுக்கு மட்டுமல்ல பெரிய வர்களுக்கும் அவசியமானது.


**உள ஆரோக்கியம்**

ஆரோக்கியம் என்பது உடலில் மாத்திரம் இருந்தால் போதாது. எமது மனங்களும் ஆரோக்கியம் நிறைந்தவையாக இருக்க வேண் டும்.

மன அமைதியோடும் ஒருமை ப்பாட்டோடும் இருத்தல், சாந்தமாக பதற்றங்கள் அதிகமின்றி இருத்தல், அளவுக்கதிகம் உணர்ச்சி வசப் படாது இருத்தல், தன்னம்பிக்கை யோடு இருத்தல், புதிய சூழல், பிரச்சினைகள் என்பவற்றிற்கு முகங்கொடுத்தல் போன்ற பல இயல்புகள் உள ஆரோக்கியத்தின் வெளிப்பாடுகளாகப் பார்க்கப்படு கின்றன. இவற்றை அடைவதற்கு சிறுவர்கள் இடையறாது முயற்சிக்க வேண்டும். பெரியவர்கள் அவற்றி ற்கு ஒத்தாசையாக இருக்க வேண் டும்.

ஒவ்வொரு நாளும் ஒழுங்கான முறையில் தேவையானளவு ஓய்வு எடுத்தல், தத்தமது விருப்பு வெறுப்பு களுக்கு ஏற்றவாறு மனங்களை அமைதியாகவும் தளர்வாகவும் உணரச்செய்யும் விடயங்களில் ஈடுபடுதல், மதவழிபாடுகள், தியான ங்கள் போன்றவற்றில் ஈடுபடுதல், ஒழுங்கான முறையில் ஒவ்வொரு நாட்களையும் திட்டமிட்டு நகர்த் துதல் போன்ற விடயங்கள் உளம் ஆரோக்கியமாக இருப்பதற்கு உதவி செய்யக் கூடியன.

அத்துடன் சிறுவர்களின் உள ஆரோக்கியத்தைச் சிதைத்து விடக் கூடிய வகையில் உடல் உளத்



தண்டனைகளை வழங்குதல், அவர்களைத் துஷ்பிரயோகம் செய் தல், வீட்டிலும் வெளியிலும் வன்மு றைகள் மலிந்த சூழலை உருவா க்குதல், அவர்களுக்கான கற்றல் மற்றும் விளையாடும் வாய்ப்புக ளைத் தடுத்தல் போன்ற செயற்பாடு களை வளர்ந்தவர்கள் முற்றாகவே கைவிட வேண்டும்.

**உணர்வுகளும் உறவுகளும்**

சிறுவர்கள் கட்டிளமைப் பருவ த்தினூடு கடந்து செல்கையில் அவர்களுக்கு ஏற்படுகின்ற மன உணர்வுகள் சுவாரசியமானவை.

வளர்ந்தவர்களான பெற்றோ ரும் ஆசிரியர்களும் சிறுவர்களு க்கு நட்பு எனும் உறவு நிலை பற்றி மட்டுமல்ல, சகோதரர்களுடனான உறவு, பெற்றோருடனான பந்தம், ஆசிரியர்களுடன் ஏற்படுகின்ற உறவு, அயல்வீட்டுக்காரருடன் கொண்டிருக்கக் கூடிய நல்லுறவு போன்ற பல்வேறுவிதமான உறவு நிலைகளைப் பற்றி விரிவாகக் கலந்துரையாடுவதோடு, அவற்றின் சிறப்புகளையும், மட்டுப்பாடுகளை யும் பற்றி அவர்களுக்குப் புரிகின்ற வகையிலே எடுத்துக் கூறவேண டும். இவ்வாறான அணுகுமுறை யானது அவர்கள் தமக்குத் தேவை யான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவும், அவற்றைச் சிறந்த முறையில் வளர்த்துக் கொள்ள வும், தேவையற்ற உறவுக் குழப்பங் களுக்குள் சிக்குப்பட்டுக் கொள்ளா மல் இருந்து கொள்ளவும் உதவுகி ன்றன.

வளர்ந்து வரும் சில சிறுவர்கள் தமது வயது மற்றும் ஓமோன்க ளின் தொழிற்பாடு காரணமாக எதிர்பாலாரிடம் இயல்பாக ஏற்படும் ஈர்ப்பு நிலையினைப் பற்றிப் புரிந்து கொள்ளாது, அதனைக் காதல் எனும் ஒரு கருத்து நிலைக்குள் போட்டுக் குழப்பிக் கொள்ளப் பார்ப் பார்கள்.

அதனைத் தகுந்த எல்லைகளு க்குள் நின்று கொண்டு தொடர்வது எந்த வகையிலும் தவறாகாது. ஆயினும் அவ்வாறான ஓர் உறவைக் காதல் என்கிற ஓர் உறவாக விளங் கிக் கொள்வதும், அதனால் வெவ் வேறு பிரச்சினைகளுக்குள் சிக்கித் தவிப்பதுவும் தவிர்த்துக் கொள்ள ப்பட வேண்டியவை.

**வன்முறை**

தற்பொழுது நாம் வாழுகின்ற சூழலானது முன்னெப்போதும் இல்லாதளவிற்கு வன்முறைகள் மலிந்துள்ள ஒரு சூழலாகக் காணப் படுகின்றது.

அத்துடன் தற்பொழுது எமக்குத் திறந்து விடப்பட்டிருக்கும் தொலைத் தொடர்பு வாய்ப்புகள் மற்றும் இணையத்தள வசதிகள் மூலம் நாம் தரிசிக்கும் நிகழ்ச்சிகளும், தொலைக் காட்சித் தயாரிப்புகளும், திரைப்படங்களும் மிக ஏராளமான வன்முறைக் காட்சிகளைத் தம்மிட த்தே கொண்டிருக்கின்றன.

இவ்வாறான வன்முறைசார் நடத்தைகளின் போது பொருட்சே தங்களும், உடற் காயங்களும், மனக் காயங்களும் ஏற்படுவதுடன் வன்முறையில் ஈடுபடும் அச்சிறு வர்களின் உளச் சமநிலையும் பாதிப்படைகின்றது. சிலவேளை களில் சில சிறுவர்கள் தமது மிகை உணர்ச்சிகளைக் கையாளத் தெரி யாமல், தமக்கு எதிராக வன்முறைக ளைப் பிரயோகித்து, தமக்குத் தாமே தீங்கு செய்வதையும் அவதானிக்கலாம்.

சிறுவர்கள் தமக்கு எதிராக இழைக்கப்படக் கூடிய வன்முறை கள் தொடர்பான அறிவினைக் கொண்டிருப்பதோடு, அவற்றில் அகப்பட்டுக் கொள்ளாது தப்பிவிடக் கூடிய உபாயங்களைத் தெரிந்து கொண்டு, அவற்றிற்குத் தேவைப் படும் திறன்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆயினும், அடிப்படையில் வன் முறைக்கு எதிரான தத்துவார்த்த மான கொள்கைகளை உடைய எமது நாடும், எங்களது பண்பாடு களும், நாமும் இவ்வாறு அதிகரித் துச் செல்லும் வன்முறைகளைச் சகித்துக் கொள்ளாது, அவற்றிலிரு ந்து விடுபட்டு, அறநெறிகளில் நம்பிக்கை வைத்து, அன்பு, கருணை, காருண்யம் போன்ற நற்பண்பு களை வளர்த்தெடுக்கப் பாடுபட வேண்டும்.

**பொருத்தமான பாதை**

ஒவ்வொரு சிறுவர்களும் தனி த்துவமானவர்கள். அவர்களது விருப்பு வெறுப்புகளும், பலம் பலவீனங்களும் தனித்துவமா னவை. எனவே சிறுவர்கள் வளர் ந்து வருகின்ற போது தத்தமது இயல்புகளை அறிந்து அவற்றிற்கு ஏற்றாற்போல் தமது எதிர்காலப் பாதையைத் தீர்மானித்துக் கொண்டு அதனூடாகப் பயணஞ் செய்ய வேண்டும்.

வாழ்க்கையில் ஏனையோர் தெரிவு செய்து வெற்றி கண்ட ஒரே மாதிரியான தெரிவுகள் மேலோட் டமாகப் பார்க்கும் பொழுது பாது காப்பானவையாகத் தோன்றி னாலும், அவை ஒரு வகையில் சலிப்புத் தருகின்ற தெரிவுகளே. வாழ்க்கையை முன்னோக்கி நகர்த்த உதவும் தெரிவுகள் எத்த னையோ வகைகளிலும், வடிவங் களிலும், வண்ணங்களிலும் இருக்கின்றன எனும் யதார்த்த த்தைப் புரிந்து கொண்டு புதிய புதிய விருப்பத் தெரிவுகளுக்குப் போவது நல்லது.

**வளர்ந்தவர்களின் பொறுப்புகள்**

சிறுவர்கள் தமது இளவயதில் நல்ல அடித்தளங்களை இடுவதற் கும், பின்பு வளர்ந்து வருகின்ற போது ஏற்படுகின்ற சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வத ற்கும் வளர்ந்தவர்கள் பொறுப்பு ணர்வோடு உதவிசெய்தல்வேண்டும.

வளர்ந்தவர்கள் சிறுவர்க ளைத் தாம் நினைத்தபடி வளர்க் காமல் அந்தந்தச் சிறுவர்களின் இயல்புகளுக்கேற்ப அவற்றைத் தட்டிக் கொடுத்து தனித்துவமான வர்களாக வளர்வதற்கு உதவி செய்ய வேணடும்.

தற்காலப் பாடசாலைகளிற் பல "பிள்ளை நேயக் கல்வி" எனும் அறிவிப்புப் பலகைக்கு அப்பால் நேயங்கள் எதுவுமின்றிக் காணப்ப டுகின்றமை வேதனைக்குரியது. பிள்ளைகள் மிகச்சிறுவயதிலிரு ந்தே படிப்பு, படிப்பு, படிப்பு என்று சொல்லி அலைந்து திரிவதன் மூலம் தமது இயல்பான வாழ்க் கையையும், அவ்வாழ்க்கையின் ஊடாகக் கிடைக்கும் அடிப்படை யான அறிவு மற்றும் அனுபவங்க ளையும் தொலைத்து விடுவதற்கு எல்லா வகையிலும் வளர்ந்தவர்க ளாகிய நாமே காரணமாகின் றோம். பெற்றோர் பிள்ளைகளி டையே காணப்பட வேண்டிய இயல்பான பிணைப்பும் அனுப வப் பகிர்வும் கூடத் தற்கால வாழ க்கை முறைமைகளால் அருகிப போய்க் கொண்டிருக்கின்றன.

ஆகவே சிறுவர்களின் வாழ்வு வளம் பெறவும் அதன்மூலம் அவர்களதும், அவர்களது சமூகம் மற்றும் நாட்டினதும் சிறப்புகள் மேலோங்கவும் வளர்ந்தவர்கள் செய்ய வேண்டிய கடமைகளும் பணிகளும் ஏராளம். அவற்றை நாம் எம் மனதில் இருத்தி செய ற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கதை சொல்ல — வந்த பறவை!

வனா வானத்தையே பாத்துக்கிட்டு இருந்தா.

மேகங்கள் கொஞ்சம் கொஞ்சமா சேர ஆரம்பிச்சது.

எல்லாம் சேர்ந்து பெரிய மேகமா ஆயிடுச்சு.

கண்ண எடுக்காம பாத்துக்கிட்டே இருந்தா.

'மேகத்திலிருந்து இப்ப ஒரு பறவை பறந்து வந்தா.... எவ்வளவு நல்லா இருக்கும்?'

புதுசா ஒரு பறவையைப் பார்க்க வனா ஆசைப்பட்டா.

வனாதான் கதசாமிக்கு ரொம்ப நெருக்கமாச்சே.

அவ நெனச்ச மாதிரியே மேகத்திலிருந்து ஒரு பெரிய பறவை பறந்து வந்துச்சு.

அது ரொம்ப பெருசா இருந்துச்சு.

அதோ எதிரில தெரியுதே அந்த மலையவிடப் பெருசு.

அவ்வளவு பெரிய பறவை வானத்தில பறக்கறத பாத்தா ஆச்சரியமா இருக்கும் இல்லையா?

மலை அளவுக்கு வானத் தில பறந்தா சூரிய வெளிச்சம் வருமா?

வெளிச்சமாத்தான் இருந்துச்சு.

எப்படி? பறவையே வெளிச்சம் தான்.

சரி, அது என்ன பறவை? அது நாம தினமும் பாக்குற பறவை அல்ல.

வேற பறவை.



இந்தப் பறவைக்கு என்ன பேரு?

கதைப் பறவை.

சரி.

இந்தப் பறவை எங்கிருந்து வருது.

கதசாமி கோயில்ல இருந்து வருது.

ஓ... கத தர சாமியோட கோயிலா?!

கோயிலுக்குப் பக்கத்துல ஒரு மரம் இருக்கு.

நாம இருக்கிற உலகத்தைவிட மிகவும் பெரிசு.

அது என்ன மரம்?

கதை மரம்.

நாம கேட்ட கேட்கிற, கேட்கப்போகிற எல்லாக் கதைகளும் அந்த மரத்துல இருக்கு.

கதை மரத்துல ஒரு பூ பூத்தா ஒரு பிரபஞ்சமே உருவாகும்.

பிரபஞ்சம்னா?

கோடி கோடி சூரியன்கள் சேர்ந்தது.

கோடிப் பூக்கள் இப்ப மரத்தில இருக்கு.

ஒரு பூவில உருவான பிரபஞ்சத்துல தான் நாம இருக்கோம்.

கதை மரம் ஏன் உலகத்தைவிடப் பெரிசா இருக்கு?

இப்ப விடை கிடைச்சாச்சா?

வனா பாக்கற கதைப் பறவை கதை மரத்துல இருந்துதான் வருது.

வனா பாப்பாவ பாக்கறதுக்காக அந்தப் பறவை இப்ப வருது.

வனா ரொம்ப நல்ல பாப்பா.

நீங்களும் நல்ல பாப்பாவா இருந்தா உங்களைத் தேடியும் கதைப் பறவை வரும்.

பறவையைப் பார்த்ததும் வனா வீட்டுக்குள் ஓடினா.

பழத்தட்டிலிருந்த பெரிய கொய்யாப்பழத்தை எடுத்து வந்தா.

அதை வைச்சுக்கிட்டுக் காத்திருந்தா.

பறவை வனாவை நோக்கிக் கீழே இறங்கிச்சு.

மலை மாதிரி இருக்கிற பறவைக்கு வயிறு எவ்வளவு பெருசா இருக்கும்.


இந்தச் சின்னக் கொய்யா அதுக்கு எப்படிப் போதும்.

மனசு வருந்திக் கதசாமிய வேண்டினா.

கதசாமியால எல்லாம் முடியும்தானே?

பறவை அருகில் வர வரத் தட்டிலிருநத கொய்யா பெருசாகிக்கிட்டே வந்துச்சு.

வனா இருந்த வீடும் பெருசாச்சு.



இப்ப வீடு எவ்வளவு பெருசு?

ஊரு அளவுக்குப் பெருசு.

யானை அளவுக்குப் பழம் பெருசாச்சு.

பறவைக்கு ரொம்ப சந்தோஷம்.

அதனால வனாவையும் அதுக்குப் பிடிச்சிப்போச்சு.

கீழ இறங்கி பழத்த ருசிச்சிச் சாப்பிட்டுச்சு.

முதல்முறையா வயிறுமுட்ட சாப்பிட்ட சந்தோஷம்.

'உனக்கு என்ன வேணும்.

என்னால எதுவும் தர முடியும்...

கேளு'ன்னு பறவை சொல்லிச்சு.

'எனக்குக் கதை பிடிக்கும்.

தினம் வந்து ஒரு கதை சொல்லுவியா?' என்றாள் வனா.

'அப்படியே செய்கிறேன்' என்றது பறவை.

வனாவைத் தேடிப் பறவை தினமும் வந்தது.

ஒவ்வொரு நாளும் வனா அதற்குப் பழம் தந்தா.

பழத்தைத் தின்னு முடிச்சதும் பறவை ஒரு கதையைச் சொல்லும்.

10.2015
17

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1091 - லண்டனில் பெரும் சூறாவளி இடம் பெற்றது.
- 1346 - இங்கிலாந்தின் மூன்றாம் எட்வேர்ட் ஸ்கொட்லாந்தின் இரண்டாம் டேவிட் மன்னனைச் சிறைப்பிடித்து பதினோராண்டுகள் லண்டன் கோபுரத்தில் அடைத்து வைத்தான்.
- 1448 - கொசோவோவில் ஹங்கேரிய இராணுவம் ஒட்டோ மான் படைகளினால் தோற்கடிக்கப்பட்டனர்.
- 1604 - ஜேர்மனிய வானிலையாளர் ஜொகான்னஸ் கெப்லர் வானில் திடீரென மிக ஒளிர்வுள்ள விண்மீன் (எஸ்.என். 1604) தோன்றுவதைக் கண்டார்.
- 1610 - பதின்மூன்றாம் லூயி பிரான்சின் மன்னனாக முடிசூடினான்.
- 1662 - இங்கிலாந்தின் இரண்டாம் சார்ல்ஸ் டன்கேர்க் நகரை 40,000 பவுணிற்கு பிரான்சுக்கு விற்றான்.
- 1800 - டச்சு குடியேற்ற நாடான குரக்காவோ இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் வந்தது.
- 1805 - நெப்போலியனின் போர்கள்: ஊலம் நகரில் இடம்பெற்ற சமரில் ஆஸ்திரியப் படையினர் நெப்போலயன் பொனபார்ட்டின் படைகளிடம் வீழ்ந்தன.
- 1907 - மார்க்கோனி அட்லாண்டிக் நகரங்களுக்கிடையேயான தனது முதலாவது கம்பியில்லாத் தொடர்பை கனடாவின் நோவா ஸ்கோசியாவுக்கும், அயர்லாந்துக்குமிடையே ஏற்படுத்தினார்.
- 1912 - முதலாம் பால்க்கன் போர்: பல்கேரியா, கிரேக்கம், சேர்பியா ஆகியன ஒட்டோமான் பேரரசுடன் போரை அறிவித்தன.
- 1933 - அல்பேர்ட் ஐன்ஸ்டைன் நாசி ஜேர்மனியிலிருந்து வெளியேறி ஐக்கிய அமெரிக்காவில் குடியேறினார.
- 1941 - இரண்டாம் உலகப் போரில் முதற் தடவையாக ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பல் அமெரிக்கக் கப்பலைத் தாக்கியது.
- 1965 - 1964 நியூயோர்க் உலகக் கண்காட்சி இரண்டாண்டுகளின் பின்னர் முடிவுற்றது. மொத்தமாக 51 மில்லியன் மக்கள் இக் கண்காட்சியைக கண்டு களித்தனர.
- 1979 - அன்னை தெரேசா அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.
- 1995 - யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்ற இலங்கை இராணுவம் ரிவிரெச நடவடிக்கையை ஆரம்பித்தது.
- 2003 - தாய்ப்பே 101 உலகின் மிக உயரமான வானளாவி ஆனது.
- 2006 - ஐக்கிய அமெரிக்காவின் மக்கள் தொகை 300 மில லியனை எட்டியது.

### பிறப்புகள்

- 1906 - கே. பி. ஹரன், தமிழ்ப் பத்திரிகையாளர், (இ. 1981)
- 1912 - பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் (இ. 1978)
- 1965 - அரவிந்த டி சில்வா, இலங்கை அணியின் துடுப்பாளர
- 1972 - எமினெம், அமெரிக்காவின் ராப் இசைக்கலைஞர்

### இறப்புகள்

- 1981 - கவிஞர் கண்ணதாசன், (பி. 1927)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் நிலையிலிருந்து ஒருவன் விரும்பும் நிலைக்கு உயர, நடத்தும் இடைவிடாத போராட்டம்தான் வாழ்க்கை. ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சிறைகளில் உண்ணாவிரதத் திருவிழா; கடை போட கனபேர் முண்டியடிப்பு

விடுதலை, விசாரணை எதுவுமின்றி நீண்டகாலமாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை நினைக்கும் போதெல்லாம் தமிழர்களின் தலைவிதி இதுதானோ! என்று மனம் ஏங்கும்.

எங்கள் தமிழ் அன்னையர் வயிற்றில் பிறந்த குற்றம்; தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட பாவம்; இலங்கையில் தமிழராகப் பிறந்த வினைப் பயன் காரணமாக இந்த மண்ணில் இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் துடிதுடித்து, பதைபதைத்து உயிர் துறந்துள்ளனர்.

கைகளைக் கட்டிப் போட்டு சுட்ட கொடூரங்கள், சிறுவன் பாலச்சந்திரனுக்கு பிஸ்கட் கொடுத்துவிட்டு ஈவு இரக்கமின்றி வேட்டுவைத்த வெப்பாரம் இப்படி எத்தனையோ வதைகளை தமிழ் மக்கள் சந்தித்து விட்டனர். இருந்தும் இன்னமும் தமிழ் மக்களின் அவலம் நின்றபாடில்லை.

துன்பம், கஷ்டம் என எல்லாவற்றுக்கும் ஓர் எல்லை உண்டு. ஆனால் தமிழ் மக்களின் துன்பத்திற்கு எல்லையே இல்லை என்றாகிவிட்டது.

வன்னிப் போரில் உறவுகளைப் பறி கொடுத்தவர்கள் இன்று வரை கண்ணீரும் கம்பலையுமாக வாழும் சோகம். காணாமல் போனவர்களின் பெற்றோர், வருவோர் போவோரின் கால்களில் விழுந்து ஐயா! எங்கள் பிள்ளைகளைக் கண்டீர்களா? எம் பிள்ளைகள் எங்கே? என்று கதறும் அவலம். இவற்றுக்கு மேலாக இருண்ட உலகத்துக்குள் வாழுகின்ற தமிழ் அரசியல் கைதிகள்.

தமிழர்கள் என்பதால் விளக்கமும் இல்லை; விசாரணையும் இல்லை; விடுதலையும் இல்லை கடவுளே! யாரிடம் போய் முறையிடுவது. புதிய அரசு ஏன் செய்யவில்லை என்று கேட்க முடியவில்லை.

புதிய அரசு தமிழ்த் தலைவர்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்து விட்டது. போகும் காலத்தில் ஆவி ஆசையோடு போகக் கூடாது என்பதாலோ என்னவோ ஒரு பதவியைக் கொடுத்து அந்த ஆத்மாவை சமாளித்துவிட்டது. இனி தமிழ் மக்களின் அவலத்தை பேரினவாத ஆட்சியாளர்கள் போலவே எங்கள் தலைவர்களும் பார்ப்பர்.

என்ன செய்வது? கெட்ட குடியே கெடும். பட்ட காலிலேயே படும் என்பது போல தமிழ்த் தலைமைகளும் எங்களுக்கு வாய்த்துள்ளன.

அன்புக்குரிய தமிழ் அரசியல் கைதிகளே! உங்களின் உண்ணாவிரதப் போராட்டம் மட்டுமே உங்களின் விடுதலை பற்றிய நினைப்பை அரசிடம் ஏற்படுத்தும் என்பதால், உங்கள் போராட்டம் தொடர வேண்டும்.

தமிழ்க் கைதிகளின் போராட்டம் முடிவுறுத்தப்பட்டால், அவ்வளவுதான் அத்தோடு எல்லாம் மறந்து போகும்.

ஆகையால் அறுதியான–உறுதியான–இறுதியான தீர்வை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உங்களுக்குத் தரும் வரை போராட்டத்தைக் கைவிட்டு விடக்கூடாது.

அதேசமயம் உங்கள் உண்ணாவிரதம் தமிழ் அரசியல் வாதிகளுக்கும் அரசியல் சார் அமைப்புகளுக்கும் ஒரு திருவிழாவாகவே இருக்கும்.

எனவே உண்ணாவிரதத் திருவிழாவில் கடை போட பலரும் முண்டியடிப்பர். உங்கள் போராட்டம் முடிய, அவர்கள் எங்கு சென்றார்கள் என்பதே தெரியாமல் போகும்.

ஆகையால் தமிழ் அரசியல் தலைமை தருகின்ற உத்தரவாதங்களை ஏற்றுவிடாதீர்கள். உங்களுக்கான உத்தரவாதம் ஜனாதிபதியிடம் இருந்து வரட்டும்.

ஐ.நா கூட்டத் தொடர் முடிந்த கையோடு ஆரம்பித்த உங்கள் போராட்டம் நிச்சயம் வெற்றி தரும். இதுவே நல்ல சந்தர்ப்பம். தளராதீர்கள்.

# ஐ.நா தீர்மானம் தொடர்பில் ஆலோசனை; அனைத்து கட்சிகளுக்கும் மைத்திரி அழைப்பு

(கொழும்பு)

ஜெனிவாவில் கடந்த மாதம் இடம்பெற்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 30ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானம் தொடர்பில் ஆலோசனை நடத்துவதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தக் கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் என்று அறிவித்துள்ள ஜனாதிபதி செயலகம், இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அமெரிக்காவின் தலைமையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தில் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளில் பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் சட்டவாளர்களின் பங்களிப்புடன் நம்பகமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கமும் அனுசரணை வழங்கியுள்ள நிலையில், இந்த விசாரணைப் பொறிமுறை தொடர்பாக கலந்துரையாடுவதற்காகவே இந்த அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணையை மேற்கொள்வதற்கான பொறிமுறை குறித்து அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னரே தீர்மானிக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## இரவு நேரத்தில் காட்டில் தங்கிய பாடசாலை மாணவன், மாணவி கைது

குளியாப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள அடர்ந்த வனப்பகுதியொன்றில் தனியாக இரவைக் கழித்த பதின்ம வயது மாணவனும் மாணவியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள பிரபலமான இரண்டு பாடசாலைகளில் உயர்தரம் மற்றும் ஒன்பதாம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவன் மற்றும் மாணவியொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் குறித்த தினம் பாடசாலைக்கு செல்லாது உறவினர் ஒருவரின் வீட்டில் இரவு தங்கச் சென்றுள்ளனர். எனினும் அங்கு இடமளிக்கப்படாத நிலையில் அப் பகுதியில் இருந்த காடு ஒன்றில் தனியாக இரவைக் கழித்துள்ளனர்.

குறித்த மாணவி வீடு திரும்பாத நிலையில் பெற்றோரால் பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கமைய இவர்கள் இருவரும் கடந்த 15 ஆம் திகதி கொழும்புக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இருவரும் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்ட போது மாணவனை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட குளியாப்பிட்டிய நீதிமன்றம், மாணவியை மருத்துவமனையில் அனுமதித்து அவருக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளது. (செ-12)

## தேர் செய்வதற்கான பலகைகள் திருடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

தேர் செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த 4 இலட்சம் பெறுமதியான மரப் பலகைகள் திருடர்களால் திருடப்பட்டுச் செல்லப்பட்டதாக அச்சுவேலிப் பொலிஸில் கடந்த வியாழக்கிழமை அன்று முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆவரங்கால் கிழக்கு கன்னாரை அம்மன் கோவிலில் வைக்கப்பட்டிருந்த பலகைகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

மேற்படி திருட்டுச் சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மறுநாள் வியாழக்கிழமை அன்று மேற்படி ஆலயத்தில் பரிபாலன சபையினரால் இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (செ-5,134)

## சொற்பொழிவு

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு சந்திரபுரம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் நவராத்திரி கால விசேட சொற்பொழிவு தினமும் மாலை 6 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை ஆலய பரிபாலன சபைத் தலைவர் செ.ஞானசேகரம் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று சனிக்கிழமை 'அன்னையின் திருவிளையாடல்' எனும் விடயம் தொடர்பில் சைவப்புலவர் க.கமலநாதன் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (இ-5)

## 45 ஆவது ஆண்டு விழா

கொழும்புத்துறை றொசாறியன் சனசமூக நிலைய 45ஆவது ஆண்டு விழா இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு இன்று சனிக்கிழமை யாழ்.மாவட்ட மட்டத்தில் சைக்கிள் ஓட்டப்போட்டி, உள்ளூர் மட்டத்தில் சைக்கிள் மற்றும் மரதன் ஓட்டம் என்பன இடம்பெறும்.

அத்துடன் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் பந்து சுற்றுப் போட்டி உட்பட பல்வேறு விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், பொது விளையாட்டுப் போட்டிகள் என்பன இடம்பெறுவதுடன் பிற்பகல் 5 மணிக்கு பரிசளிப்பு விழா இடம்பெற்று அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (இ-5)

# சுங்க அதிகாரிகள் மூவர் விளக்கமறியலில் வைப்பு

125 மில்லியன் ரூபா இலஞ்சம் பெறும்போது, கையும் களவுமாக பிடிபட்ட சுங்க அதிகாரிகள் மூவரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த மூவரும் நேற்றைய தினம் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இவ்வாறு உத்தரவிடப்பட்டது.

சுங்க அதிகாரி பராக்கிரம ஜினதாஸ, பிரதி சுங்க அதிகாரி ஜகத் குணதிலக, உதவி சுங்க அதிகாரி எம்.டி. யு.ஜி. பெரேரா ஆகியோரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 150 கோடி ரூபாய் பெறுமதியான பொருட்களை வரியின்றி விடுவிப்பதற்காக, நேற்றுமுன்தினம் குறித்த மூவரும் 12.5 கோடி ரூபாய் இலஞ்சம் கேட்ட போது கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் வழக்குத் தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலஞ்ச, ஊழல் திணைக்களத்தில் அகப்பட்ட மிகவும் அதிகமான இலஞ்சத் தொகை இது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



தியாகத்தால் அன்றி எதையும் சாதிக்க முடியாது. மனிதன் செய்யத் தக்கனவற்றுள் மிகவுயர்ந்த மிகப் புனிதமான செயல் அதைக் கெடுக்காமலிருப்பதே.

நீங்கள் உண்மையிலேயே என் குழந்தைகளானால் எதற்குமே அஞ்சமாட்டீர்கள். எதற்காகவும் நிற்க மாட்டீர்கள். சிங்கங்களெனத் திகழ்வீர்கள். நாம் இந்தியாவையும் உலகம் முழுவதையுமே விழித்தெழச்செய்தாக வேண்டும். கோழைத்தனம் உதவாது.

ஸ்ரீஇராமகிருஷ்ணரை வழிபடுபவர்கள் நீசர்களாக இருந்தாலும் கணநேரத்தில் பெரிய மகான் ஆகிவிடுவார்கள். பெண்களானாலும் சரி, ஆண்களானாலும் சரி.

ஸ்ரீஇராமகிருஷ்ணர் பெண்களின் ரட்சகர், பாமரர்களின் ரட்சகர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் அனைவரின் ரட்சகர். ஒவ்வொரு வீட்டிலும் ஸ்ரீஇராமகிருஷ்ணரின் வழிபாட்டைப் புகுத்துங்கள். பிராமணர், சண்டாளர், பெண், ஆண் அனைவருக்கும் அவரை வழிபடும் உரிமை உண்டு. கும்பத்தில் அவரைப் பூஜிக்கட்டும், சிலை செய்து வழிபடட்டும், மந்திரம் இருக்கட்டும் அல்லது இல்லாமல் போகட்டும். எப்படி எந்த மொழியில் யார் வேண்டுமானாலும் பக்தியுடன் அவரை வழிபடுபவர்கள் பேறு பெற்றவர்கள்.

பிரமச்சரியம் உள்ளவனது மூளையின் ஆற்றல் அளப்பரியதாகிறது. அவன் மகத்தான சங்கல்பம் உடையவன் ஆகிறான். பிரமச்சரியம் இல்லாமல் ஆன்மீக சக்தி வருவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைலோ கிண்ண உதைபந்தாட்டம் கம்பர்மலை யங்கம்பன்ஸ் வெற்றி.





நான்காவது சுற்றிலும் அசத்தலாக வெற்றி பெற்று 12 அணிகளுக்குள் தெரிவாகியது யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம்.

நேற்று முன்தினம் (15.10.2015) நடைபெற்ற மைலோ கிண்ணத்திற்கான போட்டி கொலின்ஸ் வி.கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் வதிரி டயமன்ஸ் எதிர்த்து மோதிய கம்பர் மலை யங்கம்பன்ஸ் வி.கழகம் இறுதிவரைக்கும் விறுவிறுப்பான ஆட்டத்தை வெளிக்காட்டியது. கடைசி நிமிடத்தில் டயமன்ஸ் அணியின் முறை தவறால் தண்ட உதை வழங்கப்பட்டது. அதனை தர்சன் கோலாக்கி வெற்றியை உறுதிப்படுத்தினார்.

1:0 என்ற அடிப்படையில் அதிரடியான வெற்றியைப் பெற்றதோடு 12 அணிகளின் வரிசையில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் வி.கழகம் இணைந்து கொண்டது. (க)

## ஊரெழு றோயலை வீழ்த்தி சம்பியனாகியது சென்.மேரிஸ்

அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்குகளில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்திய 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந் தாட்டத் தொடரில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி சம்பியனாகியது.

அண்மையில் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதிக் கொண்டது. முதல் கோலுக்கான போராட்டம் இறுதியாட்டத்துக்குரிய பாணியில் இருக்கவே செய்தது. 19 ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணியின் யூட், ஆட்டத்தினதும் தனது அணியினதும் முதல் கோலைப் பதிவு செய்தார். றோயல் அணியால் பழிதீர்க்க முடியாத நிலையில் 1:0 என முடிவடைந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியில் வேறெந்தக் கோல்களும் பதியப்படவில்லை. கிடைத்த வாய்ப்புக்களையும் இரு அணியினரும் மாறிமாறித் தவறவிட முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் சம்பியனானது சென். மேரிஸ். சிறந்த வீரனாக ஊரெழு றோயல் அணியின் கஜகோபனும், சிறந்த கோல்காப்பாளராக நாவாந்துறை சென்.மேரிஸ் அணியின் அனஸ்ரினும் தெரிவானார்கள். சிறந்த அணியாக பாசையூர் சென். அன்ரனிஸ் அணி தெரிவாகியது. (க)



இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இலங்கை தேசிய இளைஞர் சங்கங்களின் மாவட்டங்களுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான எல்லே தொடரில் யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பெண்கள் அணி வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளது. அவ் அணியினரைப் படத்தில் காணலாம்.

## ஞானமுருகன் வெற்றி

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஞானகலா அணியை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதிக்கொண்டது.

இதில் ஞானமுருகன் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

# காதலியை மகிழ்வித்ததால் போட்டியில் அவதிப்பட்டேன்

### பிளிண்டாப் திடுக்கிடும் தகவல்




அளவுக்கு அதிகமாக வயாகரா மாத்திரையை சாப்பிட்டு விட்டு போட்டியின்போது தான் அவதிப்பட்டதாக முன்னாள் இங்கிலாந்து வீரர் பிளிண்டாப் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரரான பிளிண்டாப், கடந்த 2009 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார்.

இந்நிலையில் அவர் எழுதியுள்ள 2 ஆவது சுயசரிதை நூலான "செகன்ட் இன்னிங்ஸ்" தற்போது வெளியாகியுள்ளது. இதில் தான் அவர் அந்த சுவாரசியமான தகவலை குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் அதில் கூறியுள்ளதாவது,

"டெஸ்ட் போட்டிக்கு முந்தைய நாள் காதலியை மகிழ்விக்கலாம் என்று ஒரே நாளில் 3 வயர்கரா மாத்திரைகளை விழுங்கினேன. இரவு முழுக்க நன்றாகவே உல்லாசமாக இருந்தோம்.

ஆனால் அந்த வயாகரா மாத்திரையின் விளைவு மறுநாள் வரை இருக்கும் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இதனால் மறுநாள் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் நான் மிகவும் அவதிப்பட்டேன்.

ஓட்டங்கள் எடுக்கும் போது ஓட முடியாமல் சிரமப்பட்டேன். இதனால் அநியாயமாக ஓட்ட முறையில் வெளியேற்றப்பட்டேன்.

மேலும், நான் மனச்சோர்வால் பாதிக்கப்பட்டிருந்தேன். அப்போது டேவிட் லாய்டு எனக்கு அறிவுரை வழங்கினார். ஹெல்மெட் அணியாமல் திறந்த முகத்தோடு மைதானத்திற்குள் செல்லுமாறும், அப்போது தன் னம்பிக்கை அதிகரிக்கும் என்றும் கூறினார்.

இதன் பிறகு நான் முகத்தை அதிகார தோரணையாக வைத்துக்கொண்டு தான் செல்வேன். இருப்பினும் உள்ளுக்குள் நான் பயந்தவனாகவே இருந்தேன்" என்று குறிப்பிட்டுள்ளார். (க)

## டென்மார்க் ஓபன் பட்மிண்டன்; சாய்னா அதிர்ச்சித் தோல்வி



டென்மார்க் ஓபன் பட்மிண்டன் போட்டி ஓடென்சி நகரில் நடந்து வருகிறது. இதில் இந்தியாவின் முன்னணி வீராங்கனையான சாய்னா நேவால் 2 ஆவது சுற்றில் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

அவர் ஜப்பான் வீராங்கனை மீதானியிடம் 18-21, 13-21 என்ற செட் கணக்கில் தோற்று வெளியேறினார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணின்...

மோட்டார் சைக்கிளில் வந்த நால்வரில் இருவர் தூரத்தில் நின்றவாறு நோட்டம் பார்க்க இருவர் குறித்த கடையில் இறங்கி குளிர்பானமும் சிகரெட்டும் வாங்கியுள்ளனர். அங்கேயே நீண்ட நேரம் நின்று குளிர்பானம் அருந்தியவாறு நோட்டமிட்ட பின்னர் பணத்தினை செலுத்தியபோது மிகுதிப்பணத்தினை குறித்த பெண் வழங்கியபோது மீண்டும் எண்ணும்படி கூறியுள்ளனர்.

அவரும் பணத்தினை மீள எண்ணிய வேளை பணத்தினையும் தாலிக்கொடியினையும் அறுத்துக் கொண்டு தப்பியோட முற்பட்டபோது குறித்த பெண்ணும் அவர்களின் சேட்டில் பிடித்தவாறு சிறிது தூரம் ஓடியுள்ளார். இதனால் திருடர்கள் அவரை அருகிலுள்ள மதிலுடன் தலையினை பிடித்து அடித்து விட்டு மோட்டார் சைக்கிளில் தப்பியோடியுள்ளனர். இதனால் காயமடைந்த பெண் மயக்கமடைந்த நிலையில் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

பட்டப்பகலில் போக்குவரத்து அதிகமான நாற்சந்தியொன்றில் நடைபெற்ற இச்சம்பவம் அப்பகுதி மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. இளவாலைப் பொலிஸார் அருகிலுள்ள வீட்டில் பொருத்தப்பட்ட சி.சி.ரிவி கமராவின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (செ-4)

## எலும்புக்கூடுகள்...

கள் அணியும் ஆடைகள், பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. மேற்படி பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபடும் சிலர் குறித்த எலும்புகூடுகளை கண்டெடுத்த போதும் அவை பற்றி வெளியில் சொல்லாதிருந்த நிலையில் குறித்த பகுதியில் முயல் பிடிக்கச் சென்றிருந்த ஒருவர் விடயத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து குறித்த பகுதிக்கு நேற்று மாலை ஐந்து மணியளவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் பெண் பிள்ளை ஒன்றின் எலும்புகூடு மற்றும் பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் கைப்பை, பென்சில், குடை, இரு விதமான செருப்பு ஆகியன கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த பகுதியில் இரு பெண்களின் சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

மேலும் மீட்கப்பட்ட எலும்புகூட்டின் மண்டை ஓட்டில் சூட்டு காயம் ஒன்றும் காணப்படுகின்றது. (செ-4)

## ஐ.நா. இலங். தூதரக...

இவர் தனது புதிய பதவியை பொறுப் பேற்பதற்காக, தற்போது வகித்து வரும் பதவிகளில் இருந்து விடுவிக்கப்பட்டு இன்று சனிக்கிழமை முதல் படைத் தலைமையகத்துடன் இணைக்கப்படவுள்ளார்.

படைத்தரப்பின் குரல்தரவல்ல அதிகாரியாக இருந்த இவர், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 17ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொண்ட அரசாங்கத் தரப்புக் குழுவிலும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஐ.நாவுக்கான இலங்கை தூதரகத்தின் படைத்துறை ஆலோசகராக மேஜர் ஜெனரல் உபய மெடவெல நியமிக்கப்பட்டுள்ளதால், அவர் தற்போது வகித்து வரும் பதவிகளில் ஒன்றான படைத்தரப்பின் பெண்கள் படைப்பிரிவின் தளபதியாக மேஜர் ஜெனரல் இரத்தினசிங்கம் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், கிளிநொச்சிப் படைகளின் தலைமையகத் தளபதியான மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க மேற்குப் படைகளின் தலைமையகத் தளபதியாகவும், கிளிநொச்சிப் படைகளின் தலைமையகத் தளபதியாக மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகரவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (செ-12)

## வயல் கிணற்றில்...

கிருஸ்ணன் (வயது 68) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். மாட்டுக்குப் புல் வெட்டச் சென்றவர், தவறிக் கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

## கைதிகளை 7-ம்...

நேற்று காலை நடந்த பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, நீதியமைச்சரும் தானும் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் முடிவில் இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தன் குறிப்பிட்டார்.

குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டவர்கள், வழக்கு விசாரணையின் கீழ் உள்ளவர்கள் மற்றும் வழக்கு விசாரணைகள் எதுவுமின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் என்று மூன்று பிரிவினராக தமிழ்க் கைதிகள் சிறைகளில் உள்ளனர்

இதில் வழக்கு விசாரணைகள் இன்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களுக்கு மன்னிப்பளித்து விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை தான் முன்வைத்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறினார்.

வழக்கு நடந்துகொண்டிருக்கும் கைதிகள் மீதான வழக்குகளை வாபஸ் பெற்று அவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்று கோரியுள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழ்க் கைதிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் கோரியிருந்த மூன்று மாத அவகாசத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறிவிட்டதாகவும் சம்பந்தன் தெரிவித்தார்.

பாரதூரமான குற்றங்களைச் செய்த கைதிகளைத் தவிர மற்றைய கைதிகளின் பிரச்சினைகளை விரைவில் தீர்க்க வேண்டும் என்ற சமரசம் இருதரப்பிலும் ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

நீதியமைச்சருடனான பேச்சுவார்த்தையில் தன்னுடன் கலந்துகொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், இந்த முடிவு தொடர்பில் உண்ணாவிரதம் இருந்து வரும் கைதிகளுக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்துடன் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாடு இனி அமுல்படுத்தப்படுவது கைதிகளின் முடிவில் தங்கியுள்ளது.

கைதிகள் இந்த முடிவை ஏற்றுக்கொண்டால் அவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தை இடைநிறுத்தம் செய்யலாம் என்றும் சம்பந்தன் தெரிவித்தார். (செ-12)

## ஜனாதிபதியின்...

ஜனாதிபதியிடம் விடுதலைக்கான கோரிக்கை வைத்தே உண்ணா விரத போராட்டத்தை ஆரம்பித்து ஐந்தாவது நாளாகவும் (இன்று ஆறாம் நாள்) முன்னெடுத்து வருகின்றோம் என மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம் சுவாமிநாதனிடம் அனுராதபுரம் அரசியல் கைதிகள் கூறியுள்ளனர்.

நேற்றைய தினம் நான்கு மணியளவில் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்ற அமைச்சர் சுவாமிநாதன், தம்மை பொது மன்னிப்பில் விடுதலை செய்யக்கோரி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளினை சந்தித்திருந்தார். இதன்போதே அரசியல் கைதிகள் மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

மேலும் சுவாமிநாதனால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் அரசியல் கைதிகளினால் நிராகரிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் பாராளுமன்ற அமர்வில் நகர்த்தல் பத்திரமொன்றினை சமர்ப்பித்து அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான நடவடிக்கையை ஆராய்வதாகவும் இதற்கு ஒருவார கால அவகாசம் தேவை எனவும் கைதிகளிடம் தெரிவித்துள்ளார்.

எனினும் அமைச்சரின் இக்கோரிக்கையை ஏற்க மறுத்த அரசியல் கைதிகள், நாம் ஒவ்வொரு முறையும் போராட்டத்தில் ஈடுபடும் போதெல்லாம் இவ்வாறுதான் கால அவகாசம் கோரி ஏமாற்றப்பட்டு வந்துள்ளோம். இனியும் நாம் கால அவகாசம் வழங்கினால் அது எமது தலையில் நாமே மண் அள்ளி போடும் முட்டாள் தனமான செயற்பாடாகும்.

நாம் ஜனாதிபதியிடமே எமது விடுதலை குறித்த பொது மன்னிப்பு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். எமக்கு அவர் தீர்க்கமான முடி வினை வெளிப்படையாக வழங்க வேண்டும். இதனை நல்லாட்சி அரசாங்கம் ...கொள்ளும் இன்றைய அரசு வழங்கும் என நாம் எதிர்பார்க்கிறோம் என அவர்கள் கூறியுள்ளனர். இதேவேளை தமது போராட்டம் உரிய பதில் கிடைக்கும் வரையில் தொடரும் எனவும் கைதிகள் உறுதியாக கூறியுள்ளனர். (செ-4)

# ‘அரசியல் கைதிகளை விடுதலை செய்’

## மகசின் சிறைக்கு முன் போராட்டம்




(கொழும்பு)

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்று கொழும்பு மகசின் சிறைச்சாலைக்கு எதிரில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. ‘அரசியல் கைதிகளை உடன் விடுதலைச் செய்’ என்ற தொனிப் பொருளில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு, சிறைச்சாலை கைதிகளின் உரிமையைப் பாதுகாக்கும் குழு, ஐக்கிய சோசலிசக் கட்சி என்பனவும், ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் என பலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொண்டனர்.

இதன்போது, ‘அரசியல் கைதிகளை உடனே விடுதலை செய், பயங்கரவாதத் தடைச சட்டத்தை உடனடியாக நீக்கு, அரசியல் சிறைக் கைதிகள் உண்ணாவிரதத்தில் - இது தான் சகவாழ்வா?, போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

அத்துடன், நல்லாட்சி அரசாங்கம் உடனடியாக விரைந்து இந்த பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் எனவும், அரசியல் கைதிகளின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டும் எனவும் கோஷமிட்டனர். (செ-12)

# கோல்டன் கீ வைப்பாளர்களது நிதி 2ஆம் கட்டமாக மீளளிப்பு செய்யப்படும்

கோல்டன் கீ நிதி வைப்பாளர்களுக்கான இரண்டாம் கட்ட நிதி மீளளிப்புக்கு நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க சமர்பித்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கோல்டன் கீ நிரந்தர வைப்புத் திட்டத்தில் முதலீடு செய்து ஏமாற்றப்பட்டவர்களின் வைப்புத் தொகை மீளளிக்கப்படும் என்று கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தது.

இதற்கேற்ப கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக இரண்டு மில்லியன் ரூபாயுக்கு குறைவான வைப்புத் தொகையை இழந்த வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் பணம் மீளளிக்கப்பட்டது. நிதியமைச்சர் ர்வி கருணாநாயக்கவின் முயற்சியின் பேரில் இதற்காக திறைசேரி 544 மில்லியன் ரூபாயை வழங்கியிருந்தது.

தற்போது கோல்டன் கீ வைப்பாளர்களின் இரண்டாம் கட்ட வைப்புத் தொகை மீளளிப்புத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. இதன் கீழ் இரண்டு தொடக்கம் பத்து மில்லியன் வரையான வைப்பாளர்களின் நிதி மீளளிக்கப்படவுள்ளது.

அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் கோரிக்கையின் பேரில் இதற்கென 3945 மில்லியன் ரூபாயை திறைசேரி ஒதுக்கியுள்ளது. (செ-12)

# 1983 கலவரத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நட்டஈடு-அரசு

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட சில குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை இணைப் பேச்சாளர் டாக்டர் ராஜித சேனாரட்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

திகன ரஜவல்ல பிரதேசத்தில் 83ஆம் ஆண்டு கலவரத்தில் இடம்பெயர்ந்த 134 குடும்பங்கள் அம்பலோட் தோட்டத்தில் வசித்து வருகின்ற போதிலும், கடந்த கால அரசாங்கங்கள் அவர்களுக்கு சட்ட ரீதியாக காணி உறுதிகளை வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு காணி உறுதிகள் வழங்கப்படாத காரணத்தினால் இவர்களினால் நீர் மற்றும் மின்சாரம் போன்ற அடிப்படைத் தேவைகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த 134 குடும்பங்களும் சொந்த இடங்களில் மீள குடியேற்றப்படுவார்கள் எனவும், அவர்களின் அடுத்த தலைமுறையைச் சேர்ந்த 146 குடும்பங்களுக்கு மஹாவலி வலயத்தில் காணிகள் வழங்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## கைதிகள் பலர்...

ப்படைந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு வரை 8 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்றையதினம் இரவு வரை கொழும்பு, அநுராதபுரம் சிறைச்சாலைகளைச் சேர்ந்த 14 கைதிகள் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் அநுராதபுரம் சிறைச்சாலையைச் சேர்ந்த பதுளை வாசியான சசிகலா ராஜன் என்ற பெண் கைதி உடல்நிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு மயக்கமடைந்த நிலையில் சிறைச்சாலை அதிகாரிகளால் அநுராத புரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மை விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி கடந்த 12ஆம் திகதி திங்கட்கிழமை தமிழ் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்திருந்தனர். இந்த உண்ணாவிரதப்போராட்டம் இன்றுடன் 6 நாட்களை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையை சிறையில் அடைத்...

மட்டும் தகப்பனை இழந்து தவிக்கின்றனர் என மற்றொரு தாய் ஏக்கத்துடன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.முனியப்பர் ஆலயம் முன்பாக முன்னெடுக்கப்பட்ட அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த தாய்மார்கள் மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

எனக்கொரு மகன் 13 வயதில் இருக்கிறார். ஏழு வயதில் எனது பிள்ளை இருக்கும் போது எனது கணவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அதன் பிறகு நான் எங்கு போனாலும் எனது பிள்ளையை கூட்டிக்கொண்டுதான் போக வேண்டும். எனது கணவர் கைது செய்யப்பட்ட நாளிலிருந்து எனது பிள்ளை மனநலம் பாதிக்கப்பட்டுள்ளார்.

நான் எத்தனையோ கூட்டங்களுக்கு சென்று எனது கணவனை விடுவிக்குமாறு மன்றாட்டமாக கேட்டிருந்தேன்.

ஆனால் எங்களது அழுகையை யாருமே செவிமடுப்பதாக தெரியவில்லை. நாம் இனி எவ்வாறு வாழ்வதென்று தெரியாமலிருக்கின்றேன்.

எனதுகணவர்சிறையில்உண்ணாவிரதத்தில் இருக்கின்றார். நாங்கள் இங்கு இருக்கின்றோம். எனது கணவனை விடுதலை செய்யுங்கள்.

எனது பிள்ளையை வாழ விடுங்கள். நாங்கள் சந்தோசமாக வாழ வேண்டும்.

நான் காலில் விழுந்து தெரிவிக்கின்றேன். சிறையில் உள்ள அனைவரினையும் விடுதலை செய்யுங்கள் என திருமதி சந்திரயோதி ராஜலக்ஷ்மி என்ற குடும்பப் பெண் கதறியழுதார்.

மற்றொரு தாய் எங்கள் பிள்ளைகளை விடுதலை செய்யாவிட்டால் எங்களையும் சிறையில் அடையுங்கள்.

நாங்கள் எங்களது பிள்ளைகளுடன் சிறையிலாவது சந்தோசமாக இருக்கின்றோம் என கதறியழுதார்.

தாய்மார்களின் அழுகை யினால் அவ்விடமே சோக மயமாக காட்சியளித்ததோடு அனைவரது கண்களையும் கலங்க வைத்தது. (செ-4)

# மகிந்தவின்...

மகிந்த ராஜபக்ஷ முன்வைத்த ஆட்சேபணைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் இடம்பெற்றுள்ள பெரும் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தும் சிறப்பு ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று கூடியபோது, அதன் தலைவர் நீதிபதி பிரீதி பத்மன் சுரசேன இந்த முடிவை அறிவித்தார்.

சிறப்பு ஜனாதிபதி ஆணைக் குழு அரசியலமைப்புப்படி அமைய விலலை என்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு அதற்கு அதிகாரங்கள் இல்லை என்றும் அந்த ஆணையத்தின் முன்னால் நேற்று முன்தினம் ஆஜரான முன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சேபம் தெரிவித்திருந்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் அரச தொலைக்காட்சியான சுயாதீன தொலைக்காட்சிசேவையல் அப்போதைய ஜனாதிபதி மகிநத ராஜபக்ஷவுக்காக ஒளிபரப்பான தேரதல் பிரசாரங்களுக்கான பெருந்தொகை பணத்தை செலுத்தத் தவறிய குற்றச்சாட்டு தொடர்பிலேயே ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்துகின்றது. இந்த விசாரணையின்படி பிறப் பிக்கப்பட்ட உத்தரவின் பிரகாரம் மகிந்த ராஜபக்ஷ அவரது வழக்றிஞரகளுடன ஆணையத்தின் முன்னால் நேற்று முனதினம் வியாழக்கிழமை ஆஜ ரானார்.

இதன்போது ஆட்சேபணையை முன்வைத்த மகிந்த ராஜபக்ஷவின் வழக்கறிஞர், இந்த ஆணைக்குழுவுக்கு மேல் நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அதிகாரங்கள் இல்லை என்று வாதிட்டார்.

அவ்வாறே, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அழைத்து விசாரிப்பதற்கும் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என்றும் அவர் ஆட்சேபம் தெரிவித்தார்.

அதனையடுத்து, விசாரணைகளை ஒத்திவைத்த நீதிபதிகள ஆட்சேபனை தொடர்பான முடிவை நேற்று வெள்ளிக்கிழமை அறிவிப்பதாக தெரிவித்திருந்தனர்.

இதன்படிநேற்றுக்காலைஆணைக்குழுவின் அமர்வு கூடியபோது, அதன் தலைவர் நீதிபதி பிரீதி பத்மன் சுரசேன, மகிந்த ராஜபக்ஷ தரப்பின் ஆட்சேபணையை நிராகரிப்பதாக அறிவித்தார்.

அதனையடுத்து, மகிந்த ராஜபக்ஷவின் வாக்குமூலத்தை பதிவுசெய்துகொள்ள ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (செ-12)

# ரவிராஜ் படுகொலை...

தகவலின் அடிப்படையிலேயே இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன.

அத்துடன், ரவிராஜின் படுகொலை தொடர்பில் கருணாவிடம் மீண்டும் விசாரணை நடத்தப்படலாம் என்றும் தெரியவருகிறது.

அதேவேளை, ரவிராஜின் படுகொலை தொடர்பான விபரங்களை புலனாய்வுப் பிரிவினர் வெளியிடாத போதிலும், இப்படுகொலையுடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர்கள் விரைவில் கைது செய்யப்படுவர் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

2006ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொழும்பில் வைத்து அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே. (செ-12)

# ஆணின் சட...

காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இறந்திருக்கலாம் என தெரிவிக்கபடுகிறது. எனினும் இறப்பிற்கான காரணம் இது வரையில் கண்டுபிடிக்கபடவில்லை.

நேற்று பிற்பகல் சம்பவ இடத்திற்கு சென்ற திடீர் மரண விசாரணை அதிகாரி ரி.சிந்தாத்துரை சடலத்தை பார்வையிட்டதுடன், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை மன்னார் பொது வைத்திய சாலைக்கு எடுத்து செல்லும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

# இராணுவச்...

நேற்று முன்தினம் இரவு தனது கடமைகளை முடித்து விட்டு உறக்கத்திற்கு சென்ற இராணுவச் சிப்பாய் நேற்றுக் காலை உறக்கத்தில் இருந்து எழும்பவில்லை.

இதனையடுத்தே குறித்த இராணுவச் சிப்பாய் உறங்கிய அறைக்கு ஏனைய இராணுவச் சிப்பாய்கள் சென்றுள்ளனர்.

அச்சம்பவம்மேற்படி இராணுவச் சிப்பாய் இறந்த நிலையில் காணப்பட்டார்.

உடனடியாகக்குறி[illegible] இராணுவச் சிப்பா[illegible]னது சடலம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைககு ஏனையஇராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டு பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதேவேளை குறித்த இராணுவச் சிப்பாய் மாரடைப்பின் காரணமாகவே இறந்துள்ளார் என வல்வெட்டித்துறை மரண விசாரணை அதிகாரி துகிந்தர சிங்கம் தெரிவித்துள்ளார்.

இதில் அம்பாறையைச் சேர்ந்த திஸநாயக்க (வயது 27) என்ற இராணுவச்சிப்பாயே இறந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. (செ-5,60)


O/L உடன் 30,000/= உடன் ஆரம்பித்து
சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில்
மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்க
Business & Hotel Management With ENGLISH COURSE
புதிய பிரிவு ஆரம்பம்
Leading to University of Sunderland UK (C-2482)
கற்கைநெறிக் காலத்தில் ரூ.15,000 வரை வருமானம்

6 மாதங்களில் விரும்பிய நாடு வெல்லும்
100% உத்தரவாதம்
SIKARAM Any Visa to Any Country
மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk
இதுவரை கற்கைநெறியில் இணைந்த 13 பேருக்கு வெளிநாட்டு விசா ஏற்பாடு
MONEY BACK 100% GUARANTEE
3 மாதங்களில் ஆங்கிலத்தில் பேசும் திறன் & தொழில்வாய்ப்பு பெறும் உத்தரவாதம்
077 36 16 798, 021 222 0011
Sikaram School of Hospitality & English
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m



ஆட்டோ திருத்துனர் தேவை
கிளிநொச்சி ஆனந்தபுரம் மின்சார நிலையம் முன்பாக உள்ள எமது V.N வெதுப்பகத்துக்கு நிரந்தரமாக தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஆட்டோ திருத்துனர் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்புகளுக்கு :- V.N வெதுப்பகம் ஆனந்தபுரம், கிளிநொச்சி.
T.P: 0772767111
(C-2479)



2016 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கும் பெற்றோருக்குமான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு (தற்பொழுது தரம் 4)
இடம் :- ராஜாராணி சேவை இல்லம் 4ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.
காலம் :- 18/10/2015
நேரம் :- பி.ப 4.00 - 6.00 வரை
வளவாளர்கள் :-
N.சுந்தா (Dip.in Teaching primary spl) ( DVD ஊடாக தரம் 5 மாணவர்களுக்கு கற்கை விளக்கம் வழங்கும் இலங்கையின் ஒரே ஒரு ஆசிரியர் 2013ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் முதலிடம் பெறச் செய்த சாதனை ஆசிரியர்)
T.பிரஜாபதி (Dip.in Teaching primary spl) (2015ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் முதலிடம் பெறச் செய்த சாதனை ஆசிரியர்)
S.நிஷாந்தன் (Dip.in Teaching primary spl) (வடமராட்சியின் முன்னணி ஆசிரியர்)
(2086)



BRITISH COLLEGE OF HIGHER STUDIES
வழங்கும்
After AL What Next ?
உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற
பல்கலைக் கழகமா? உயர்கற்கை நெறியா? புதிய தொழில் வாய்ப்பா?
உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரே வழி
அதை மேம்படுத்துவதே எமது நோக்கு
Spoken English with Grammar 1½ Months
100% பயிற்சி
சர்வதேசத் தரம் கொண்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கி மிகவும் இலகுவான விளக்கங்களுடன் அனைவருக்கும் பயனுள்ள வகையில் கற்பிக்க வகை செய்திருக்கின்றோம். ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே இந் நெறி நடாத்தப்படுகிறது. மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும்ஆங்கிலம் கற்க
100% வெற்றி
Diploma In English 2½ Months
ஒரு தொழில் தேடுவதாயினும், உயர் கல்வியினைத் தொடருவதாயினும், ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதுள்ளது. இவை யாவையும் கருத்தில் கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கபடுகிறது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.
★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திறக்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
★ எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
★ Excellent Teachers' Panel & Individual Attention
★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
★ ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்கட்கு தனிப்பட்ட கவனமும், கூடுதல் பயிற்சிகளும் வழங்கப்படும்
Spoken English with Grammar Rs.10'000 Rs.7'500
Diploma in English Rs.14'000 Rs.9'500
Batches Start On
19.10.2015 @ 9.00 am
20.10.2015 @ 9.00 am
21.10.2015 @ 2.00 pm
22.10.2015 @ 9.00 am
23.10.2015 @ 9.00 am
(C-2480) BCHS
No.15, Chirambiyady Lane (off Stanley Road), Jaffna (Near Ariyakulam & Above Sathosa SM)
Tel : 021-2224550, 0777222422,0776555677




இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
அலட்சியம் வேண்டாம் நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்
!!! அமெரிக்க லொத்தர் விசா
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம். இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு குடும்பத்துடன் விண்ணப்பிப்பவர்கள் 2 தடவை விண்ணப்பிக்கலாம்(இரட்டிப்பு வாய்ப்பு)
பங்களாதேஸ், இந்தியா,பாகிஸ்தான் போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகம்
எமது அலுவலகங்களுக்கு நேரில் வந்து விண்ணப்பிப்பவர்களுக்கு உடனடியாகவே உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கப்படும்.
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு தினங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்
யாழ்ப்பாணம். 49A,சப்பல் லேன், 0768226241
கிளிநொச்சி -A9 வீதி, 0768226240
Y2 TRAVELS
நெல்லியடி. 0776699892
வல்வெட்டித்துறை. யாழ் வீதி,வல்வெட்டி, 0776697960
இன்னும் ஒருசில தினங்களில் பதிவுகள் நிறைவடைகின்றன. இறுதி சந்தர்ப்பம்-உடனே விரையுங்கள்

(C-2450)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.